

கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்
# உங்கள் நூலகம்


**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 10 இதழ் - 8 - நவம்பர் - 2018*

கௌரவ ஆசிரியர்
முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்
**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு
*எஸ்.சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி.சரவணன்*

இதழ் வடிவமைப்பு
*ஞா.சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## பொருளடக்கம்


படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன் - 4

தமிழ் நாடக வளர்ச்சிப் போக்கில்
ந.முத்துசாமி நாடகங்களின் வகிபாகம்
மு.இராமசுவாமி - 11

சென்னையில் வ.உ.சி.க்கு
சிலை வைக்கப் போராடிய துயர வரலாறு
ம.பொ.சி. - 23

பண்டைய கால மகளிர் நோய், மகப்பேறு மருத்துவம்
டாக்டர் சு.நரேந்திரன் - 29

மலைப்புலயர் சொன்ன கோவலன் - கண்ணகி கதை
ஆ.கார்த்திகேயன் - 43

சா.கந்தசாமியின் சாயாவனமும் சாய்ந்தவனமும்
கி.இரா.சங்கரன் - 49

புரட்சியின் திரைக்கதை
குருசாமி மயில்வாகனன் - 53

காந்தியம் தோற்றுவிட்டதா?
உதயை மு.வீரையன் - 57

மதவெறி பாசிசத்திற்கு எதிரான ''உரிமைக்குரல்''
எல்லை சிவக்குமார் - 61


அரியதொரு ஆவணம்
பிரசன்னா கார்த்திகேயன் - 66

கல்திட்டை அல்லது கல்பதுக்கை
முனைவர் கோ.ஜெயக்குமார் - 69



# படித்துப் பாருங்களேன்...

## ஆ. சிவசுப்பிரமணியன்




**திராவிட ஆட்சியில் அரசியல் சமூக அசைவுகள்**
எஸ்.நாராயணன் (2018)

**Dravidian Years: Politics and Welfare in Tamilnadu**
S.Narayan (2018)

சென்ற இதழின் தொடர்ச்சி...

1967 இலிருந்து 77 வரையிலான பத்தாண்டு கால ஆட்சியில் ஒடுக்கப்பட்டோரின் நலன் காக்கும் அரசாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டதோடு நல்ல பெரும்பான்மை கொண்ட கட்சியாகவும் சட்ட மன்றத்தில் தி.மு.க. விளங்கியது.

ஆயினும் தி.மு.க.வுக்கு எதிரான கருத்து நிலையும் வளரத் தொடங்கியது. செருக்குடன் கூடிய அதிகாரத்தன்மை, ஆளும் கட்சியிடம் வெளிப் படுவதாக மக்களில் ஒருசாரார் எண்ணத் தொடங்கினர். சமூக நீதிக்கான செயல்பாடுகளில் சமச்சீர்தன்மை இன்றி, பின்தங்கிய வகுப்பினரில், உயர்மட்டத்தினரே அதன் பயன்களை நுகர்கிறார்கள் என்ற முணு முணுப்பும் எழத் தொடங்கியது.

மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கும் நலத் திட்டங்கள் சென்றடைய வேண்டும் என்ற வேண்டுகோள்களும் எழுந்தன. மேலும் கட்சி நிர்வாகிகள், அமைச்சர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோர் மீது, கையூட்டு வாங்குதல், உறவினர்களுக்குச் சலுகை வழங்குதல் ஆகியன நிலவுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

உள்ளூர் அளவிலும் மாவட்ட அளவிலும் கட்சி நிர்வாகிகளின் தலையீடு அரசு நிர்வாகத்தில் இடம் பெறுவதாகவும் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. காவல் துறையினரால் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும்படி காவல்நிலையங்களில் தலையீடு நிகழ்ந்தது. அரசு ஒப்பந்தங்கள், பதவி நியமனம், அரசு நிர்வாக முடிவுகள் ஆகியனவற்றில் மாவட்டச் செயலாளர்களின் தலையீடு இருந்தது. வீராணம் ஏரியின் தண்ணீரை சென்னை நகரின் குடிநீர்த் தேவைக்குக் கொண்டு வரும் திட்டத்தில் சோதித் தறியாத தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

* * *

1975-இல் கொண்டு வரப்பட்ட அவசர நிலையை உறுதிபட எதிர்த்தமைக்காக இந்திரா காந்தியால் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. சர்க்காரியா என்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை ஆணையம் ஒன்று. தி.மு.க ஆட்சியின் ஊழல்களை விசாரிக்க நிறுவப்பட்டது.

**எம்.ஜி.ஆரின் தனிக்கட்சி**

கட்சியின் வரவு செலவு கணக்குகளைக் கேட்டமையால் தி.மு.க.வில் இருந்து எம்.ஜி.ஆர் நீக்கப்பட்டார். அவர் நீக்கப்பட்டதையடுத்து குறிப்பிடத்தக்க அளவில் பெண்களும் இளைஞர்களும் எம்.ஜி.ஆரின் பின்னால் அணிதிரளலாயினர்.

தன்செல்வாக்கை அறிந்து கொண்ட எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. கட்சியைத் தொடங்கினார். அவர் நடித்த ‘பட்டிக்காடா பட்டணமா’ (1973), ‘உரிமைக்குரல்’ (1974), ‘நேற்று இன்று நாளை’ (1975), ‘மீனவ நண்பன் (1977) என்ற படங்கள் அடுத்தடுத்து வெளியாகி, அடித்தளத் தமிழர்களிடம் அவரது செல்வாக்கை உயர்த்தின. எம்.ஜி.ஆர். என்ற தனிமனிதனின் பிம்பத்தை பொதுவெளியில் வளர்ப்பதில் இத்திரைப்படங்கள் துணை நின்றன.

அவர் தி.மு.க.வில் இருந்தபோதே தன்னுடைய பிம்பத்தைக் கட்சியுடன் இணைத்துக்கொள்ளவில்லை. தனித்துவமான நாயகனாகவே தன்னை அவர் வெளிப்படுத்திக் கொண்டதுடன், இயற்கைச் சீற்றங்கள், விபத்துக்களின்போது அவர் வெளிப்படையாக அறிவித்த நன்கொடைகள் வாயிலாகவும் மக்களிடையே தன் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொண்டார்.

தான் நடித்த படங்கள் வாயிலாக, உயரிய இலட்சியங்கள் கொண்டவராக தம்மை வெளிப்படுத்திக் கொண்டதில் எம்.ஜி.ஆர். வெற்றியடைந்தார். தாம் எதிர்நோக்கியிருந்த ஒரு தலைவரின் வடிவமாகவே மக்கள் எம்.ஜி.ஆரை நோக்கினர்.

ஏ.பி. மாதூர் என்ற ஆய்வாளர் அ.இ.அ.தி.மு.க குறித்துக் குறிப்பிடும்போது, தமது தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாக கேள்விகளுக்கு அப்பாற்பட்ட ஒரு தலைவராக எம்.ஜி.ஆர். விளங்கினார் என்கிறார். மேலும் அவரது சொற்களே சட்டமாகவும், அவரது விருப்பமே கட்டளையாகவும், அவரது ஆதரவாளர்களால் பார்க்கப்பட்டன என்கிறார். அத்துடன் நடிகன் என்ற அவரது பிம்பமானது, ஏழைகளின் நண்பனாக அவரைப் பார்க்கச் செய்து, அவர்களது நாயகனாகக் காட்டியது என்கிறார்.

* * *

பொதுவாக, அ.தி.மு.க.வின் பார்வையிலும் குறிப்பாக எம்.ஜி.ஆரின் பார்வையிலும் அரசுப் பணித்துறையானது, பகையுணர்ச்சிக்குரியதாகவே விளங்கியது. கட்சி அல்லது ஆட்சியின் தவறுகள் அதிகாரவர்க்கத்தின் தவறுகளாகவே வெளிப்படுத்தப்பட்டன. அவர்களது ஆற்றல்கள் பொது மக்கள் முன்பு, குறைத்தே மதிப்பிடப்பட்டன. அரசுச் செயலகத்தின் செயல்பாடுகள் மீது குறைந்த அளவிலான நம்பிக்கையே அவருக்கு இருந்தது. கோப்புகளின் மீது அவர் எழுதும் குறிப்புகள் சிக்கலானவையாக இருந்தன. ஆராயவேண்டிய செய்திகளின் எல்லை கடந்த பேரவாவை அவை வெளிப்படுத்தின. தீர்வாகச் செயல்பாடுகளின் மீது பொறுமை குன்றியவராகவே அவர் விளங்கினார்.

* * *

இதே காலத்தில் பின்தங்கிய சாதியின்கட்சி என்ற அடையாளத்தை தி.மு.க. இழக்கத் தொடங்கியது. திராவிட இயக்கத்திற்குரிய சமூக சீர்திருத்தங்களை அது அறிமுகப்படுத்தியிருந்த போதும், மிகவும் பின்தங்கிய சாதியினர், ஏழைகள், அட்டவணை சாதியினர் ஆகியோரிடம் இருந்து அது விலகி நிற்பது போன்ற தோற்றம் உருவாயிற்று.

ஆனால் எம்.ஜி.ஆரின் செயல்பாடுகள் சாதிய எல்லைகளைக் கடந்து ஏழைகளையும், பெண்களையும் ஈர்த்தது. 1977-இல் அவர் அருப்புக் கோட்டைத் தொகுதியில் வேட்பாளராகப் போட்டி

யிட்ட போது இந்நூலாசிரியர் மாவட்ட ஆட்சி யாளராகப் பணிபுரிந்துள்ளார். தேர்தல் பணியின் பொருட்டு எம்.ஜி.ஆர். அங்கு வரும்போது, அவருடனும், அவரது நெருங்கிய சகாக்களுடனும் கலந்துரையாடும் வாய்ப்பு இந்நூலாசியருக்குக் கிடைத்துள்ளது. மேலும் மாவட்ட நிர்வாகி என்ற அடிப்படையில் அவருக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய கடமையும் அவருக்கிருந்தது. இவ்வனு பவங்களின் அடிப்படையில் அவர் பின்வரும் மதிப்பீடுகளை முன்வைத்துள்ளார்.

- ஏழைகளின் பக்கம் நின்று அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பவர் என்ற திரைப் படப் பிம்பத்தில் இருந்து வெளிவரும் முயற்சியில் முதல் இரண்டாண்டுகள் ஈடுபட்டார்.
- பின்னர் அரசின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் என்ற பாத்திரத்தை வகிக்க அவர் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார்.
- கிராமப்புற மக்கள் அவர்மீது அளவு கடந்த மதிப்புக் கொண்டிருந்தார்கள்.
- உரியநேரம் கடந்து அவர் பொதுக்கூட்டங் களுக்கு வந்தபோதிலும் 8000இல் இருந்து 10,000 வரையிலான மக்கள் கூட்டம் அவரது வருகைக்காகப் பொறுமையுடன் காத்திருந்தது.
- அவர் முதலமைச்சரான பின்னர், அம் மாவட்டத்திற்கு வரும்போது ஏழைகளுக்கு நலத்திட்டங்கள் வழங்குதல் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும்.
- வறுமையை அனுபவித்தவர் என்ற முறையில் ஏழைகளைக் குறித்து அவர் சிந்தித்தார்.

★★★

தி.மு.க.வின் பரவலான பத்திரிகைப் பலத்திற்கு முன் அ.தி.மு.கவின். 'அண்ணா' நாளேட்டால் ஈடு கொடுக்க முடியவில்லை. பொது மேடைப் பேச்சாளி என்ற முறையில் எம்.ஜி.ஆரால் கருணாநிதிக்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இக்குறைபாடுகளைத் தாம் நடித்த திரைப்படங்களின் வாயிலாக அவர் ஈடுசெய்துகொண்டார்.

அ.தி.மு.க. கட்சியின் அமைப்பானது தி.மு.க. வுடன் ஒப்பிடும்போது நெகிழ்ச்சியான தன்மை கொண்டதாகவே இருந்தது. எம்.ஜி.ஆருடன் நெருக்கம் கொண்டிருந்த அமைச்சர்கள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே அதிகாரம் படைத்தவர்களாக விளங்கினர். முதலமைச்சரின் அலுவலகமே முக்கியத்துவம் கொண்டதாக விளங்கியது. ஜெயலலிதாவின் ஆட்சியிலும் இந்நிலை தொடர்ந்தது.

### இட ஒதுக்கீடு

இட ஒதுக்கீடா? ஏழைகளின் முன்னேற்றமா? என்ற பிரச்சினையில் எம்.ஜி.ஆர். ஏழைகளின் முன்னேற்றம் என்ற நிலைப்பாட்டை எடுத்தார். இவ்வகையில் பின்தங்கிய சாதியினரின் நலனைவிட ஏழைகளின் நலனையே முன்நிறுத்தினார்.

இடஒதுக்கீட்டில் பொருளாதார நிலையை இணைப்பதாக 1979-இல் அவர் அறிவித்தார். சாதி அமைப்புகள் தெருவில் இறங்கி இதற்கு எதிராகப் போராடியதும் அவர் தம் அறிவிப்பைத் திரும்பப் பெற்றார். அத்துடன் பிற்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீட்டை 31 விழுக்காட்டில் இருந்து 50 விழுக்காடாக உயர்த்தினார்.

### உழவர் போராட்டம்

அ.தி.மு.க. ஆட்சியின் போது பின்வரும் வேண்டு கோள்களை முன்வைத்து உழவர் போராட்டங்கள் நிகழலாயின.

- நெல் கொள்முதல் விலையை உயர்த்துதல்
- வேளாண்மைக்கான மின்கட்டணத்தைக் குறைத்தல்
- வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்தல்

இவற்றுள் பலவற்றை ஏற்றுக்கொண்டதுடன் பெருவிவசாயிகள், சிறுவிவசாயிகள் எனப் பாகு படுத்தி, போராடியவர்களிடம் பிளவை ஏற்படுத்தினார்.

### நலிந்தோர் நலம்

1977இல் இருந்து 1987 வரையிலான காலத்தில் நலிந்தோரை முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட திட்டங்கள் முன்னுரிமை பெற்றன. வேளாண்மை கால்நடை வளர்ப்பு, தொழில் வளர்ச்சி என்பன புறக்கணிப்புக்கு ஆளாயின. பெண்களுக்கும் வறியவர்களுக்கும் உதவும் வகையிலான திட்டங்கள் அறிமுகமாயின.

### சுயநிதிக் கல்வி நிறுவனங்கள்

1980இல் இருந்து 1985 வரையிலான காலத்தில், தொழில்நுட்பக் கல்வி வழங்குதலை விரிவுபடுத்து வதில் மத்திய, மாநில அரசுகள் பொருளாதாரச் சிக்கலை எதிர்கொண்டன. இதை எதிர்கொள்ளும் வகையில், கர்நாடகம், மகாராஷ்டிரம், தமிழ்நாடு, ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் சுயநிதிக் கல்வி நிறுவனங்களை நிறுவ அனுமதி வழங்கின.

பின்னர், கலை அறிவியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி என சுயநிதிக் கல்வி நிறுவனங்கள்

விரிவடைந்தன. தொடக்கத்தில் அரசுப் பல்கலைக் கழகங்களுடன் இணைந்திருந்த இக்கல்வி நிறுவனங்கள் தன்னாட்சி பெற்ற கல்வி நிறுவனங்களாக மாறின.

இவை நிறுவுவதற்கான நிலம், மூலதனம், உள் கட்டமைப்பு என்பனவற்றில், தொடக்கத்தில் சிலர் முதலீடு செய்தனர். இவர்களுள் சிலர் அரசியல் வாதிகளாக இருந்தனர். இன்று தமிழ்நாட்டில் 600 பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றுள் பெரும் பாலானவை முன்னாள், இன்னாள் அரசியல்வாதி களால் நடத்தப்படுபவை. இந்தியாவில் உள்ள மாநிலங்களில், செயல்படும் பொறியியல் கல்லூரி களின் எண்ணிக்கையில் 2008-2009ஆம் ஆண்டில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. வழங்கப்படும் கல்வியின் தரம் வாங்கப்படும் கட்டணம் தொடர்பாக சில விமர்சனங்களும் உண்டு.

1980-1981க்கும், 1990-91க்கும் இடைப்பட்ட காலத்தில் உயர்கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை யானது 382இல் இருந்து 624ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் பயில்வோரின் தொகை 1.9 இலட்சத்தில் இருந்து 3.6 லட்சமாக உயர்ந்துள்ளது.

பொறியியல் கல்லூரிகள் உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமின்றி ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள், தனியார் பள்ளிகள், வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனங்கள் என்பன தனியார் துறையில் வேகமாக வளர்ச்சி பெற்றுள்ளன. இவ்வளர்ச்சியானது இரண்டு வகையில் முக்கியத்துவம் கொண்டது.

முதலாவதாக, உயர்கல்வியில் மாநில அரசு முதலீடு செய்வதை விடுவித்துள்ளது. இப்பணத்தை நலத்திட்டங்களில் முதலீடு செய்ய உதவுகிறது.

இந்நிறுவனங்களின் உரிமையாளர்கள் பெரும் பாலும் சமூகத்தில் நன்கு அறியப்பட்டவர்களாகவோ, அரசியல்வாதிகளாகவோ உள்ளனர். பொருளாதார வளர்ச்சிக்கு அரசியல் உதவும் என்பதைச் சுட்டிக் காட்டுவதாகவே இது அமைகிறது.

இரண்டாவதாக கிராமப்புற மக்கள் உயர்கல்வி பெற இது உதவுகிறது. அரசு வேலைவாய்ப்புக் களுக்கான நுழைவாயிலாகக் கல்வி அமைகிறது. இட ஒதுக்கீட்டு முறையானது ஏழைகள், பிற்பட்ட வகுப்பினர் அரசு, அரசு சார்ந்த நிறுவனங்களில் சேர துணைநிற்கிறது. கிராம மக்களிடையே கல்வி கற்றோரின் எண்ணிக்கை அதிகரிப்பானது தம் சாதியப் படிநிலையில் இருந்து உயர்த்திக் கொள்ள கிராமமக்களுக்கு உதவியுள்ளது. மேலும் 1981இன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 54.4 விழுக்காடாக இருந்த கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் 62.66 ஆக உயர்ந்துள்ளது. ஆயுட்காலம் ஆண்களுக்கு 57.4 விழுக்காடு பெண்களுக்கு 58.4 விழுக்காடு என எட்டியுள்ளது.

**நண்பகல் உணவுத்திட்டம்**

எம்.ஜி.ஆர். ஆட்சியின் முக்கிய சாதனையாகக் கூறப்படுவது அவர் அறிமுகம் செய்த சத்துணவுத் திட்டமாகும். இத்திட்டத்தை 1982 மார்ச் 26 அன்று சட்டமன்றத்தில் நிதி அமைச்சர் இரா.நெடுஞ்செழியன் அறிவித்தார். தொடக்கத்தில் முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் என்று இது அழைக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் தமிழ்நாடு அரசின் நண்பகல் சத்துணவுத் திட்டம் என்று மாற்றப்பட்டது. ஜெயலலிதா ஆட்சியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். நண்பகல் சத்துணவுத் திட்டம் என்றாயிற்று. மதிய உணவுத் திட்டத்தின் நோக்கம் குறித்து எம்.ஜி.ஆரின் கூற்று அத்திட்டத்தின் மீது அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

சிறுவயதில் பட்டினியால் தாம் பட்ட அவதியையும், அழுகையின் வாயிலாகவே பசியுணர்வை வெளிப்படுத்தியதாகவும், அண்டை வீட்டுப் பெண் ஒருத்தி வழங்கிய குருணைக் கஞ்சி வாயிலாகவே தாம் உயிர்பிழைத்ததாகவும் அவர் குறிப்பிட்டார். இதுபோன்று இரக்கவுணர்வு கொண்ட பெண்கள் தமக்கு வாக்களித்து, தம்மை முதல்வர் ஆக்கியுள்ளதாகவும், அவர்களது கண்ணீரைத் துடைக்கவே தாம் இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி யுள்ளதாகவும் குறிப்பிட்டார். தமிழ்நாட்டில் வாழும் இலட்சக்கணக்கான குழந்தைகள் சத்துணவைப் பெற்று, தங்களை வாழ்த்துவது பெருமைக்குரிய நிகழ்ச்சி என்றும் அவர் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின்படி 20,747 குழந்தைகள் நல மையங்களின் வாயிலாகவும், 32,470 தொடக்கப் பள்ளிகளின் வாயிலாகவும், 2 முதல் 10 வரையிலான வயதுக் குழந்தைகள் 1982, ஜூலை 1 முதல் 400 கலோரி அளவிலான சத்துணவைப் பெறலாயினர்.

**சத்துணவுத்திட்டத்தின் அரசியல் தேவை**

1977-இல் நடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. தமிழக ஆட்சியைப் பிடித்தது. 1977-இல் இருந்து 1980 வரையிலான காலத்தில் காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியை இழந்திருந்தது. ஜனதாக் கட்சிக்கும், பின்னர் சரண்சிங்கிற்கும் அ.தி.மு.க. மத்திய ஆட்சியில் ஆதரவு அளித்தது. மத்திய ஆட்சியில் இரண்டு அ.தி.மு.க. கட்சியினர் அமைச்சர் களாகப் பதவி வகித்தனர். சனவரி 1980-இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து காங்கிரஸ் போட்டியிட்டது. தேர்தலில்

வெற்றி பெற்று மத்தியில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தது. தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் அ.தி.மு.க. மிகவும் மோசமான தோல்வியை எதிர்கொண்டது.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வின் செல்வாக்கு மறைந்துவிட்டதாகக் கருதிய தி.மு.க. தமிழ்நாடு சட்டமன்றத்தைக் கலைத்து ஆளுநர் ஆட்சியை அறிமுகம் செய்யும்படி காங்கிரஸ் கட்சியை வற்புறுத்தலாயிற்று.

ஏற்கனவே அலகாபாத் தொகுதியை இழந்திருந்த இந்திராகாந்திக்கு தஞ்சை மாவட்டத்தில் பாதுகாப்பான தொகுதி ஒன்றை வழங்குவதாக வாக்களித்த எம்.ஜி.ஆர், மத்திய அரசின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும் என்று கருதி தன் வாக்குறுதியில் இருந்து பின் வாங்கியிருந்தார். இதனால் கர்நாடகத்தில் உள்ள சிக்மகளூர் தொகுதியில் போட்டியிட்டு இந்திராகாந்தி வென்றார். இதனால் ஏற்பட்ட மன வேறுபாடு, நீங்காத நிலையில் தி.மு.க.வின் வேண்டுகோளை ஏற்று அ.தி.மு.க. ஆட்சியை இந்திராகாந்தி கலைத்தார்.

இதன் பின்னர் மே 1980-இல் நிகழ்ந்த சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளில் 162 தொகுதிகளில் அ.தி.மு.க. வெற்றி பெற்றது. தி.மு.க.வும் காங்கிரசும் இணைந்து போட்டியிட்டதில் 69 தொகுதிகளிலேயே வெற்றி பெறமுடிந்தது. அதே நேரத்தில் நாடாளுமன்றத்தின் மக்களவையில் தி.மு.க.வுக்கு 24 உறுப்பினர்கள் இருந்தனர். அ.தி.மு.கவுக்கு ஒரு உறுப்பினர் கூட இல்லை. இத்தகைய அரசியல் சூழலில் தன்னுடைய வாக்கு வங்கியைக் குறிப்பாக கிராமப்புற நலிந்த பிரிவினரிடம் வலுப்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டது.

★★★

1971 ஆவது ஆண்டில் கருணாநிதி மது விற்பனையை அனுமதித்தார். எம்.ஜி.ஆர் அதை விரும்பவில்லை. 1974-இல் மீண்டும் மதுவிலக்கைக் கருணாநிதி அறிமுகம் செய்தார். 1981 இல் எம்.ஜி.ஆர் மதுவிலக்கை ரத்து செய்து மது விற்பனையை அனுமதித்தார். மது உற்பத்தியாளர்களுடன் அரசு கூட்டணி வைத்திருப்பதாகக் கூறி தி.மு.க. இதை எதிர்த்தது. மக்களிடையே குறிப்பாகக் கிராமப்புற பெண்களிடம், மது விற்பனை அறிமுகம் செய்யப்பட்டதற்கு எதிரான கருத்து உருவானது.

மாநில அரசின் வருவாயில் மதுவிற்பனை முக்கிய இடத்தைப் பெற்றுவிட்ட நிலையில் மது விலக்கை நடைமுறைப்படுத்த இயலாத சூழல் உருவாகி விட்டது. மற்றொரு பக்கம் மது விற்பனை மீதான தடை நீக்கத்தை கிராமப்புறப் பெண்கள் விரும்பவில்லை.

இச்சிக்கலை எதிர்கொள்ளும் வழிமுறையாக, சத்துணவுத் திட்டம் அமைந்தது. மது விற்பனை அனுமதி வருவாய் ஈட்டித் தர, அவ்வருவாயின் ஒரு பகுதியில் இருந்து மேற்கொள்ளப்படும் சத்துணவுத் திட்டம் வாக்கு வங்கியை தக்கவைக்க உதவியது. இவ்வுண்மையை அவரை அடுத்து வந்த ஜெயலலிதாவும் உணர்ந்திருந்தார்.

★★★

சத்துணவுத் திட்டத்தின் தேவையை வலியுறுத்தும் வகையில் வேறு சில உண்மைகளும் இருந்தன. பன்னாட்டு வளர்ச்சித் தொடர்பான அமெரிக்க அமைப்பு (USAID) தமிழ்நாட்டு மக்களின் சத்துணவில் இடம் பெறும் சத்துக்கள் குறித்த விரிவான ஆய்வை 1960-இன் இறுதியில் மேற்கொண்டது. இந்தியாவின் முக்கிய மாநிலங்களைவிட தமிழ்நாட்டில் தனி மனிதனுக்கான கலோரி அளவு குறைவாக உள்ளதாக இவ் ஆய்வு வெளிப்படுத்தியது. இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளிடமும், வளர் இளமைப் பருவத்தினரிடமும் (13க்கும் 17க்கும் இடைப்பட்ட வயதினர்) இப்பற்றாக்குறை அதிக அளவில் காணப்படுவதாக இவ் ஆய்வு சுட்டிக் காட்டியது.

உலக வங்கியின் அறிக்கை ஒன்று சத்துணவுப் பற்றாக்குறை தமிழ்நாட்டில் அதிக அளவில் காணப்படுவதாகக் குறிப்பிட்டது.

அத்துடன் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் சத்துணவுத் திட்டம் தொடர்பாக சில மதிப்பீடுகளையும் வைத்தது.

இச் செய்திகளுடன் உலக அரங்கில் இது போல் உருவான திட்டங்கள் குறித்தும், இந்தியாவின் பிற மாநிலங்களில் செயல்படும் இதனையொத்த திட்டங்களையும் நூலாசிரியர் அறிமுகம் செய்துள்ளார்.


விடுதலைப் போராட்ட வீரர், காந்தியவாதி, பகுத்தறிவுவாதி, இறை மறுப்பாளர் என்ற அடையாளங்களைக் கொண்ட கே.திரவியம் அரசின் தலைமைச் செயலாளராக இருந்து இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஆற்றிய பங்களிப்பு குறித்தும் விரிவாக இந்நூல் குறிப்பிடுகிறது.

கடந்த 35 ஆண்டுகளாக இத்திட்டம் செயல்படுவது குறித்த கல்விப் புல இதழ்களின் மதிப்பீட்டையும் இத்திட்டம் செயல்படும் முறை குறித்த நுணுக்கமான செய்திகளையும் இந்நூலில் ஆசிரியர் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

சமூக நலத்திட்டம் ஒன்றின் பின்னால் இடம் பெற்றுள்ள அரசியல் குறித்த அறிவுப்பூர்வமான ஆய்வை மேற்கொள்வதில் நூலாசிரியர் வெற்றி பெற்றுள்ளார்.

- தொடரும்

# நியூ செஞ்சுரியின் பெரியாரிய நூல்கள்...




பசு. கவுதமன் தொகுத்தளிக்கும்
பெரியாரின் எழுத்துகளுக்கான செம்பதிப்பு

## “நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வர வேண்டும்?”

## பெரியார் ஈ.வெ.ராமசாமி

மொழி, கலை, பண்பாடு, இலக்கியம், தத்துவம் பற்றிய தொகுப்பு


**3770 பக்கங்கள் அடங்கிய ஐந்து தொகுதிகள் ₹ 4800/-**

---

எஸ்.வி.ராஜதுரை - வ.கீதா எழுதிய


## பெரியார்: சுயமரியாதை சமதர்மம்

இந்திய மக்களின் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் அச்சுறுத்தலை உருவாக்கிக் கொண்டிருக்கும், தமிழ் மக்களின் மொழி, பண்பாட்டு, சமூக, அரசியல் பொருளாதார நலன்களைத் துடைத்தெறிய பேயாட்டம் ஆடிக்கொண்டிருக்கும் போலி சந்நியாசிகளின் குண்டாந்தடி பாசிசத்தை எதிர்த்து நிற்க, ஊன்றி நிற்பதற்கு மட்டுமே கைத்தடிகளைப் பயன்படுத்திய அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் ஆகியோர் நமக்கான வலுவான கருத்தாயுதங்களாக இருப்பர்.




**₹ 900/-**

---




## பெரியார் என்னும் இயக்கம்

**தா.பாண்டியன்**

பெரியார் என்பவர் தனியொரு மனிதர். அவரது வாழ்வு ஒரு பேரியக்கமாகும். உலகுக்கே தன்வாழ்க்கைச் செயல்பாட்டில் வழிகாட்டும் பெரியார் காலங்களைக்கடந்து என்றென்றைக்கும் தேவைப்படும் ஞானசூரியன் என்பதை வலியுறுத்துகிறது இந்நூல்

**₹ 80/-**

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

புதிதாக வெளிவரும்
மதிப்பார்ந்த தமிழ், ஆங்கில
நூல்களுக்கான
அறிமுகங்கள், விமர்சனங்கள்...

கலை
இலக்கியம்
அரசியல்
தத்துவம்
மொழியியல் சார்ந்த
விவாதக் கட்டுரைகள்...

போன்றவற்றுடன்
பத்தாண்டுகளாக
தமிழில்
தொடர்ந்து வந்துகொண்டிருக்கும்
மாத இதழ்

ஆ. சிவசுப்பிரமணியன்
எஸ். வி.ராஜதுரை
ந. முத்துமோகன்
வீ. அரசு
எஸ். தோதாத்ரி
அ. மார்க்ஸ்
டாக்டர் நரேந்திரன்
நா.ராமச்சந்திரன்
வ. கீதா
தி. சு. நடராசன்
யமுனா ராஜேந்திரன்
ராஜ் கௌதமன்
இரா. காமராசு
கி.ரா. சங்கரன்
ந. முருகேசபாண்டியன்
முதலான
மார்க்சிய, பெரியாரிய
சிந்தனையாளர்கள்,
கல்விப்புலம் சார்ந்த அறிஞர்கள்,
இலக்கிய ஆளுமைகளின்
பங்களிப்பில் காத்திரமாக
வெளிவந்துகொண்டிருக்கும்
மாத இதழ்

**தனி இதழ் ரூ. 30/-**
**ஆண்டுச் சந்தா ரூ. 360/-**
**மாணவர்களுக்கான சிறப்புச் சந்தா ரூ. 300/-**
**ஆயுள் சந்தா ரூ. 3000/-**

**சந்தா தொகையை New Century Reader's Sangam**
**என்ற பெயரில் அனுப்பலாம்**

New Century Readers Sangam | Central Bank of India, Ambattur
A/C No. 1035249018 | IFSC: CBINO282161



# தமிழ் நாடக வளர்ச்சிப் போக்கில் ந.முத்துசாமி நாடகங்களின் வகிபாகம்

மு.இராமசுவாமி

ந. முத்துசாமியின் நாடகங்கள்/ நாடகச் செயல் பாடுகள் பற்றிய இக்கருத்துகள் 1996-97 ஆண்டுகளில் நான் சேகரித்த தகவல்களைக் கொண்டு 1998-99 வாக்கில் நான் எழுதி, அப்பொழுது அங்கொன்றும் இங்கொன்றுமாய் அச்சாகியவை. ஆனால், இன்று வரையும் அந்த எழுத்துகள் எவரிடமும் போய்ச் சேர்ந்ததாக எனக்கு நினைவில்லை. ஆயினும் இப்போது கருணாபிரசாத் வழங்கியிருக்கும் இந்தத் தலைப் பிற்கும் அப்போதைய அந்த எழுத்திற்கும் பூர்த்தி யாகாத ஒரு தொடர்பு, இன்னமும் இருந்து கொண்டிருப்பதாக எனக்குப் படுவதால், அந்த எழுத்தின் பகுதிகள் வெட்டி ஒட்டி, சில பகுதிகள் சேர்த்து இங்குக் கட்டுரையாக்கப்பட்டிருக்கின்றன. 30-05-2015 அன்று சென்னையில் போதிவனம் வெளியிட்ட 'ந. முத்துசாமி நாடகங்கள்' நூல் வெளியீட்டின்போது, ந. முத்துசாமி முன்னிலையில், அவையோர்முன் இக்கட்டுரை வாசிக்கப் பட்டது. இக்கட்டுரையின் கருத்துகளோடு ந.முத்துசாமி முழுக்கவும் உடன்பட்டிருந்தார் என்றே நண்பர்கள் அப்பொழுது கருத்துக் கூறினர். தற்பொழுது 2018 அக்டோபர் 24 இல் ந. முத்துசாமி காற்றோடு கரைந்திருக்கிற நிலையிலும் இந்தக் கட்டுரை அவருடைய நாடகப் பங்களிப்பை முழுக்கவும் பேசக்கூடிய தாகவே இருக்கிறது. உங்கள் நூலகம் சார்பில் என்னைத் தொடர்பு கொண்டபோது, அவரைப் பற்றிப் புதிதாகக் கட்டுரை எழுதுகிற தூண்டுதலுக்கு என் உடல்நிலை இப்பொழுது ஒத்துழைக்காத நிலையில், அந்தக் கட்டுரையை அப்படியே, சிற்சில மாற்றங்களுடன் 'உங்கள் நூலக'த்திற்கு வழங்குகிறேன்.

*"உயிருடன் பார்த்துக் கொண்டிருக்கிறவருக்குப் படைப்புக் கலைஞன் மேடை என்று சொல்லப்படுகிற ஒன்றில் நாடகம் என்று தான் உணர்ந்த ஒன்றை நிகழ்த்தி முற்றிலும் புதிய அனுபவத்தில் அவர்கள் பிரக்ஞையில் இதுவரையில்லாததை ஏற்படுத்தி விடுகிறதாகவே நாடகம் இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்... இப்படிப்பட்ட கருத்துள்ளவர் களில் தமிழில் முதலாமவனாக நான் இருப்பதால், என் நாடகங்கள் தமிழில் முதன்மையானவைகளாகி விட்டன' (முத்துசாமி. ந., 'சில வார்த்தைகள்'- நாற்காலிக்காரர், 1974; பக்.108)* என்று *44* ஆண்டு களுக்கு முன் ந. முத்துசாமியே தன்னைப் பற்றி/ தன் நாடகங்கள் பற்றி இப்படியாகப் பிரகடனப் படுத்தி இருக்கிறார். இவரின் முதல் நாடகம் *'காலம் காலமாக'*, நடை இலக்கிய இதழில் *1968* இல், இன்றைக்கு *50* ஆண்டுகளுக்கு முன்னால் வெளி

வந்திருந்தது. அதையொட்டிய பொழுதில்தான், அதாவது 1970 அல்லது 1971 இல், என் கல்லூரித் தமிழாசிரியர் கார்லோஸ் என்கிற தமிழவன், 'காலம் காலமாய்' என்னிடம் இறுகிக் கிடந்த திராவிட வார்ப்பு முறையிலிருந்து என்னை மீட்கும் போராட்டத்தை என்னிடம் நிகழ்த்திக் கொண்டிருந்தார், புதிய இலக்கியப் பத்திரிகைகளை எனக்கு அறிமுகப் படுத்தி! அப்பொழுதுதான் 'நடை' இதழை நான் கடந்து சென்றதும் நிகழ்ந்தது. புரிந்தோ புரியாமலோ புதிய எழுத்துகளை அப்பொழுதுதான் நான் வாசிக்கத் தொடங்குகிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டம், மாணவர் போராட்டமாய்த் தமிழகத்தை உறையச் செய்த வேளையும், அதைத் தொடர்ந்து தமிழகத்தில் திராவிட இயக்க ஆட்சி வேர் பிடித்திருந்த வேளையும் அது! கீழவெண்மணியில் தாழ்த்தப்பட்ட சமூக விவசாயிகள் 44 பேர் கோரமாய்க் கொல்லப் பட்டு, அதிகார வர்க்க எதார்த்தம் சனநாயகத்தின் யதார்த்தமாய்ப் புரிபடத் தொடங்கியிருந்த நேரம் அது! மேற்கு வங்கத்தின் நக்சல்பாரிக் கிராமத்தில் எழுந்த புரட்சிகர எழுச்சி, இந்தியா முழுக்கக் கிளை பரப்பிக் கொண்டிருந்த காலமும் அது! கோவையிலும் கோவில்பட்டியிலுமாக விவசாயிகளின் போராட்டம் வீறு கொண்டு எழுந்து, துப்பாக்கிச் சூட்டில் பலர் பலியாகியிருந்த நேரமும் அது! இந்தியா அவசர நிலைக் காலக்கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண் டிருந்த அரசியலின் வேளையும் அதுதான்! ஜெயப் பிரகாஷ் நாராயணன், இளைஞர்களின் இயக்கமாகி யிருந்த காலமும் அதுதான்! அமெரிக்கா, ருஷ்யா எனும் இருபெரும் வல்லரசுகளின் பின்னால் உலகம் வரிசை கட்டிக் கொண்டிருந்த பொழுதும் வரிசையில் விரிசல்கள் விழத் தொடங்கிய பொழுதும் அதுவே தான்! 'கசடதபற', 'அஃக்', 'நடை', 'ஞானரதம்', 'பிரக்ஞை', 'ரீங்காரம்', 'தேன்மழை', 'வானம்பாடி', 'சிகரம்', 'தாமரை', 'விழிகள்', 'படிகள்', 'பரிமாணம்', 'புதிய தலைமுறை', 'சதங்கை', 'சாதனா', 'மனிதன்', 'செந்தாரகை', 'செம்மலர்', 'கொல்லிப்பாவை', 'யாத்ரா', 'வைகை', 'நவயுகக் கலாச்சாரம்', 'இவெவ', 'கணையாழி' என்பன போன்ற இன்னும் பல சிறு பத்திரிகைகள், அந்தக் காலத்தில் அல்லது அதைத் தொடர்ந்த அடுத்தடுத்த பத்தாண்டுக் காலங்களில் வீரியமுடன் உருவாகிச் செயல்பட்டுக் கொண்டிருந்த காலச் சூழல் அது! 'படிகள்', 'பரிமாணம்', 'இலக்கிய வெளிவட்டம்', 'விழிகள்', இன்னும் சில சிறு பத்திரிகை/ இலக்கியக் குழுக்கள் இணைந்து, 'இலக்கு' என்கிற அமைப்பை உருவாக்கியிருந்த நேரமும்கூட அது! எழுபதுகளின் இறுதி அல்லது எண்பதுகளின் தொடக்கமாயிருக்கும் அது! அதன் புறநிலை எதார்த்தம், அதற்கு முந்தைய புறநிலை எதார்த்தத்திலிருந்து கொஞ்சம் மாறு பட்டிருந்தது. இது ஒரு காலமாற்றத்தைக் கோடிட்டுக் காட்டுவதாய் இருந்தது. நேற்றைய தலைமுறை யினரிடமிருந்து இந்தப் புதிய தலைமுறையினர் எல்லா நிலைகளிலும் கருத்து நிலையில் முகம் திருப்பி நின்றிருந்தனர். வீட்டிற்குள், வெளியில் என்று, வாழ்க்கையில், இலக்கியத்தில் என்று, தலை முறை இடைவெளி தடம் பதித்திருந்த அந்நேரத்துப் புறநிலைக் காரணிகளாய் இவை உருவாகியிருந்தன. இந்தச் சூழல்களின் ஒட்டுமொத்தக் கருத்துநிலை உருவாக்கத்தில் எதிரும் புதிருமான களங்கள் தமிழ் இலக்கிய உலகில் எதிரொலித்திருந்தன. வெகுஜன ரசனைக்கு எதிரான கலாரீதியான படைப்பு முயற்சி களைத் தாங்கிவரும் சிற்றிதழ்களாக எதிரும் புதிருமாய் அவ்வவற்றின் கருத்துநிலையில் வெளித் தெரிய வந்திருந்தன. இதன் ஒரு பகுதியாக அவற்றில் நாடகங்களும் முகங்காட்டத் தொடங்கின. இவ் விதழ்களின் நவீன வெளிப்பாடுகளில் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டவர்களே- நவ கவிதை, நவ சிறுகதை என்று உருவத்தில்/உள்ளடக்கத்தில் வளைய வந்து கொண்டிருந்த சிறு வட்டத்தினரே- அடுத்த முகடாகக் கருதிக் கால் வைத்தது நாடகத்தில் தான்! இதில் ந. முத்துசாமியின் பங்கு குறிப்பிடத் தகுந்தது.

இப்பொழுது 83 வயதை நெருங்குகிற ந. முத்துசாமியின் முதல் நாடகம் அவரின் 33 ஆவது வயதில் வெளிவந்திருக்கிறது. அதிலிருந்து இதுவரையும், அவர் நவீனத் தமிழ் நாடக உலகில் கவனத்திற்குரிய நாடக ஆசிரியராகவே இருந்து வருகிறார். ந. முத்துசாமி என்கிற ஆளுமையை எந்தவகையிலும் கடக்காமல் எவரொருவரும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகம் பற்றிப் பேச முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. 'காலம் காலமாக', அப்பாவும் பிள்ளையும்', 'நாற்காலிக்காரர்' ஆகிய மூன்று நாடகங்களுமாக 'நாற்காலிக்காரர்' எனும் தொகுப்பு 'க்ரியா' மூலம் 1974 இல் வெளிவந்திருந்தது. பாரதியின் நவகவிதைபோல், இந் நாடகங்கள் தமிழ்ச் சூழலில் புதிய சொல்லாய்ப் புதிய சுவையை உணர வைத்திருந்தன. 'காலம் காலமாக', காலம் காலமாகத் தொடரும் தலைமுறை இடைவெளி பற்றிப் பேசுகிற நாடகம்! ந. முத்துசாமியின் 'காலம் காலமாக' நாடகம் பேசுகிற நேற்றைக்கும் இன்றைக்குமாய்த் தொடரும் வாழ்வுநிலை மற்றும் படைப்புநிலையில் எதிர்கொள்ளும் தலைமுறை இடைவெளியின் தாத்பரியங்கள், அன்றைக்கு ந. முத்துசாமியின் வயதொத்தவர்களால் -நவீன இலக்கியவாதிகளால்- பேசப்பட்டுக் கொண்டிருக்கும் செய்தியேகூட என் தெருவரையுமேகூட வந்து செல்லாத நேரம்! வகுப்பறைத் தமிழாசிரியர்களும் திராவிட இயக்கச் சிந்தனைகளை மார்புடைக்கச் சொல்லிச் சென்றார்

களேயொழிய, இலக்கிய வகைமைகளின் அன்றைய வளர்ச்சிநிலை பற்றிய தனித்த கருத்துகள் எதுவும் அவர்களுக்கு அப்பொழுது இருந்திருந்ததாகத் தெரிய வில்லை. அன்றைய சனாதனத்திற்கு எதிரான குரல் வனப்பில் உருவாகியிருந்தது அது! ஆறாம் வகுப்பில் எனக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்த முத்து வாத்தி யாரின் உயரத்தையும் கட்டபொம்மன் மீசையையும் ஒட்டிக் கிடக்கும் ஜிப்பாவையும் மீறிப் புடைத்து நிற்கும் மார்பையும், அதையும் மீறிச் சிந்திச் சிதறும் அவரின் திராவிட இயக்கச் சிந்தனைகளையும் இன்னும் மறக்க முடியாதிருக்கிறது. எம்ஜிஆர் என்கிற மேக மூட்டம், பிரபஞ்ச வெளியின் எல்லாவற்றையும் எனக்கு அப்பொழுது மறைத்திருந்தது. அது, முது கலைக்கு முகங்காட்டுகிற வரையும் நீண்டிருந்தது. ந. முத்துசாமியின் 'காலம் காலமாக' நாடகம் வெளிவந்தபோது, உலகத்தை அதுவரையும் நான் பார்த்திருந்த ஒருபக்கப் பார்வை, புதிய உலையில் உருமாறத் தொடங்கியிருந்த நேரம்! ஆனால் திராவிடச் சேனம் பூட்டிய என் புறச்சூழலர்களின் ஒருசாலைப் பயணத்தில் நவீன எழுத்து அவர் களுக்கு அத்துபடியாயிருக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளவே, நான் என் இளஅறிவியல் முடிக்கும்வரையும், முதுகலையில் கால்பதிக்கும் வரையும் காத்துக் கிடக்க வேண்டியிருந்தது. இந்த நிலையில், எனக்கு முன்னே 'பதினாறு' கால் பாய்ச்சலில் சென்று கொண்டிருக்கிற, திராவிட இயக்கச் சார்பாளராய் அரும்பி வளர்ந்தபோதும், திராவிட இயக்கச் சாயல் துறந்த படைப்பாற்றல் கைவரப் பெற்றிருக்கிற, தலைமுறை இடைவெளி களைந்த மனிதரான ந. முத்துசாமி பற்றி எழுதுவதற்கு நிறைய இருக்கிறதுபோலவே என்னத்தைப் பெரிதாய் எழுதிவிடப் போகிறேன் என்கிற போதாமையும் எனக்குள் இருந்து கொண்டேயிருக்கிறது.

1977 இலிலிருந்து 'கூத்துப் பட்டறை' என்கிற அமைப்பை நிறுவி, அதை இன்றுவரையும் கொண்டு செலுத்திக் கொண்டிருக்கிறவர் ந. முத்துசாமி! கூத்துப் பட்டறையின் தோற்றத்திற்குக் காரணமான 'கூத்தின் வீர்யத்தை' திரு முத்துசாமிக்கு உணர்த்தி யவர் வெங்கட் சாமிநாதன். அதைப்பற்றி, எனக்குப் பதினாறு வயது மூத்தவரான ந. முத்துசாமி. கூறுகையில், 'தெருக்கூத்தை ஒரு கலை வடிவாக அடையாளம் கண்டுகொண்டு இ. கிருஷ்ணய்யரே எவ்வளவு தூரம் அதைப் புராதனமான தியேட்டராக அடையாளங் கண்டு கொண்டிருந்தார் என்பது, இன்றைய என் அறிவிற்கு எட்டவில்லை. சியாமளா பாலகிருஷ்ணனிடம் மட்டும் அது சிப்பியுள் உறுத்தலாக இருந்துகொண்டிருக்கிறது, பின் அதை முத்தாக எடுத்துப் பத்மா சுப்பிரமணியத்திடம் பரிசாகக் கொடுப்பதற்கு, இது சாமிநாதன் எனக்குக் கூத்தைக் கொடுத்ததுபோல்' என்று ந. முத்துசாமியே கூறுவதினின்று, கூத்துப்பட்டறை உருவாவதற்குரியதன் முதல் கருத்துப் பரிமாற்றத் தொடர்ச்சியை உணர முடியும். டெல்லியிலிருந்து வெங்கட் சாமிநாதன் சொன்னதன் பேரிலேயே சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற கிராமியக் கலைவிழாவில் (16-20 நவம்பர் 1975) முதன்முதலாக நடேசத் தம்பிரானின் கர்ண மோட்சம் கூத்தைப் பார்க்கிறார் ந. முத்துசாமி! 1977 மே மாதத்தில் கூத்துப்பட்டறை (Theatre Workshop என்பதுதான் அப்பொழுது அதன் ஆங்கிலச் சொல்லாகத் தரப்பட்டிருந்தது) அமைப்பின் சார்பில் அதன் செயற்பொறுப்பாளர் (Executive Secretary) வீராச்சாமி பெயரில், 'தெருக்கூத்தின் இன்றைய வடிவில் உன்னதமான கூத்துருவம் இருந்து கொண்டிருப்பதை நாங்கள் காண்கிறோம். அந்த உருவத்தைப் பிரதானம் பெற வைத்து, கூத்தைச் சிறந்த மரபுத் தியேட்டராகக் காட்சியாக்குவதே கூத்துப்பட்டறையின் நோக்கம். இதன் வெற்றியில் நவீனத் தியேட்டரின் வெற்றியும் உள்ளடங்கி யிருக்கிறது. தெருக்கூத்து அதன் சிறப்பம்சங்களோடு முழு ஆச்சர்யமாகக் காட்சிக்கு வரும்போது நவீனத் தியேட்டரைப் பாதித்து முன்னே உந்தி வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தெருக்கூத்தின் நுட்பமான கலை வடிவை வலுப்படுத்தி உயிர்ப்பிப்பதன் மூலம், அதன் சிறப்பம்சங்களை இழக்காமல் தனித் தன்மைத்தான குணங்களோடே மேனிலைக்குக் கொண்டுவரும் முயற்சியில் கூத்துப்பட்டறை மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது' என்பதான ஓர் அறிக்கையுடன் நன்கொடை கேட்டு ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட்டிருந்தது. 1977 இல் புரிசையில் 15 நாட்கள் தங்கியிருந்து கூத்தைப் பற்றி அறிந்து சென்றவர் வீராச்சாமி என்று காலஞ்சென்ற கலைமாமணி கண்ணப்பத் தம்பிரான், நான் 1981 மே-ஜூனில் புரிசையில் தங்கியிருந்து கூத்து பயின்று கொண்டிருந்தபோது கூறியிருக்கிறார். ஆனால் என்ன காரணத்தினாலோ-ஓராண்டிற்குள்ளாக -1978 இன் தொடக்கத்திலேயே கூத்துப்பட்டறையிலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்கிறார் வீராச்சாமி. 1977 ஐத் தொடர்ந்தே 'ஒருதரத்தில் இருக்கும் நடேசத் தம்பிரான் குழுவினர் போன்றோரின் கூத்தை நாம் விரும்பும் தரத்துக்கு உயர்த்தி, நம்மைப் போன்றவர் களின் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்வது (இங்குத் தோன்றும் பிரச்சனைகளைத் தனியே அலசிப் பார்க்கவேண்டும்) நான் நினைக்கும் உயர்ச்சியில் இவை மிக நவீனமாக வேறு எந்தத் தேசத்திலும் இருக்கும் தியேட்டர்களுக்கு ஒப்பானதாக இருக்கும்' என்பதாகக் 'கூத்தை அதன் குணங்கள் குறையாமல் சாஸ்திரிய தரத்திற்கு உயர்த்துவதற்கான'

கட்டுரைகளை வைகை இதழில் ந. முத்துசாமி எழுத ஆரம்பிக்கிறார். 'பாரம்பரியத்தைக் காத்துவரும் மிகச் சிறந்த குழு' என்று, அன்றைய சென்னை சங்கீத நாடக அகாதெமியின் தலைவர் இ. கிருஷ்ணய்யரின் கீழ், தமிழகத்தின் வடமாவட்டங்களில் கூத்து பற்றிய பரப்பாய்வை மேற்கொண்டிருந்த, பரதநடன சூடாமணி பத்மா சுப்பிரமணியத்தின் அண்ணியான சியாமளா பாலகிருஷ்ணனால் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டிருந்த நடேசத் தம்பிரன் குழுவை 'ஒரு தரத்தில் இருக்கும்' என்கிறார். இந்த 'ஒருதரம்' என்பது என்ன என்று அவரால் விளக்கப்படாமலே போயிற்று. நடேசத் தம்பிரான் என்பவர், 'சதிர் அறிந்து கந்தசாமி கோயிலில் தேவதாசிகளுக்கு 'நட்டுவாங்கம்' செய்து வந்தவரான வீராச்சாமி தம்பிரான்' வழிவந்தவர் என்று ந. முத்துசாமி, 'அன்று பூட்டிய வண்டி'யில் பக்.43 இல் கூறியிருப்பதைக் கவனத்தில் கொண்டால், சதிருக்கு 'நட்டு வாங்கம்' செய்து கொண்டிருந்தவரின் வழியில் வந்த கூத்துக் குழு இது என்பதால், இதை 'ஒரு தரத்தில் இருக்கும்' என்கிறாரா என்கிற கேள்வி ஒன்று இங்கு எழுகிறது. கூடவும் 'நாம் விரும்பும் தரத்திற்கு உயர்த்தி' என்பதில் 'நாம் உயர்த்தும் தரம்' எது என்பதையும் 'உயர்த்த' என்பது எப்படி என்பதையும் அவர் விளக்க முயற்சிக்கவில்லை. ஒருவேளை இதுவும், 'சியாமளா பாலகிருஷ்ண'னின் கூத்துப் பரப்பாய்வில் 'சாஸ்திரியத்தைப் பின்பற்றும் தரமான குழு' என்று அவரால் அடையாளங் காணப்பெற்று, 'சிப்பியுள் உறுத்தலாக இருந்த' நடேசத் தம்பிரான் கூத்துக் குழுவை, முத்தாக எடுத்து, 'நாம்(?) விரும்பும் தரத்திற்கு உயர்த்தி', பத்மா சுப்பிரமணியத்திடம் அதைப் பரிசாகக் கொடுக்கிற பணியாயிருக்குமோ என்பதையும் கொண்டுகூட்டியே புரிந்து கொள்ள வேண்டியதிருக்கிறது.

இன்னொன்று, 'கூத்து, முழு ஆச்சரியமாகக் காட்சிக்கு வரும்போது நவீனத் தியேட்டரைப் பாதித்து முன்னே உந்தி வளர்ச்சிக்கு வழிவகுக்கும் (1977 இல் வெளியிட்ட துண்டுப் பிரசுரம்) என்பது கூத்துப்பட்டறையின் தொடக்கக் கருத்துருவாய் இருந்ததால், 1977 செப்.-அக். வைகை-2 இதழில் 'தெருக்கூத்துக்கு உதவி தேவை' என்று கேட்டுக் கட்டுரை ஒன்றை எழுதுகிறார் ந. முத்துசாமி! அதைத் தொடர்ந்து கூத்து தொடர்பான பல்வேறு கட்டுரைகள் சிறு பத்திரிகைகளில் அவரால் எழுதப்படுகின்றன. 1978 பிப்ரவரியில், 'கொல்லிப்பாவையில், 'உண்மையில் இதுதான் தமிழ் அரங்கக்கலையாக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இதற்கான சாட்சியங்களைத் தேடிக் கொண்டு போவது என்னுடைய உடனடி வேலையில்லை. என்னுடைய முழு அக்கறையும் கூத்தின் வடிவம் சம்பந்தப்பட்டது' என்று எழுதுவதன் மூலம், 'புராதனத் தமிழ் தியேட்டர்' என்கிற முடிவுக்குக் கூத்தைக் கொண்டு வந்திருப்பதும் கூத்தின் வடிவம் சம்பந்தமானது மட்டுமே தன் பிரச்சினை என்பதும் சொல்லப்படுகிறது. இந்த இடங்கள்தாம், முத்துசாமியிடமிருந்து வீராச்சாமி முகம் திருப்பிக் கொள்ளக் காரணமாக இருந்திருக்குமோ என்றும் அய்யப்பட வேண்டியதிருக்கிறது. அழகின் உபாசகனாக அவர் இருந்து எடுத்திருக்கிற முடிவு இது என்பது தெரிகிறது. ஆனால், தமிழ் தியேட்டராகக் கூத்தை நிறுவுகிற எந்த வேலைத் திட்டமும் அப்பொழுது அவரிடம் இருந்ததாகத் தெரியவில்லை. இப்பொழுதும் அது எப்படி என்பது தெரியவில்லை. ஆனால், அதற்குரிய சாட்சியங்களைத் தேடிக் கொண்டுபோகும் வேலைத் திட்டமானது, ந. முத்துசாமி மூலம் தமிழ்ச் சூழலில் பிறரிடம் உருவாகியிருந்தது என்பது இதன் புறநடையாயிருக்கிறது!

கூத்துப்பட்டறையின் முதல் நாடக நிகழ்த்தல் என்பது, 1977 இல் காந்திகிராமத்தில் ஜுன் 20-26 வரை ஒரு வாரம் நிகழ்ந்த முதல் நவீன நாடகப் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்றிருந்த ஓவியர் கிருஷ்ண மூர்த்தியின் நெறியாளுகையில் 10-04-1980 இல் சென்னை லலித் கலா அகாடெமியின் திறந்த வெளியில் நிகழ்ந்த 'சுவரொட்டிகள்' நாடகம் ஆகும். கூத்துக் குடும்பத்தைச் சேர்ந்த கண்ணப்ப. சம்பந்தன் அதில் முக்கிய வேடம் ஏற்று நடித்திருந்தார். அந் நாடகத்திற்கு வழங்கிய துண்டுப் பிரசுரத்திலும் 'எளிமையும் எழிலும் கொண்ட தெருக்கூத்தைத் தமிழர்களின் தியேட்டராகக் கருதி, அதைப் பற்றிய பரவலான பிரக்ஞையை உருவாக்குவதும், கூத்தின் அம்சங்களைக் கொண்டு நவீன நாடகங்களை உருவாக்குவதும் கூத்துப்பட்டறையின் பல நோக்கங்களில் முக்கியமானவை' என்று குறிப்பிட்டிருந்தது. 'கூத்தின் அம்சங்களைக் கொண்டு நவீன நாடக' உருவாக்கத்தில் கூத்துப்பட்டறை ஈடுபட்டிருந்தது என்றுதான் இதுவரையும் என்னால் புரிந்து கொள்ளப் பட்டிருந்தது. ஆயின் ந. முத்துசாமியின் இந்தக் குரல் (தமிழ்த் தியேட்டரான கூத்தின் அம்சங்களைக் கொண்டு நவீன நாடக உருவாக்கம்),1993 இல் 'இந்தியன் தியேட்டர்' எனும் கருத்துருவை நோக்கி விரிவடைவது ஒரு புதுமை! 'கூத்து, மற்ற படைப்புத் துறைகளுக்குத் தந்திருக்கும் உத்வேகம் இது. முத்துசாமியின் 'சுவரொட்டிகள்' இந்த உத்வேகத்தின் மற்றொரு வெளிப்பாடு. கூத்தின் அமைப்பும், அம்சங்களும் இந்நாடகத்தை உருவாக்கப் பெரிதும் பயன்பட்டிருக்கின்றன. உண்மையில் இந்நாடகம் மேடையில் நடைபெறவில்லை. சமூகத்தில்தான்

நடைபெறுகிறது. இதையே குறிப்பாக, ஆரம்பத்தில் 'தெருக்கூத்து' என்று முத்துசாமி சுட்டிக் காட்டுகிறார்' என்று 1980 இல் அந்நாடகத் துண்டுப் பிரசுரத்தில் குறித்திருக்கும் ந. முத்துசாமி, 1993 இல், 'கூத்தாலே பாதிக்கப்பட்டு நான் 'சுவரொட்டிகள்' நாடகத்தை எழுதவில்லை. இந்தியன் தியேட்டரால் பாதிக்கப் பட்டுத் தான் சுவரொட்டிகளை எழுதினேன். இந்த வடிவத்திற்கு நான் வருவதற்குப் புதுக்கவிதையும் மாடர்ன் டான்ஸூம்தான் பாதிப்பு... கூத்தை இதில் நான் அறிமுகப்படுத்தவில்லை. சூத்திரதாரியைத் தான் ஒரு கான்செப்ட் லெவலில் அறிமுகப்படுத்தினேன்' என்று வெளி-17 இல் கூறுவது கவனிக்கத்தக்கது. 'தெருக்கூத்தின் கட்டியக்காரன் சமஸ்கிருத நாடகத்தின் சூத்திரதாரியிலிருந்து வேறுபட்டவன்... இவன் விதூஷகனும் சூத்திரதாரியும் இணைந்து உண்டாக்கப்பட்டவன்... நாடகத்தின் உள்ளும் இருக்கிறான். புறமும் இருக்கிறான். இரு காலங் களிலும் இருக்கிறான்' என்று 1978 இல் கூறிய ந.முத்துசாமி, அதைப் பற்றி விஸ்தாரமாகத் 'திரையும் கட்டியக்காரனும்' என்று 1979 பிப்ரவரியில் வைகை-16 இல் எழுதியிருந்த ந. முத்துசாமி, 1979 இல் கட்டியக்காரன் என்பதாகவே நாடகம் எழுதியிருக்கிற ந. முத்துசாமி, 1993 இல் கட்டியக்காரன் என்ற சொல்லையே தவிர்த்திருப்பது கவனத்தில் கொள்ளத் தகும் மாற்றமாகும். இதற்குக் காரணம், 1984க்குப் பிறகு, மைய சங்கீத நாடக அகாதெமியின் உதவியில் இந்தியாவின் பல்வேறு கலைகளைப் பார்த்து விவாதிக்கும் வாய்ப்பு ந. முத்துசாமிக்குக் கிடைத்த தனால் இருக்கலாம். அல்லது சொல்லை மீறி உடல் மொழியில் உருவான 'சுவரொட்டிகள்' நாடகத்தின் பாதிப்பாயிருக்கலாம். அல்லது இவை மீறிய இன்னொரு காரணமாகக்கூட இருக்கலாம்.

நாடகம் என்பது வாழ்வியல் முரணைப் படிமப் படுத்தும் மொழியின் மௌன விரிவிற்குள்தான் புதைந்து கிடக்கிறது. ந. முத்துசாமியின் மொழி, மௌனக் காட்சிப் படிமமாய் விரிவதற்கான சாத்தியங்களைக் கொண்டிருப்பது! 'ஜெயச்சந்திரன் என்கிற பரதநாட்டியம், கதகளி அறிந்த ஒருவரையும் நாடகத்தை அறிந்த சம்பந்தன் என்பாரையும் கொண்டு, வார்த்தைகள் இல்லாமல் முப்பது நிமிடங் களுக்கு ராஜேந்திரன் தயாரித்திருந்த சுவரொட்டிகள் என்ற படைப்பை இங்குக் குறிப்பிட வேண்டும்' என்கிற ந. முத்துசாமியின் கருத்தையும் (வெளி13, செப்-அக்.1992; பக்.39-40), 'சுவரொட்டிகள் நாடகத்தை இரண்டு தயாரிப்புகள் நான் பார்த்தேன்- ஒன்றை ஆறுமுகம் இயக்கியிருந்தார்- இன்னொன்றை ராஜேந்திரன் தயாரித்திருந்தார். ராஜேந்திரனுடையதில் வார்த்தைகளே இல்லை. வசனங்கள் தவிர்க்கப் பட்டிருந்தன. அந்தத் தயாரிப்பு சக்தி வாய்ந்ததா யிருந்தது. ஆனால் முத்துசாமியின் ஒரு சொல்லைக் கூட அதில் கேட்க முடியவில்லை. வார்த்தைகள் இல்லாமலிருந்தாலும் முத்துசாமி என்ன சொல்ல வருகிறார் என்பதைப் புரிந்து கொண்டு செய்த முயற்சியாக இருந்தது' (சாமிநாதன். வெ., வெளி 17, மே-ஜுன் 1993; பக். 14) என்ற வெங்கட் சாமிநாதனின் கருத்தையும் கவனத்தில் கொண்டால், மௌன விரிவிற்கான நாடகச் சாத்தியங்களை அவரின் மொழி கொண்டிருக்கிறது என்கிற கருத்து முக்கியமாகிற அதேவேளை, நாடக ஆசிரியரின் இருத்தலைக் கேள்விக்குள்ளாக்குகிற ஒன்றாகவும் அது விளங்குகிறது என்பதையும் குறிப்பிட வேண்டிய திருக்கிறது. இதன் காரணமாகவோ அல்லது வேறு எதன் காரணமாகவோ, 01-11-1978 முதல் 10-01-1979 வரை 70 நாட்கள் நடத்திய இரண்டாவது நாடகப் பயிற்சிப் பட்டறையின் வெளிப்பாடான 'பிணம் தின்னும் சாத்திரங்கள்' நாடகத்தைப் பற்றிய தன் அபிப்பிராயத்தை வெங்கட்சாமிநாதன் மே 1979 'யாத்ரா' இதழில் கூறும்போது, 'குதிரை லாயத்தைச் சுத்தம் செய்யக் கிளம்பியவர்களின் கூத்துப் பட்டறையைவிட இது முக்கியத்துவம் மிகுந்த முயற்சி. குதிரை லாயம் சுத்தம் செய்யப் போகிறோம் என்று அகம்பாவப் பிரகடனம் விட்டவர்கள், குதிரை லாய லத்தியில் தடுக்கி விழுந்து அதிலேயே புதைந்து போய்விட்டதாகத் தோன்றுகிறது. அதன் பிறகு ஏதும் சத்தம் எழக் காணோம்' என்று கூறியிருப்பதன் எதிர் வைராக்கிய நிரூபணமாகத்தான், 1980 இல் ஓவியர் கிருஷ்ணமூர்த்தியின் நெறியாளுகையில் கூத்துப் பட்டறை 'சுவரொட்டிகள்' நாடகத்தை உருவாக்கி யிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஆயின் ந. முத்துசாமியிடமிருந்துதான் தமிழின் முதல் நாடகம் உருவாகியிருக்கிறது என்கிற அதீதச் சொற்பிரயோகங்களும் நவீனத் தமிழ்ச் சூழலில் வந்து போயிருக்கின்றன என்பதையும் குறிப்பிட வேண்டியதிருக்கிறது. 'இன்றைய நமது லக்ஷிய எல்லைகள் ந. முத்துசாமியின் நாடகங்கள்தாம். ஆனால் சாத்திய முதல் காலடி வைப்பு என ராஜ சேகரன், இந்திரா பார்த்தசாரதி நாடகங்கள் எனக் கொள்ள வேண்டும்... பார்த்தசாரதியின் மழை போன்ற சம்பிரதாய ரூபங்கொண்ட (ஆனால் தமிழ் நாடக உலகிற்குப் புதிதான) நாடகங்கள் நிறைய எழுதப்பட வேண்டும்; வெளிவர வேண்டும்' (வெங்கட் சாமிநாதன், 'வயிறு'-முன்னுரை, 1980; பக்.11,5) என்று 38 ஆண்டுகளுக்கு முன் எழுதுகிற வெங்கட் சாமிநாதனே, 25 ஆண்டுகளுக்கு முன் 'முத்துசாமியின் நாடகங்கள் வெறும் கூடுகளே... முத்துசாமியின் நாடகங்களில் முழுமையான அனுபவம் கிடைப்பதில்லை' என்று 1993 இல் வெளியாகி,

*(17 ஆவது இதழில் பக். 15 இல்)* விசனப்படுகிறார். சற்றேறக்குறைய 33 ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத்துறையின் சார்பில் நடைபெற்ற, கல்லூரி ஆசிரியர்களுக்கான ஒரு மாதகால நாடகப் பயிற்சிப் பட்டறையின்போது, நாடக ஆய்வு/செயல்பாட்டில் ஈடுபட்டிருந்த மூத்த அறிஞர்கள் பலர்- பேராசிரியர் சே. இராமானுஜம், கலைஞர் எஸ். பி. ஸ்ரீநிவாசன், முனைவர் செ. இரவீந்திரன், முனைவர் ஏ. என். பெருமாள், ஓவியர் கிருஷ்ண மூர்த்தி மற்றும் முனைவர்கள் இராஜு, ஆறுமுகம் போன்றோர்- கலந்து கொள்ள, ஒரு விவாத அரங்கம் நிகழ்ந்தது. அதன் மையப் பொருளாகத் தமிழில் நாடகம் உண்டா எனும் கேள்வி எழுப்பப்பட்டது. ந. முத்துசாமிக்குப் பிறகுதான் தமிழில் நாடகமே தோன்றியது எனும் கருத்தை ஒரு சாரார் முன் வைத்தனர். மொத்த அரங்கமும் இரண்டு குழுக்களாக வரிந்து கட்டிக் கொண்டு பிரிந்து நின்றது. இறுதியில் இரண்டு குழுக்களும் ஒருமித்த கருத்திற்கு வந்ததாக நினைவில்லை. விவாதங்கள் திசைமாறி, கருத்தின் மீது ஆதாரங்களை நிறுவுவதன் தேவையை மறுத்து, வெற்றுச் சொற்பிரயோகங்களில் தஞ்சம் அடைந்து கொண்டதே அதற்குக் காரணம். 'தமிழில் கலைநோக்கம் கொண்ட ஒரு படைப்புக் கலைஞரால் நாடகம் கையாளப்படுவது முத்துசாமியிடம் இருந்துதான் தொடங்குகிறது' *(ரெங்கராஜன், வெளி-3, ஜன-பிப்.1991; பக். 6)* என்பதாய் வெளி ரெங்கராஜனால் 27 ஆண்டுகளுக்கு முன், 1991 இல் ந. முத்துசாமி விதந்தோதப்படுகிறார். ஆனால் இதற்கெல்லாம் முன்பே, 02-09-1961 இல் ஏறக்குறைய 57 ஆண்டுகளுக்கு முன்பே 'தமிழில் வரவேண்டிய நூறு நல்ல நாடகங்களில் ஒன்றாக இருக்கும் என் 'ஊதாரி' என்பதில் எனக்குச் சந்தேகம் சிறிதுமில்லை' என்று கலைநோக்கம் கொண்ட ஒரு படைப்புக் கலைஞரான க.நா. சுப்பிரமணியம் தன் ஊதாரி நூல் முன்னுரையில் குறிப்பிடுகிறார். ஆயினும் நவீன நாடகக்காரர்கள் யாராவது இதைப் பற்றி எங்காவது பேசியிருப்பார்களா என்பது ஐயமே! நாடக ஆசிரியர்கள் தங்கள் நாடக இருத்தல் பற்றி அபரிமிதமான நம்பிக்கை வைத்திருந்தனர் என்பதற்கான அத்தாட்சிகளே இவை! ஆயினும் காலக் கரைசலில் புதியதாய் ஒவ்வொன்றும் தொடர்ந்து உருமாறிக் கொண்டேயிருக்கின்றன. அவற்றில், புறச் சூழல்களுக்கும் அகச் சூழல்களுக்கும் பெரிய பங்கிருக்கிறது. எதுவொன்றும் தனித்த நிகழ்வுகளில்லை; எதுவும் தொடக்கமுமில்லை; எதுவும் முடிவுமில்லை; எல்லாமே ஒவ்வொன்றின் தொடர்ச்சிதான்! ஒவ்வொன்றும் ஒவ்வொன்றின் கால நீட்சி என்பதாய் உணரப்பட வேண்டும். அதுதான் இயங்கியல்! காலத்தின் கருத்தை, நேற்றின் தோள்களில் நிமிர்ந்து நின்று, தனக்குக் கைவந்த படைப்பு முயற்சியாக, சமூகத்திற்கு வெளிப்படுத்தும் கருவிகளாகவே படைப்பாளிகள் தொடர்ந்து விளங்கி வருகின்றனர். இந்நிலையில் தமிழில் நாடகம் உண்டா என்கிற கேள்வியும், ந. முத்துசாமியிடமிருந்துதான் தமிழ் நாடகம் தொடங்குகிறது என்கிற பதிலும் அபத்தம் நிறைந்தவை.

எந்தவொரு வளர்ச்சியடைந்த மொழியையும் போல், தமிழும் தனக்கான நாடகங்களைக் கொண்டிருந்தது. இயல், இசை போல நாடகத்தையும் தமிழுடன் இணைத்து முத்தமிழாக்கிப் பரவசப்பட்டது நம் மரபு! கூத்தர், பொருநர், பாணர், விறலி, கோடியர், வயிரியர், கண்ணுளர் எனும் கலைச் சமூகத்தவர்கள் சங்கம் தொடங்கி வாழ்ந்திருந்து, இன்று காணாமலே போயிருக்கிற பூமி இது! செயிற்றியம், குணநூல், சயந்தநூல், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், சுத்தானந்தப் பிரகாசம் போன்ற நாடகத் தமிழ் இலக்கண நூல்கள் வெறும் பெயராலும் உரையாசிரியர்களால் எடுத்தாளப்படும் சில மேற்கோள் நூற்பாக்களாலும் மட்டுமே அடையாளப் படுத்தப்பட்டு அவற்றின் இருத்தல் பற்றி எந்தத் தரவுகளும் இல்லாதிருக்கிற தமிழ் நிலம் இது! நிகழ்த்தலுக்கான பெருமரபு நூல்களும் கோட்பாட்டு உருவாக்க நூல்களும் இருந்ததற்கான சான்றுகள் நம்மிடம் இருக்கையில், இதற்குத் துணைசெய்யும் நாடகப் பிரதிகளும் செழுமையுடன் இருந்திருக்க வேண்டும் என்கிற முடிவிற்கு நாமாக வந்து சேர வேண்டியதிருக்கிறது. இந்த வழியில் வந்தால், தமிழில் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டு மக்களால் பேணப்பட்டு மிருந்திருக்கின்றன என்கிற உண்மையையே அடைய முடியும். சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவை சுட்டும் 'ஆயர்பாடியில் எருமன்றத்து மாயவனுடன் தம்முன் ஆடிய வாலசரிதை நாடகங்களில் வேல்நெடுங்கண் பிஞ்சையோடாடிய குரவையாடுதும் யாமென்றாள்' எனும் பகுதியில் சுட்டப்படும் 'வால சரிதை நாடகம்' ஒரு முக்கியப் பதிவு! அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் இந்தப் பிள்ளைச் சரித நாடகம், மாயவன் தொழுனையாற்றிற் பிள்ளைப் பருவத்துப் பலதேவரோடும் பின்னையோடு மாடின குரவைக் கூத்தாகும். இது, கிருஷ்ணனை மையப் பாத்திரமாகக் கொண்டு பாஸ மகாகவி படைத்த பாலசரிதை நாடகத்தின் தமிழாகவும் இருக்கக்கூடும். அல்லது இங்குக் குரவையாய் ஆயர் மக்களிடம் வழக்கிலிருந்த வாலசரிதை நாடகங்கள் எனும் 'கண்ணன் எனும் கிருஷ்ணனின்' பிள்ளைப் பருவத்து யமுனையாற்று லீலைகள் தொடர்பானதும் இந்தியப் பொதுமரபாய் வலம்வரும் கதையாடலானதுமான ஒன்றைப் பாஸமகாகவி 'பாலசரிதை' நாடக

மாக ஆக்கியிருக்கவும்கூடும். நாட்டியசாஸ்திரத்திற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவராய்க் கொண்டாடப் படும் பாஸமகாகவியின் நாடகங்கள், திருவனந்த புரத்தைச் சேர்ந்த டி. கணபதி சாஸ்திரியின் 1910-1912 காலத்திய கண்டுபிடிப்பு என்பதையும் நாம் மனங் கொள்ள வேண்டும்.

நாடகப் படைப்பு முயற்சியில் தங்கள் அடை யாளங்களைப் பதித்திராவிட்டாலும் நாடகப் பிரதி உருவாக்க முயற்சியில் தங்களை ஈடுபடுத்தியிருந்த தமிழின் கீர்த்திமிக்க கவிஞர்கள் மகாகவி பாரதி (ஜகத்சித்திரம், விடுதலை-இவை நாடகங்களாக எழுதப்பட்டிருக்குமா என்பதே ஐயம்), புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் (குமரகுருபரர், வீரத்தாய், இரணியன் அல்லது இணையற்ற வீரன், நல்லமுத்து), சிறு பத்திரிக்கை எழுத்தாளர்கள்/படைப்புக் கலைஞர்கள் புதுமைப்பித்தன் (சார் நிச்சயமா நாளைக்கு, வாக்கும் வக்கும், பக்த குசேலா), பி.எஸ். ராமையா (பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம், தேரோட்டி மகன், பாஞ்சாலி சபதம்), கு.ப.ரா. (ஆத்ம சிந்தனை), கு. அழகிரிசாமி (வஞ்சமகள்), சி.சு. செல்லப்பா (முறைப்பெண்), க.நா.சு. (ஊதாரி), அ. ஸ்ரீநிவாச ராகவன் (நிலவு), தி. ஜானகிராமன் (வடிவேலு வாத்தியார், நாலுவேலி நிலம்) போன்றோரைத் தவிர்த்துவிட்டு எப்படி இந்தத் தரையில் நாடக முழத்தை நீட்டிப் போடுவது? இவற்றில், 84 ஆண்டு களுக்கு முன், வெள்ளையர் ஆட்சியில் 09-09-1934 இல் சென்னை வி.பி.ஹாலில்/ 20-03-1935 இல் சென்னை ராயல் தியேட்டரில்/ 04-07-1936 இல் வாணியம்பாடிக்கு அருகிலுள்ள அம்பலூரில் என்று நிகழ்த்தப்பட்ட 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' நாடகம், வெள்ளையரிடமிருந்து அரசியல் விடுதலை பெற்ற 'சுதந்திர' இந்தியாவில் 1876 ஆம் ஆண்டு 'நாடகத் தடைச் சட்ட'த்தின்படி, 1948 இல் தடை செய்யப்படுகிறது. அதை மீறி நாடகம் நடத்தி, மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை பெற்று மீண்ட தோழர்களுக்கு 70 ஆண்டுகளுக்கு முன், 22-12-1948 இல் வேலூரிலும் 23-12-1948 இல் திருவத்தி புரத்திலும் பெரியார் முன்னிலையிலும் 25-12-1948 இல் காஞ்சிபுரத்தில் அண்ணா முன்னிலையிலும் வரவேற்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதற்காகச் செங்கற்பட்டிலிருந்து காஞ்சிபுரத்திற்கு 200 க்கும் மேற்பட்ட திராவிட இயக்கத் தோழர்கள், இயக்கக் கொடி பிடித்து நடைப்பயணம் மேற்கொண்டிருந்தது என்பது புனைவே இல்லாத உண்மை! நாடக எழுத்தை அரசு எப்படிப் பார்த்தது, அதைத் திராவிட இயக்கம் எப்படி அரசியலாக்கியது என்பதன் பதிவு இது! அந்தச் சமூகத்தின் உயிரோட்டமாய் நாடகமும் இருந்திருக்கிறது என்பதற்கான சான்றுகள் இவை! இவை, தமிழ் நாடகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அர்த்தமுள்ள திசை நோக்கித் திருப்பிவிட மேற் கொள்ளப் பெற்ற முயற்சிகள்!

1957 இலேயே நாடகக் கல்வி நிலையம் தொடங்கி, அதன்வழி நாடகம் எழுத, தயாரிக்க, காட்சி அமைக்க எனும் நான்கு பிரிவுகளில் பயிற்சி யளித்து, 1959 இல் பாரதியின் 'பாஞ்சாலி சபதம்', 'குயில்பாட்'டை நாடகமாக நிகழ்த்திய பாரதிக் கலைஞர் சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ் குழுவினரின் நாடகப் பிரதிகளின் பங்கை ஒதுக்கித் தள்ளிவிட்டு, வரலாற்றை மறந்துவிட்டு, எதுவொன்றையும் நமக்குத் தெரிந்த புதிதாக மட்டுமே பார்த்துவிட முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. நேற்றின் தொடர்ச்சியே இன்று! பட்டியலிட்டால் இவையும் பெருகும். இந்த வழியில்தான் சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் ஆகியோரின் பிரதிகளையும் இன்னும் பலரையும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இன்றைய நாடகப் பிரதிகள், நிகழ்வுகளின் வெளிச்சத்தில் நேற்றைய நாடகப் பிரதிகள், நிகழ்வுகள் சக்தி இழந்தவையாகத் தோன்றக்கூடும். ஆயின் என் அப்பாவையும் அம்மா வையும் தாத்தாவையும் பாட்டியையும் மகிழச் செய்தவை, அவர்களின் மனத்திற்கு வலிமை யூட்டியவை அந்த நாடகங்கள் எனும்போது, அவற்றின் கால நியாயத்துடன் அவற்றின் இருத்தலை நேர்மையுடன் ஒப்புக் கொள்வதும், ஒப்புக் கொண்டு அவற்றை மறுதலிப்பதும்தான் முறையாயிருக்கும்.


'முந்தைய நாடகப் பிரதிகளில் கடவுளர்கள் கதாநாயகர்களாகயிருந்தனர். அரசர்கள் கதாபாத்திரங் களாயிருந்தனர். மனிதர்களோ தாங்கள் புறநிலையில் பார்த்த எலும்பும் சதையுமான மனிதர்களாக மட்டுமே இருந்தனர். இதற்கு எதிராக, கடவுளர்கள் மீதும், சகமனிதர்கள் மீதும், தன்னின் மீதும் நம்பிக்கை இழந்திருக்கின்ற சமூகத்தில் தனக்கான முகங்களை இழந்து தனக்கான குறியீட்டு அடை யாளத்தைத் தேடும் முயற்சியில் தோய்ந்து போயிருக்கிற- அகமன உளைச்சல்களில் சிதைந்து, அனைத்தையும் சிதைத்துச் சிதைத்தே பார்த்துப் பழகியிருக்கிற- தங்கள் படைப்புகளின் மூலம் தங்கள் இருப்புகளை நியாயப்படுத்துகிற எழுத்துகள் நவீன மனநிலையின் வெளிப்பாடாய் எழுந்த நவீன எழுத்தாகும். இது முதலாளித்துவத்தின் உச்சம் தந்திருக்கும் பரிசு. அதனாலேயே புற உலகமும், வாழ்க்கையும், உணர்வுபூர்வமான அறிவும் நம்பத்தக்கவையாக இல்லாது மாறிய நிலையில், கலைஞன் தன் மனக் குகைக்குள்ளேயே அதிகம் பயணம் செய்கின்றான். ... இதற்கான வெளிப்பாடுகளாகப் படிமங்களும் குறியீடுகளும் அமைகின்றன. புறவுலகம் சார்பான

வடிவங்களையே கண்டு கண்டு அனுபவித்தவர் களுக்கு இவ்வடிவங்கள் தம் உண்மையை வெளிப் படுத்துவது இல்லை.' இவற்றைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யாமல், இவை கலைகளே அல்ல என்று பழிதூற்றவே செய்வர்' (ஞானி, மார்க்ஸியமும் தமிழ் இலக்கியமும், 1988; பக்.247) என்கிற ஞானியின் கருத்தைப் போலவே, பழையவற்றையும் புரிந்து கொள்ள முயற்சி செய்யாமல், அவையும் கலைகளே அல்ல என்று பழிதூற்றவும் செய்வது இங்கு நடக்கிறது. கால மாற்றத்திற்கேற்ப நாடகப் பிரதிகளின் அமைப்புகளில், நாடக நிகழ்வுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. கதைக்குள் முரணை மையப்படுத்தி உருவான நாடகப் பிரதிகள், மன முரண்களை மையப்படுத்தி உருவாவது நடக்கிறது. இது கால மாற்றம். இதற்காக முந்தியவற்றை முற்றிலுமாக நிராகரித்து விடுவது தேவையற்றது. நேற்றைய நாடகப் பிரதிகளைக் குறுக்கியும் விரித்தும் இன்றைய நாடக நிகழ்வின் அறிவார்ந்த வெளிச்சத்தில் புதிய நிகழ்வாக இன்றைய நெறியாளுநன் செய்து விடவும் வாய்ப்புண்டு. ஆனாலும், இன்றைய வாழ் வியலின் வேகத்திற்கு ஒத்துவராத நாடகப் பிரதிகள், பேசாமல் மௌனம் சாதிக்கத் தொடங்கிவிடும். வீர்யம் உள்ள நாடகப் பிரதிகள் மட்டுமே- இன்றைய வாழ்வியலுக்கு வியாக்யானிக்கும் தகுதி கொண்டவை மட்டுமே- இன்றும் நிகழ்த்தத் தகுதி கொண்டவையா யிருக்கும். பழைய நாடகங்கள் பல, இன்றைய நவீன நாடக நெறியாளுநர்கள் கையில் புதுப் பொலிவுடன் மிளிரும் சக்தியுள்ளவையாக, நிகழ்த்தும் காலத்திற்கான கருத்தாகி வெளிப்படுகிறதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

என்னுடைய வயதில் கால் நூற்றாண்டுக் காலம் கழிந்த பிறகுதான், 41 ஆண்டுகளுக்கு முன், 1977 இல் காந்தி கிராம நாடகப் பயிலரங்கில் ந. முத்துசாமியின் நாடகமான 'நாற்காலிக்காரர்' நாடகத்தில் நான் நடிக்கயிருந்த சிறுவாய்ப்பும் திசை தவறி, வெளியே யிருந்து நாடகத்தைப் பார்க்கும் பார்வையாளன் வாய்ப்பு மட்டுமே எனக்கு வாய்த்தது. ஆயின் ஜி. சங்கரபிள்ளையின் 'கங்கையின் மைந்தனி'ல் திருதராஷ்ட்ரனாக நடிக்கும் வாய்ப்பு, திசை மாறி என்னிடம் வந்து சேர்ந்திருந்தது. ஓவியர் கிருஷ்ண மூர்த்தி, நடிப்புப் பதற்றத்திற்குள் சிக்கிக்கொண்டு அதிலிருந்து வெளிவர முடியாமல் தவித்த காரணத்தால், கர்ணனாக நடிக்க வேண்டிய அவருக்குப் பதில், இறுதி நேரத்தில் பேரா. சே. இராமானுஜம் அந்தப் பாத்திரத்தில் நடிக்க வேண்டியதிருந்ததால், அது 'நாடக வாசிப்பு' என்பதாகவே நிகழ்த்தப்பட்டது. அதில் எனக்கு நல்ல பெயரும்கூட! இருந்தும் 'நாற்காலிக்காரர்' நாடகத்தின் நையாண்டி எனக்குள் இளந்தென்றலாய்ப் பரவசம் தந்திருந்தது. இப்பொழுதும் பார்ப்பவருக்கு இளைப்பாறுதல் தரக்கூடியதாயிருக்கும் 'நாற்காலிக்காரர்' நாடகம்! 1978 பிப்ரவரி 9 இல் நிஜநாடக இயக்க முகத்துடன் நாடகத்தில் நான் 'அ', 'ஆ'... போடத் தொடங்கிய பொழுது, நான் எழுதியிருந்த 'யான' நாடகம் 'விழிகள்' இதழில் வெளியான பிறகு, அது பரவலான ஒரு அங்கீகாரத்தை எனக்கு ஏற்படுத்தித் தந்தபோது, 'நாடகக்காரன்' என்கிற முக விலாசத்துடன் சென்னை வருகிற போதெல்லாம் ஏதாவதொரு காரணத்தை ஏற்படுத்திக் கொண்டு, முத்துசாமியை அவ்வப் போது வாலாஜா சாலையில் அப்போதிருந்த பாரகன் தியேட்டருக்குப் பக்கத்தில் பழைமையும் பங்களா மிடுக்கும் கொண்டிருந்த ஒரு வீட்டின் மூன்றாம் மாடியில் அவர் குடியிருந்தபோது, அங்கு வைத்துச் சந்தித்திருக்கிறேன். அந்த நேரத்தில்தான், 1980 இல் 'பரிவர்த்தனா' என்கிற இலக்கிய அமைப்பு நடத்திய நாடகக் கருத்தரங்கில் அவருடன் நானும் 'வீதி நாடக அனுபவங்கள்' பற்றிக் கட்டுரை வாசித்திருந்தேன். கூத்தைப் பற்றி அரங்கில் அவர் நிதானமாகவும் அழுத்தமாகவும் உரை நிகழ்த்தியதை நேரில் அப்பொழுதுதான் முதன்முதலாகப் பார்த்தேன். அக்கறையும் பொறுப்பும் கோபமும் அவர் பேச்சில் கனிந்திருந்தன. மகஇக தோழரான வீராச்சாமி கூத்தின் - நாடகத்தின் அரசியல் பற்றி அங்குக் கட்டுரை வாசித்தார். அரசியலற்ற எதுவும் கதைக்குத வாது என்பது அவர் கட்டுரையின் கருத்து. அக்கட்டுரை அப்பொழுது பெரிய விவாதத்திற்கு வித்திட்டிருந்தது. விவாதத்தின் முடிவில் 'என் கருத்து தப்புன்னு தெரிஞ்சா சைக்கிளில் திரும்பிப் போகும்போதே இந்தக் கட்டுரையைத் தூக்கி எறிஞ்சிட்டுப் போய்க்கிட்டே இருப்பேன்' என்று சொன்ன ந. முத்துசாமியின் கோபம் எனக்குப் பிடித்திருந்தது. வீராச்சாமியின் பல கருத்துகளுடன் பொருந்திப் போகிறவன் நான் என்று தெரிந்த பிறகும் அவரும் அவர் வீட்டிலிருந்த அத்தனைப் பேரும் எந்தப் பேதமுமின்றி என்னுடன் அன்போடே இருந்தனர். ஸ்கிரீன் அச்சு மூலம் சுவரொட்டிகள் தயாரிக்கிற சூட்சுமங்களைத் தெரிந்து கொள்ள நடேஷைப் பலமுறை அந்த வீட்டில் வைத்துச் சந்தித்திருந்ததும் இப்பொழுது நினைவிற்கு வருகிறது. ஆனால் என் வாய்ப்புக் குறுக்கத்தால் அது அரை குறையாகவே எனக்குள் பதிந்து போனது. அதே போல் ந. முத்துசாமி கேட்டு நான் செய்ய முடியாமல் போனதும் ஒன்றுண்டு. கூத்துப்பட்டறைக்கு வீதி நாடக பாணியில் ஒரு நாடகத்தைப் பண்ணித்தரச் சொல்லி அவர் என்னைக் கேட்டும் என்னால் அதற்கு நேரம் ஒதுக்க முடியாது போயிற்று. இப்பொழுது யோசித்துப் பார்க்கையில், நான் நேரம் ஒதுக்க

முடியாமல் விலகியே போனதற்குக் காரணம், கூத்துப்பட்டறை அப்பொழுது அமெரிக்காவின் ஃபோர்டு ஃபௌண்டேஷன் நிதி உதவியில் இயங்கிக் கொண்டிருந்ததுகூட காரணமாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இருக்கட்டும்!

ஆனால், தமிழகச் சூழலில் ஒரு நவீன நாடகக் குழு, சகோதர நாடகக் குழுக்களைத் தன் பத்தாவது, பன்னிரண்டாவது, பதினான்காவது ஆண்டு நிறைவு களில் நடத்திய நவீன நாடகக் கலைவிழாக்களுக்கு அழைத்து, அவ்விழாக்களைக் குதூகலமாக்கியது என்பது நிஜநாடக இயக்கத்தின் பங்களிப்பில் மிக முக்கியமானது. 1988 (மார்ச் 11-13), 1990 (மார்ச் 9-11), 1992 (மே 22-24) ஆகிய ஆண்டுகளில் நவீன நாடகக் குழுக்களை மதுரைக்கு வருவித்து, அவர்களைக் கொண்டு மூன்று நாட்கள் நவீன நாடக விழாக்கள் நடத்தியது என்பது, முதன்முறையாக மதுரை நிஜநாடக இயக்கத்தின் முயற்சியில், அப்போதைய வருமான வரித்துறை உதவி ஆணையர் திரு செல்வராஜ் அவர்களின் உதவியினால்தான்! 1988 இல் மார்ச் 12 இல் மாலை 6 மணிக்கு மதுரை சீத்தாராம் குப்தா அரங்கில் கூத்துப்பட்டறையின் நாடகம், மகேந்திர விக்கிரமவர்ம பல்லவனின் ‘மத்தவிலாசப் பிரகசனம்’ என்பது ந. முத்துசாமியின் தமிழாக்கத்தில் ‘முற்றுகை’ எனும் பெயரில் வ. ஆறுமுகம் நெறியாளுகையில் நிகழ்ந்தது. ஜெ. மணி, பிரசாத், வ. ஆறுமுகம், கலைராணி, ப்ரீதம், அர்ச்சனா, வேதாசலம் நாயுடு, திருமதி பாசு, கண்ணப்ப. காசி, பன்னீர் செல்வம், பசுபதி, ஜெயகுமார் ஆகியோர் அதில் நடித்திருந்தனர். இதன் ஒளியமைப்பு, வி. பாஸ்கரன் மற்றும் அண்ணாமலை ஆகியோர். 1990 மார்ச் 10 இல், மாலை 6 மணிக்கு சீத்தாராம் குப்தா அரங்கில் கூத்துப்பட்டறையின் ஸீக்ஃப்ரீட் லென்ஸின் ‘நிரபராதிகளின் காலம்’ (தமிழில் ஜி.கிருஷ்ண மூர்த்தி) நாடகம், இங்கபோர்க்மய்யர் & தனுஷ்கோடி ஆகியோரின் நெறியாளுகையில் நிகழ்ந்தது. ஜெ. ஜெயகுமார், எம். பசுபதி, எம்.ஜார்ஜ், பி.ஜோஷுவா, ஏ. லாரன்ஸ், வி. பாஸ்கர், எம். கார்த்திகேயன், சி. அண்ணாமலை, எஸ்.எஸ். கலைராணி, எஸ்.எஸ். கலைச் செல்வன், கே.எஸ்.கே. பிரசாத், எஸ். ஜெயராவ், பி. குமரன் ஆகியோர் அதில் நடித்திருந்தனர். இதன் ஒளியமைப்பு, சி. இரவீந்திரன் மற்றும் போஸ் மருதநாயகம் ஆகியோர். 1992 மே 22 இல், மாலை 5 மணிக்கு மகாத்மா பள்ளியில் கூத்துப்பட்டறையின் நாடகம் ‘சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு-ஓர் உலகப் பிரச்சனை’ என்பது ந. முத்துசாமியின் வடிவமைப்பு நெறியாளு கையில் நிகழ்ந்தது. அதில் பசுபதி, ஜெய்குமார், ஜெயராவ், ஜார்ஜ், ராஜ்குமார், ரவிவர்மா, கலைச் செல்வன், கலைராணி, பாஸ்கர், குமரவேல் ஆகியோர் நடித்திருந்தனர். ஒளியமைப்பு, நடேஷ், போஸ் மருதநாயகம், ஜார்ஜ், பாஸ்கர், பசுபதி ஆகியோர். இவர்கள் யாருமே இப்பொழுது கூத்துப்பட்டறை எனும் முத்திரைப் பதாகையின் கீழ் செயல்பட்டு வருவதாகத் தெரியவில்லை. அதற்கான காரணங்கள் எதுவாகவும் இருக்கலாம். அவர்கள் வேறுவேறு திக்குகளில் வெவ்வேறு பாய்மரங்களில் நாடகக் கொடி பிடித்துப் பயணப்பட்டுக் கொண் டிருக்கலாம். அவர்கள் பிடித்துக் கொண்டிருக்கும் நாடகக் கொடி நூலாக ந. முத்துசாமி இருந்து கொண் டிருக்கிறார் என்பதே உண்மை! அதனாலேயே, ந. முத்துசாமியின் மேலான அவர்களின் ஈடுபாட்டிற்கு அவர்கள் சூட்டிக் கொள்ளும் மகுடமாகத்தான், இந்த விழாவில் அவர்களின் பங்களிப்புப் பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது. இது, தமிழ்ச் சூழலில் மிகவும் ஆரோக்கியமானது. இதற்காகவும் ந. முத்துசாமி என்கிற நாடக ஆளுமையைப் பாராட்டியே ஆக வேண்டும். நிஜ நாடக இயக்கம், மதுரையில் நடத்திய அந்த மூன்று நாடக விழாக்களிலும் தொடர்ச்சியாக ந. முத்துசாமியும் கூத்துப்பட்டறை யினரும் கலந்து கொண்டு, நாடக விழாவின் சமூகத் தேவையை, வரலாற்றுக் கடமையாய்ப் புரிந்து, தன் சிரமங்களை எந்தச் சூழலிலும் பொருட்படுத்தாது, நாடகப் பங்களிப்பை மட்டுமே பொறுப்பாகச் செய்து, தன் கம்பீரக் குரலில் தைரியம் சொல்லி, மதுரையில் நிஜநாடக இயக்கம் நடத்திய நவீன நாடகக் கலைவிழாக்களை வெற்றிகரமாக்கியதற்கு அவருக்கு என்றும் நான் நன்றிசொல்ல வேண்டும். 2000ஆவது ஆண்டில், நண்பர்களின் உதவியுடன், நிஜநாடக இயக்கத்தின் சார்பில் முதன்முறையாக நாடக நாட்காட்டி ஒன்றை உருவாக்கியபோது, அதற்கும் தன் பங்களிப்பை மகிழ்வுடன் செய்து உதவியவர் அவர்! அதேபோல் 1995 இல் மைய சங்கீத நாடக அகாதெமிக்காக ‘முனி’ நாடகத்தை நான் நெறியாளுகை செய்து கொண்டிருக்கும்போது, அந்த முயற்சியைச் சிலர் தரைமட்டமாக்க முயன்று கொண்டிருந்தபோது, நாடக நிகழ்வு முடிந்த இரவு, ந. முத்துசாமியும் பிரசன்னா ராமசாமியும் நாடகத்தைப் பாராட்டி மனந்திறந்து பேசியது எனக்குள் கூடுதல் ‘நாடக நம்பிக்கை’யை விதைத்தது. இதுபோன்ற நம்பிக்கைகளே, நம்மைக் கூடுதல் வீரியத்துடன் நாடகத்தில் செயல்படுத்தும் உந்துசக்திகளாகின்றன. இதுபோன்ற நம்பிக்கைக் குரல்கள் நம்மைச் செழுமைப்படுத்த அப்போதைக்கப்போது நமக்குத் தேவைப்படுகின்றன. அந்த சக்தியாகவும் அவர் இருந்தார் என்பது என்னைப் பொருத்தவரையில் முக்கியமானது. அதற்காகவும், இந்த நேரத்தில் அவருக்கு நான் நன்றிசொல்ல வேண்டும். ●


நெஸ்லிங் புக்ஸ்
பப்ளிஷிங் அன்ட் டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,
புதிய வெளியீடுகள்
Nestling
Illustrated
World Classic Series
More than 50 Titles
Each Book ₹ 70
ILLUSTRATED WORLD CLASSICS
A Tale of Two Cities
Charles Dickens
Peter Pan
J. M. Barrie
Oliver Twist
Charles Dickens
Around the World in Eighty Days
Jules Verne
World
Sir Arthur Conan Doyle
Treasure Island
Robert Louis Stevenson
The Mayor of Casterbridge
Thomas Hardy
White Fang
Jack London
The Jungle Book
Rudyard Kipling
Hard Times
Charles Dickens
The Hunchback of Notre Dame
Victor Hugo
The Call of the Wild
Jack London
The Count of Monte Cristo
Alexandre Dumas
Jane Eyre
Charlotte Brontë
Bestseller

# விறுவிறுப்பான விற்பனையில்...

## மார்க்ஸ்-எங்கெல்ஸ்

## தேர்வுநூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்

## 20 தொகுதிகள்

**பதிப்பாசிரியர்: தமிழ் மார்க்சிய மெய்யியலாளர் ந.முத்துமோகன்**




₹ 5000/-

**ரா.கிருஷ்ணையா, ஆர்.கே. கண்ணன், எஸ்.வி.ராஜதுரை** முதலான தலைசிறந்த மார்க்சிய அறிஞர்களின் மொழிபெயர்ப்பில்

மார்க்ஸ்-எங்கெல்ஸ் தேர்வுநூல்கள் (12 தொகுதிகள்), அரசியல் பொருளாதார விமர்சனத்துக்குப் பங்களிப்பு, டூரிங்குக்கு மறுப்பு, இயற்கையின் இயக்கவியல் முதலான

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள், கடிதங்கள் ஆகிய அனைத்தையும் காலவரிசைப்படுத்தி

சோவியத் அறிஞர்கள் குழு எழுதிய ஆசான்களின் வாழ்க்கை வரலாறுகளையும் சேர்த்து

மொழிபெயர்ப்புகளை மேம்படுத்தி, கலைச்சொற்களைச் செழுமை செய்து வெளியாகியுள்ளது.

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**


41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

அம்பத்தூர்: 044-26359906; ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# எஸ்.வி.ராஜதுரையின்
# இரண்டு புதிய நூல்கள்
# என்.சி.பி.எச். வெளியீடாக...



1. தீவுச் சிறையில் விடுதலை இலக்கியம்
2. மார்க்ஸின் கோட்டும் அடகுக் கடைகளும்

**தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு**



நவ.18 வ.உ.சி.யின் நினைவு தினத்தை யொட்டி இக்கட்டுரை அச்சாக்கம் செய்யப்படுகிறது. ம.பொ.சி.யின் 'எனது போராட்டம்' நூலிலிருந்து தெரிந் தெடுக்கப்பட்ட பகுதியே இக்கட்டுரை.

# சென்னையில் வ.உ.சி.க்கு சிலை வைக்கப் போராடிய துயர வரலாறு

ம.பொ.சி.

*கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் 1936 நவம்பர் 18இல் காலமானார். செயற்கரிய செய்த அப்பெருந்தலைவர் மறைந்தபோது தமிழகப் பத்திரிகைகளில் ஒன்றுகூட அனுதாபத் தலையங்கம் எழுதவில்லை. தமிழ்நாடு காங்கிரசின் பேரால் ராஜ்யத்தின் தலைநகரிலே ஓர் அனுதாபக்கூட்டம் கூட நடத்தப்படவில்லை. இந்த நிலை எனக்கு மன வேதனை தந்தது. தமிழன் என்னும் இன உணர்ச்சி இல்லாமற் போயினும், தேசபக்தி காரணமாக வேனும் சிதம்பரனாருக்குத் தக்க முறையில் அஞ்சலி செலுத்தத் தமிழ்நாடு காங்கிரசார் கடமைப்பட்டிருக் கிறார்கள். ஏன்? அகில இந்திய காங்கிரசுக்கே இந்தக் கடமையுண்டு. ஆயினும் மாபெரும் தியாகியான வ.உ.சிதம்பரனாருக்கு அந்தப் பேறு கிட்டவில்லை. இதனால் மனவேதனை அடைந்த நான், சிதம்பரனாரின் தியாக வரலாற்றை நூலாக்கவும், அவருடைய உருவச் சிலை ஒன்றை சென்னை நகரில் நிறுவவும் ஆண்டு தோறும் அவரது நினைவுநாளைக் கொண்டாடவும் முடிவு செய்தேன். இந்தத் திட்டத்தின் முதல் நடவடிக்கையாக சென்னையில் இருந்த தமிழ்நாடு காங்கிரஸ் மாளிகை முன்பு வ.உ.சியின் முழு உருவச் சிலையை நிறுத்த முயற்சி எடுத்தேன்.*

சென்னை ராயப்பேட்டை காங்கிரஸ் மாளிகை முன் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சியின் முழு உருவச் சிலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சி எடுத்தபோது கடுமையான ஒரு போராட்டத்தை நான் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. இதை நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. எனது பொதுவாழ்க்கையில், முதல்முதலாக நான் வகுப்புவாதியாக வருணிக்கப் பட்டதும் இந்த நேரத்தில்தான். வ.உ.சி தம் வாழ்நாளின் கடைசிக்காலத்தில் கடைப்பிடித்த போக்கும் இதற்கு ஒரு காரணமாக அமைந்தது.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் வ.உ.சிக்கு நம்பிக்கை ஏற்படாததால் 1920இல் அவர் காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டார். ஆம், அவர் கருத்து வேற்றுமை கொண்டது காங்கிரஸ் மேலிடத் தோடுதான். தமிழ்நாட்டுக் காங்கிரசிடம் அல்ல. அப்படியிருந்தும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர் களிலே முன்னணியிலிருந்த பெருந்தலைவர்களில் சிலர் வ.உ.சியை வெறுத்தனர்.

அந்நாளில் தமிழ்நாட்டு அரசியலில் முன்னணியி லிருந்த பிரச்சினை பிராமணர் - பிராமணரல்லாதார் என்ற வகுப்புவாதப் பூசலாகும். அது புயற்காற்று வேகத்தில் வளர்ச்சி பெற்று வந்தது. பிராமணரல்லா தாரின் ஒரே அரசியல் அமைப்பெனத் தன்னை வருணித்துக்கொண்ட நீதிக்கட்சியிலே சேர்ந்து கொள்ளுமாறு அதன் தலைவர்கள் வ.உ.சிக்கு அழைப்பு விடுத்தனர். ஆனால், தேசபக்தி மிக்க தியாகசீலரான வ.உ.சிதம்பரனார் பிரிட்டிஷ் ஆட்சி யுடன் ஒத்துழைத்துக்கொண்டிருந்த நீதிக்கட்சியில் சேர மறுத்துவிட்டார். விடுதலைப்புரட்சிக்கு எதிராகச் செயல்பட்ட அந்தக் கட்சியை சிதம்பரனார் மனதார வெறுத்தார். ஆயினும், நீதிக்கட்சி கோரிய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அவர் ஆதரித்தார். பிராமணர்களுக்கு அவர்களுடைய ஜனத்தொகையின் விகிதாச்சாரத்திற்கு அதிகமாக அரசாங்க உத்தியோகங் களில் இடமளிக்கக் கூடாதென்பது நீதிக்கட்சியின் கொள்கை. மக்கள்தொகையில் பிராமணரல்லா தாரின் சதவிகிதத்திற்கேற்ப அவர்களுக்கு உத்தி யோகங்கள் தரவேண்டுமென்பது அந்தக் கட்சியின் கோரிக்கை. இந்தக் கொள்கைக்கும் கோரிக்கைக்கும் வ.உ.சிதம்பரனார் ஆதரவு காட்டினார். அதற்குக் காரணம், நாட்டின் அரசியலை - குறிப்பாக விடுதலைப் போராட்டப் பாசறையை வகுப்புவாதப் பூசலிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று அவர் கருதியதுதான்.

**வ.உ.சி. நிலை**

பிராமணர் - பிராமணரல்லாதார் என்ற வகுப்பு வாதப் பூசல் விடுதலைப் பாசறையையே பிளவு படுத்திவிடுமோ என்ற அச்சம் அந்நாளில் வ.உ.சியைப் போன்ற பிராமணரல்லாத தேசபக்தர்களுக்கு இருந்தது. அதனால், நீதிக்கட்சி கோரிய வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தைத் தவிர்க்கமுடியாத ஒன்றாகக் கருதி வ.உ.சி அதனை ஆதரித்தார். இதனாற்றான், அன்று வ.உ.சியை வகுப்புவாதியாகக் கருதும் நிலைமை ஏற்பட்டது. தேசத்துரோகி என்று கூட வருணித்துப் பிரச்சாரம் செய்தனர். இதனை, வ.உ.சியின் வாக்கைக் கொண்டே அறிய முயல்வோம்.

“தேச அரசாட்சியை மீட்பதற்காகத் தேச ஜனங்கள் சாத்வீக எதிர்ப்பைக் கைக்கொண்டு போராடும் காலத்தில் தேசாபிமானமில்லாது புறங் காட்டி ஓடுகின்றீரே” என்று என்னிடம் கேட்ட ஒரு பாரிஸ்டர் புன்மொழியும், ‘ராஜாங்கத்தாரிடம் கைக்கூலி பெற்று தேசத்துரோகம் செய்து கொண் டிருக்கிறான் சிதம்பரம் பிள்ளை’ என்று பொருள் படும்படி எழுதிய ஒரு பத்திரிகாசிரியர் புன்மொழியை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. தேசாபி மான ஒளி நாளுக்கு நாள் வளர்வதேயன்றிக் குறைவதும் அழிவதும் இல்லை.


“விளக்குப் புகவிருள்சென்றாங்கு ஒருவன்
தவத்தின்முன் நில்லாதாம் பாவம்”

என்றபடி தேசாபிமான ஒளிமுன் தேசத்துரோக இருள் நில்லாது, இவ்வுண்மையினை அவர் அறிவாராக.”

(வ.உ.சியின் ‘எனது அரசியல் பெருஞ்சொல்’ என்ற நூலிலிருந்து)

வ.உ.சிதம்பரனார், காங்கிரசிலிருந்து விலகிய பின்னரும் காந்தியடிகளிடம் மாறாத மதிப்பு வைத்திருந்தார். தமது சுயசரிதையில், “உலகெலாம் புகழும் நலனெலாம் அமைந்த காந்திமா முனிவன்” என்று வருணித்தெழுதி காந்தியடிகளை வழிபடு கின்றார். காங்கிரசுக்கு வெளியேயிருந்த நிலை யிலும், வேலூர் அ.குப்புசாமி முதலியார், சென்னை எம்.எஸ்.சுப்பிரமணி அய்யர், சிதம்பரம் என்.தண்டபாணி பிள்ளை ஆகிய தேசபக்தர்கள்மீது அரசு தொடுத்த அரசு நிந்தனை வழக்கில் ஆஜராகி, அந்தத் தேச பக்தர்களுக்கு விடுதலை தேடிக் கொடுத்தார். ஆம், பிரதிபலனை எதிர்பாராமல்.

இவ்வளவிருந்தும், வ.உ.சிதம்பரனாரின் தேச பக்தியைச் சந்தேகித்தனர் அந்நாளைய காங்கிரஸ் காரர்கள். 1939ஆம் ஆண்டில் வ.உ.சி சிலை நிறுவு வதற்கு நான் செயலாளராக இருந்த சென்னை மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவைக் கோரினேன். நான் முன்மொழிந்த வ.உ.சி சிலை நிறுவ ஆதரவு தரும் தீர்மானம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டு விட்டதென்றாலும்



அக்கமிட்டியின் தலைவர் எஸ்.சத்தியமூர்த்தி காங்கிரஸ் நிதியிலிருந்து பணம் கொடுக்க மறுத்து விட்டார். அவர் அப்படி மறுத்தது முறையல்ல வென்றாலும், அவரோடு போர் நடத்தி வகுப்புவாதப் பூசலை வளர்த்துவிட நான் விரும்பவில்லை. அதனால் பொதுமக்களிடம் பொருளுதவி பெறுவ தென்ற முடிவுக்கு வந்தேன்.

சென்னை டிராம்வே தொழிலாளர் சங்கம், என் தலைமையில் இயங்கிவந்த முதல் சர்க்கிள் காங்கிரஸ் கமிட்டி, இராயபுரம் கணேஷ் அலுமினியம் தொழிற் சங்கம் ஆகியவற்றிடமிருந்தும், இன்னும் பல நிறுவனங்களிடமிருந்தும் பொருளுதவி பெற்றேன். சென்னை ஆமில்டன் வாராவதி அருகிலுள்ள விறகு தொட்டிக் கடைக்காரர்களிடமும் பொருள் திரட்டினேன். என்ன திரட்டினாலும், வ.உ.சியின் முழு உருவச்சிலை செய்வதற்குத் தேவைப்படும் அளவுக்குப் பொருள் கிடைக்கவில்லை. அதனால், முக உருவச்சிலை மட்டும் நிறுத்துவதென்ற முடிவுக்கு வந்தேன். சென்னை பக்கிங்காம் - கர்னாடிக் ஆலைத் தொழிலாளர் தலைவரும் காங்கிரஸ்காரருமான பெரம்பூர் திரு.எஸ்.பக்கிரிசாமிப் பிள்ளை, குறைந்த விலைக்கு வ.உ.சியின் முக உருவச் சிலையைத் தயாரித்துத் தர முன்வந்தார்.

சிலையைக் காங்கிரஸ் மாளிகையின் முன்புள்ள கொடிமரத்துக்கு அருகே வைக்கவேண்டுமென்பது என் விருப்பம். ஆனால், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அதற்கு அனுமதி தரவில்லை. சிலை வைப்பதற்கு வேறு இடத்தையேனும் தேர்ந்தெடுத்துக் கூறுமாறு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருக்கு எழுதினேன். அதற்குப் பதிலே கிடைக்கவில்லை. சிலைத்திறப்பு விழாவுக்குத் தேதியை நிச்சயித்துவிட்டேன். காங்கிரஸ் மகா சபையின் மாபெரும் தலைவர்களில் ஒருவராகக் கருதப்பட்ட சேலம் திரு.சி.விஜயராகவாச்சாரியாரை நேரில் சந்தித்து சிலையைத் திறந்துவைக்க அவரது இசைவைப் பெற்றுவிட்டேன். ஆனால், தமிழ்நாடு காங்கிரசின் அனுமதி கிடைக்காததால், குறித்த தேதியில் சிலைத்திறப்பு விழா நடத்துவது சாத்திய மில்லை என்ற நிலை ஏற்பட்டது. இதனால் தமிழ்நாடு காங்கிரசின் மீது சினங் கொண்டவனாகி, அதன் அனுமதிக்காகக் காத்திராமல், சிலைத் திறப்பு விழாவை நடத்தத் துணிந்தேன்.

### அய்யரின் ஆத்திரம்

திரு.எஸ்.சத்தியமூர்த்தி அய்யரவர்கள், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தா ராதலால், விழாவுக்கு அவரே தலைமை வகிக்க வேண்டுமென்று நான் விரும்பி, நண்பர் த.செங்கல்வ ராயன் அவர்களுடன் சென்று நேரில் அவருக்கு அழைப்பு விடுத்தேன். அப்போது அவர் என்மீது காட்டிய ஆத்திரத்தையோ, என் மீது பொழிந்த பழிச் சொற்களையோ நான் இங்கு விளக்க விரும்ப வில்லை. என்னை ஜஸ்டிஸ் கட்சிக்காரனாகவே முடிவு செய்துகொண்டு, வகுப்புவாத உணர்ச்சி காரணமாகத்தான் நான் ஜஸ்டிஸ் கட்சிக்காரரான வ.உ.சிக்குக் காங்கிரஸ் மாளிகை முன்பு சிலை வைக்க முயல்கிறேன் என்று பழி சுமத்தினார். நல்லவேளையாக நண்பர் த.செங்கல்வராயன் அய்யரை சமாதானப்படுத்தினார். என்னைப் பற்றி அவர் கொண்ட தவறான கருத்தைப் போக்க முயன்றார். அதன்பின், வ.உ.சி சிலைத் திறப்பு விழாவுக்குத் தலைமை தாங்க அய்யர் இணங்கினார். "சிலையைத் திறந்துவைக்க சேலத்திலிருந்து திரு.விஜயராகவாச்சாரிதான் வரவேண்டுமா" என்று கேட்டார். நான், அந்தப் பெரியவரை நேரில் சென்று அழைத்து அவரும் இணங்கிவிட்டதால், அதிலே மாறுதல் கோரவேண்டாமென்று அய்யரை வேண்டிக் கொண்டேன். எனது வேண்டுகோள் பலிக்காமற் போனதால் சிலையைத் திறக்க திருச்சி திரு.டி.எஸ்.எஸ் இராசனை அழைப்பதென்று முடிவானது.

### பொம்மைக் கலியாணம்

*21-12-39* அன்று ராயப்பேட்டை காங்கிரஸ் மாளி கையில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனாரின் சிலைத்திறப்பு விழா பொம்மைக் கலியாணம் போன்று நடத்தப் பெற்றது. ஒரு மணி நேரத்தில் விழா முடிக்கப்பட்டுவிட்டது. தமிழர் தலைவர் களெல்லாம் கட்சி வேறுபாடின்றி அந்த விழாவில் கலந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்பினேன். தமிழ்ப் பெரியார் திரு.வி.கலியாணசுந்தரனார், அப்போது இந்து மகாசபையின் அகில இந்தியப் பொதுச் செயலாளராகவிருந்த டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, கம்யூனிஸ்டான தோழர் சிங்காரவேலு செட்டியார், தொழிற்சங்கத் தலைவர் திரு.வி.சக்கரைச் செட்டியார் ஆகிய முதுபெருந் தலைவர்கள் நால் வரையும் நேரில் சந்தித்து விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தேன். என் அழைப்புக்கிணங்கி அவர்களும் விழாவில் கலந்துகொண்டனர். ஆனால், விழாத் தலைவர் அந்தப் பெருந்தலைவர்களுக்கு வ.உ.சியை வாயார வாழ்த்திப்பேச வாய்ப்பளிக்க வில்லை. இது எனக்கு மிகுந்த மனவேதனையைத் தந்ததென்றாலும், அன்றைய சூழ்நிலையில் அதைச் சகித்துக்கொள்வதைத் தவிர எதிர்த்துப் போராட வழி யில்லாமலிருந்தது. சேலம் சி.விஜயராகவாச் சாரியார், வ.உ.சியின் சிறப்பியல்புகளைப் பாராட்டியும், விழாவை வாழ்த்தியும் செய்தி அனுப்பியிருந்தார்.

நாமக்கல் கவிஞர், யோகி சுத்தானந்த பாரதியார் ஆகியோர் இந்த சிலைத் திறப்பு விழாவுக்கென்றே அனுப்பியிருந்த கவிதைகளை என் அருமை நண்பர் ஆரியகான கே.எஸ்.அனந்தநாராயண அய்யர் மிகுந்த உணர்ச்சியோடு பாடினார். பத்திரிக்கைகள் எல்லாம் விழா நிகழ்ச்சியை சிறப்பாகப் பிரசுரித்திருந்தன. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிக்கை துணைத் தலை யங்கம் எழுதி வ.உ.சிக்கு அஞ்சலி செலுத்தியது.

வ.உ.சி சிலை திறந்த மறுநாள் இராயப் பேட்டை காங்கிரஸ் திடலிலே கதர் சுதேசிப் பொருட்காட்சி ஆரம்பமானது. நான் ஏற்கெனவே கூறியதுபோன்று அந்தப் பொருட்காட்சியில் தீ விபத்து ஏற்பட்டு பொருட்காட்சிச் சாலையிலிருந்த பொருட்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிட்டன. தீ விபத்திலே தப்பிய பொருட்களில் வ.உ.சி சிலையும் ஒன்றாகும். துரதிர்ஷ்டமென்னவென்றால், தீயாலும் தீண்டப்படாத வ.உ.சி சிலையை அந்தத் தீவிபத்துக்குப் பின்னர் யாரோ ஒரு தீயவன் சேதப் படுத்திவிட்டான். அதனால் சிலையைப் பழுது பார்க்க அது இருந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டியதாயிற்று.

### எங்கெங்கும் வ.உ.சி

வ.உ.சியின் சிலையை நிறுவ நான் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு ஏற்பட்ட எதிர்ப்பை மிகவும் சுருக்கமாகத்தான் கூறியிருக்கிறேன். ஆனால் என் ஆற்றலையும் மீறிய ஒரு கடுமையான போராட்டத்தை நான் சமாளிக்கவேண்டி இருந்தது. அதனால் முழு உருவச்சிலை எடுப்பதென்ற முயற்சி முக உருவச் சிலையாக மாறியது. சிலைத் திறப்புவிழாவை நான் நினைத்தபடி பெரிய அளவில் நடத்த முடியாமற் போய்விட்டது. சிலையைத் திறந்தபின்னரும் என் மனத்திற்கு அதிர்ச்சி ஏற்படுத்தும் வகையில் அது சேதப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று நாடெங்கும் வ.உ.சிக்கு எண்ணற்ற நினைவுச்சின்னங்கள் எழுப்பப் பட்டிருக்கக் காண்கிறோம். எண்ணற்ற பூங்காக் களுக்கும், வீதிகளுக்கும், குடியிருப்புகளுக்கும், பெரிய கட்டடங்களுக்கும் வ.உ.சியின் பெயர் வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். தூத்துக்குடி துறைமுக வாயிலிலும் வ.உ.சியின் முழுஉருவச் சிலைகள் கம்பீரமாகக் காட்சியளிக்கக் காண்கிறோம். இதற்கெல்லாம் காரணம் 1939இல் சென்னை காங்கிரஸ் மாளிகை முன்பு வ.உ.சியின் முக உருவச்சிலையை நிறுத்திய பின்னர் அவரது புகழ் பரப்ப நான் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியாகும். ●

# அமோக விற்பனையில்...
# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





**தமிழகத்தில் சாதி உருவாக்கமும்**
**சமூக மாற்றமும்**
(பொ.ஆ.800-1500)
நொபொரு கராஷிமா, எ.சுப்பராயலு

₹ 70/-





**இந்தியத் தத்துவங்களும்**
**தமிழின் தடங்களும்**
ந.முத்துமோகன்

₹ 370/-





**பிராமண போஜனமும்**
**சட்டிச் சோறும்**
இடைக்காலத் தமிழகத்தில் வைதீகமும்
சாதி உருவாக்கமும்
ஆ.சிவசுப்பிரமணியன்

₹ 75/-





**கார்ல் மார்க்ஸ்**
**வாழ்வும் பணியும்**
தா.பாண்டியன்

₹ 140/-




**லெனின் என்னும் மனிதர்**
தொமாஸ் க்ரொவ்ஸ்
தமிழாக்கம் எஸ்.வி.ராஜதுரை


₹ 155/-




**சோமநாதர்**
வரலாற்றின் பல குரல்கள்
ரொமிலா தாப்பர்

₹ 300/-

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




**புலம் பெயர்ந்தோர் இலக்கியம்**

முனைவர் பா.ஆனந்தகுமார்

விலை ₹ 80/-




**எண்பதுகளில் தமிழ்க் கலாச்சாரம்**

ராஜ் கௌதமன்


விலை ₹ 100/-




**லண்டனில் சிலுவைராஜ்**

ராஜ் கௌதமன்


விலை ₹ 145/-




**குழந்தைகளுக்கான ஆப்பிரிக்கக் கதைகள்**

தமிழில் : எம். பாண்டியராஜன்


விலை ₹ 99/-




**சே.ராமானுஜத்தின் நாடக வாழ்க்கை**

சண்முக சர்மா ஜெயப்பிரகாச சர்மா


விலை ₹ 365/-




**தமிழால் மருத்துவக் கல்வி முடியும்**

டாக்டர் சு.நரேந்திரன்

விலை ₹ 165/-




**பீகாரிலிருந்து திகார் வரை**

கன்னையா குமார்


விலை ₹ 110/-




**பழந்தமிழில் எழுத்தியல் ஆய்வுகள்**

முனைவர் சுபாஷ் சந்திரபோஸ்

விலை ₹ 155/-




**சொல் பண்பாட்டு அடையாளம்**

இரா.வெங்கடேசன்

விலை ₹ 200/-



# பண்டைய கால மகளிர் நோய், மகப்பேறு மருத்துவம்

(GYNAECOLOGY AND OBSTETRICS)

டாக்டர் சு.நரேந்திரன்

**ச**ங்க இலக்கியங்களிலிருந்து சித்தர் இலக்கியம் வரை பெண்களின் நோய்களைப்பற்றியும், கரு உருவாவது முதல் பிரசவம் வரையிலும், அத்துடன் அதில் நேரும் பல இடையூறுகளைக் குறித்தும் பிறவிக் குறைபாடுகள் பற்றியும் இன்றைய அறிவியலில் கூறப்படும் உடலியக்கத்திற்கு ஒப்பக் கூறப்பட்டுள்ளன.

**காமத்தூண்டுதல்:**

சங்க நூல்களில் தொய்யில் எழுதும் முறை மகளிரிடையே பரவலாகக் காணப்பட்டது. திண்ணிய வயிரத்தையுடையதை அரிய சந்தனத்தை மருதப் பூவுடன் கலந்து இளமுலை மீது தடவி அதன் ஈரம் புலருமுன்னே வேங்கை மலரின் நுண்ணிய தாதை அப்பி, மேலே விளவின் சிறிய தளிரைக்கிள்ளி முலையின் மீது தடவுவர். இவ்வாறு செய்வதால் அழகை மிகுவித்து, காமம் தூண்டப்படும் என்று கருதுவர். இதனைத் தற்பொழுது 'Vegetable Bath' என்று இன்றைய பாலியலாளர் குறிப்பர். *(திருமுருகு: ப. 30).*

**கருவுறுதலும் உடல் இயக்கமும்:**

மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து கருவுறுதல் என்பது, "சூல்", என்று குறிக்கப்படுவதும், ஒரு பெண் முதன் முதலில் கருவுறுதல் தலைச் சூல் அல்லது கடுஞ்சூல் (ஐங்குறுநூறு: 271-309) எனவும்; குறைப்பிரசவம் இயல்பு மீறிய செயலாகவும் கருதப்பட்டது. முழுகாலக் கர்ப்பம் நிறைசூல் எனவும் அழைக்கப்பட்டது. இது போல குறுகிய காலக் கருச்சிதைவு உறுப்பில் (உறுப்பு + இல்) பிண்டம் என்றழைக்கப்படுவதை,

"சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்" (புறம்: 28-1)

என்று புறத்தில் குறிப்பிடப்படுகிறது.

பூப்பு எய்திய மூன்று நாட்களும். தலைவி, தலைவனைப் பிரிந்து உறைவாள். மகப்பேறு நிகழும் இல்லத்தினை ஈனில் (குறுந்தொகை - 85) என்று குறித்தனர். இலங்கையில் இச்சொல் இன்றும் வழக்கிலுள்ளது. மகப்பேறு அடைந்தவுடன் சின்னாளளவு சிற்சில மகளிர்க்கு அல்கும் பக்க மெங்கும், வரி, வரியாகத் தோல் விரிவடையும். இதனை வரித்திவலை "அல்குல்" என்று குறித்தனர் (நற். 370). சூல் முதிர்ந்து அசையும் இயல்புடைய நிறைசூல் மகளிர் மார்பகம் பருத்துப் பால் கட்டி யிருக்கும். மகவு ஈன்றபின் வெண்கடுகை அரைத்து நெய்யுடன் கலந்து உடம்பில் பூசிக்கொள்வர். (நற். : 370).

**கரு உற்பத்தி:**

திருமந்திரம் இரண்டாம் தந்திரத்திலுள்ள 14-ஆவது அதிகாரம் கரு உற்பத்தியைக் குறிக்கின்றது. இதிலுள்ள 39 பாடல்களும் தாய், தந்தையின் ஜீவ அணுக்கள் எவ்வாறு கலந்து குழந்தை உண்டாகிறது என்பதை விரிவாகக் காட்டுவதை

"ஆதினம் ஆருயிர் கரு உருவாகும்
விதங்கள் ஆக்குகின்றான்
கர்ப்பக் கோளனாக உள்ளிருந்து." (436)

"பூவும் மொட்டும் பொருந்த, அலர்ந்த பின்
காவுடைத் தீபம் (கரு) கலந்து பிறந்திடும்." (464)

"விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதல் ஐந்தும்." (440)

"புருடன் உடலில் பொருந்து மற்று, ஓரார்
திருவின் கருக்குழி தேடிப் புகுந்தது
உருவம் இரண்டாக ஓடி விழுந்தது." (439)

என்ற பாடல் வரிகள் சுட்டியுள்ளது.

பூவும் மொட்டுமாக, பெண்ணும், ஆணும் கலந்து போது, பெண்ணின் கருக்குழியைத் தேடிப்புகுந்து, ஆண் ஜீவ அணுக்கள் உருவம் இரண்டாக ஓடி விழுந்தது என்னும் திருமூலரின் கருத்தை இன்றைய அறிவியலும் ஒப்புகிறது.

பெண்ணின் கருவணுவிலும், ஆணின் விந்தணு விலும் 46 இனக்கீற்றுகள் உள்ளன. அவை இரண்டாக இணைந்து 23 ஜோடி இனக்கீற்றுகளாக உள்ளன. இதுவே பண்பினக் கீற்றுகள் எனவும், ஆண், பெண் பாலின வேறுபாட்டை உணர்த்தும் ஒரு ஜோடி இனக்கீற்றுகளைப் பாலினக் கீற்றுகள் எனவும் அழைப்பர். ஆண், பெண் ஆகிய பாலினக் கீற்றுகளின் வேறுபாட்டை ஆணின் விந்தணுவில் காண இயலும். பெண்ணின் கருவணுவில் உள்ள இரண்டு பாலினக் கீற்றுகளும் அமைப்பில் ஒரே சீராக இருந்து XX என்று அழைக்கப்படுகின்றன. ஆணின் விந்தணுவில் உள்ள இரு பாலினக் கீற்றுகளும் அமைப்பில் ஒரே சீராக இராது. ஒன்று பெரிதாகவும் மற்றொன்று சிறிய தாகவும் உள்ளன. பெரிய பாலினக் கீற்று 44 X ஆகும். சிறிய பாலினக்கீற்று Y என்றழைக்கப்படும். எனவே பெண்ணின் கருவணுவில் 44 பண்பினக்கீற்றுகளும் 44 + XX ஆகும். ஆணின் விந்தணுவில் உள்ள 44 பண்பினக்கீற்றுகளும் 44 + XY ஆகும்.

பெண்ணின் கருக்குழியில், ஆணின் ஜீவ அணுக்கள் ஒடிவிழுந்து இரண்டாகும் என்பது இன்றைய அறிவியலோடு ஒத்து நிற்கிறது.

ஆண், பெண் உறவு கலந்து கரு உருவாகும் நிலையைப் பற்றிக் கூறும் போது;

"சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியும்
அக்கிர மத்தே தோன்றும் அவ் யோனியும்
புக்கிடும் எண் விரல் புறப்பட்டு நால் விரல்
சுக்கிரம் எட்டும் சாணது ஆமே."

(திருமந்திரம் பா. எண். 464)

என்ற பாடலில் ஆணின் வெண்ணிற உயிரணுவும், பெண்ணின் செந்நிற உயிரணுவும் எட்டு விரற் கடையளவு தத்தம் இடத்தினின்று வெளிப்பட்டு, பெண்ணின் உயிரணுவுடன் சேர்ந்து, நான்கு விரற் கடையளவு உள்ளே சென்று எண் சாண் உடம்புக்கு வழி வகுக்கும் என்றும் "மோகத்தில் ஆங்கொரு முட்டை செய்தானே" (திருமந்திரம்: 465) எனத் தொடங்கும் பாடல் வரிகளில் இருவரது மயக்க நிலையிலும் ஒரே ஒரு கரு முட்டையே வெல்லும் தன்மை கொண்டது என்னும் மருத்துவ அறிவியல் உண்மையையும் புலப்படுத்துகிறது.

**கருவமையும், தாயின் உடற்கூறு:**

ஆணா! பெண்ணா! என்று பால் வேறுபாடு அறிய புணர்ச்சியின் போது பிராணவாயு வலது நாசியில் இயங்கினால், பிறப்பது ஆணாகும். இடது

நாசியில் இயங்கினால் பெண்ணாகும். அப்படி இன்றி அந்நிலையில் பிராண வாயுவை அபான வாயு எதிர்த்தவருக்கு இரட்டைக் குழந்தை பிறக்கும். பிராண வாயு இரு மூக்கிலும் இயங்கினால் பிறப்பது அலியாகும்.

(திருமந்திரம்: 482)

கருவமையும் போதும், கரு வளரும் போதும் தாயின் வயிறு மலம், சிறுநீர் மிகாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் பிறக்கும் குழந்தை ஊமை, குருடு, செவிடாக இல்லாமல் அறிவுடன் விளங்கும்.

(திருமந்திரம்: 1941)

**கருவும், கரு வளர்ச்சியும்:**

**"மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து**
**ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்ததும்"**

கருவில் வளர் நிலைகளை மாணிக்கவாசகர் தம் போற்றித் திரு அகவல் பகுதியில் மிக நுட்பமுடன் விளக்குகிறார்.

உயிரானது வினைக்கேற்பப் பல பிறவிகளை அடைகின்றது. மானிட யோனிவழி மனிதப் பிறவியை எய்துகிறது. கருப்பையில் இருக்கும் போது ஒன்றையொன்று ஒத்துள்ள உயிர் தத்துவங் களுக்கிடையில் போராட்டம் ஏற்பட்டு, அவற்றில் ஏதேனும் ஒன்று மேம்பாட்டுடன் வளர்கிறது. தான்றிக்காய் அளவு இருக்கும் கருவானது இரு மாதத்தில் வலுவடைந்தும், மூன்றாம் மாதத்தில் தாயின் கருப்பையில் இருக்கும் சுரோணித நீரில் புதையுண்டு போகாமலும், நான்காம் மாதத்தில் இருளிலிருந்து உயிர் பிழைத்தும், ஐந்தாம் மாதத்தில் கருக்கலையாமலும், ஆறாவது மாதத்தில் அவயங்கள் முறையாக அமைந்து உயிர் வாழ்ந்தும், ஏழு, எட்டு, ஒன்பது மாதங்களில் பல்வேறு துன்பங்களிலிருந்து நீங்கியும், பத்தாவது மாதத்தில் தக்க நேரம் வரும்போது பிழைத்தும், இப்பிறப்பு எய்தலாயிற்று என்னும் கருத்தினை மாணிக்கவாசகர் 10 மாதம் கருப்பையில் நிகழும் பல்வேறு நிலைகளைக் குறிப்பிடுவது வியப்பிற்குரியது.

கரு முதலில் குழம்பாக இருந்து பின்னர்க் கட்டியாகி மூளை, நரம்பு, எலும்பு, தோல் முதலியன உண்டாகப்பெற்று உருவாகும். இந்த உண்மையை ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் சுட்டியுள்ளார். (தாயின் மணி வயிற்றில்: அ.மு.பரமசிவானந்தம்: பக். 58-60)

மேலும் உயிர் கருவினுள் அருவுடம்போடு இருக்கும் நிலையினைப் புலம்பு நிலை என்று குறிப்பிடுவர் என்றும், கரு தாயின் வயிற்றில் முந்நூறு நாட்கள் தங்கும் என்றும், திருமந்திரம் (பா. 437, 440) விளக்குகிறது.

இதுபோலவே; (பட்டினத்தார் உடற்கூற்று வண்ணம்):

**"ஒருமட மாதும் ஒருவனுமாகி**
**இன்ப சுகம்தரும் அன்பு பொருந்தி**
**உணர்வு கலங்கி ஒழுகிய விந்து**
**ஊறு சுரோணிதம் மீது கலந்து**
**பனியில் ஓர் பாதி சிறு துளி மாது**
**பண்டியில் வந்து புகுந்து திரண்டு**
**பதும அரும்பு கமடமி தென்று**
**பார்வை மெய் வாய் செவி கால் கைகள் என்று**
**உருவமும் ஆகி.**
**உயர வளர் மாதம் ஒன்பதும் ஒன்றும்**
**நிறைந்து மடந்தை**
**உதரம் அகன்று புவியில் விழுந்து**
**ஓரறிவு ஈரறிவாகி வளர்ந்து."**

என்று பட்டினத்தார் குறிப்பிடுவது மகப்பேறு மருத்துவ வேரைத் தொடுகின்றது.

தேவாரம் பாடிய மூவர்க்குப் பிற்பட்ட காலத்தவரான கல்லாடர் எனும் புலவர் எழுதிய கல்லாடம் கருவமையும் காட்சியையும் கருவுற்ற தாயின் உடல் நிலையையும்

**"புல்நுனி பனியென மதல்"**

என்று குறிக்கிறது.

உயிர்கள் கருவாகும் காலம் புல்நுனி மேல் வீழ்ந்த பனித்துளி அளவிற்றாக இருக்கும் என்பதை

**"அறுகுநுனி பனியனைய சிறிய துளி**
**பெரியதொரு ஆகமாகி"**

என்பது அருணகிரியார் திருப்புகழ் கூறுகிறது.

**வயா நோய்:**

இவ்வாறு கருவுற்ற பின் தாயின் உடலில் ஏற்படும் மாற்றம் வயா நோய் காரணமாக அவள் உடம்பில் தோன்றும் மாற்றங்களை

**"பீர்க்கம் பூவின் சிறம் போலப் பசலை**
**பூத்தது புளிச்சுவையை விரும்பினாள்**
**இல்லத்தின் கண் உண்டான புகை படிந்த**
**கரிய மண்ணை வாயிட்டுச் சுவைத்தாள்."**

என்ற பாடல் வரிகள் விளக்குகிறது.

முலைக்கண் கருத்தன, கண்களில் குழி விழுந்தது என்ற அறிகுறிகள் தற்கால மகப்பேறு நூல்களில் குறிக்கப்பெறும் அறிகுறிகளைப் பெரிதும் ஒத்ததாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

கருவுற்ற பெண்களுக்கு முதல் மூன்று மாதங் களில் மசக்கை மிகுதியாக உண்டாகும். இக்காலக் கட்டத்தில் வாந்தி, குமட்டல் போன்ற உணர்வுகள் ஏற்பட்டுத் துன்புறுவர். இதுவே சங்க காலத்தில், "வயா நோய்," வெட்கை நோய் எனக் குறிப்பிடப் பட்டது.

"வயா வென் கிளவி வேட்கைப் பெருக்கம்"

என்பதில் வயா ஒருவிதமான நிலை மாற்றம் எனப் படுகிறது. கருவுற்ற பெண்களுக்கு உணவு, மணம் அல்லது சுவையினாலோ ஏற்படும். இதை ஆங்கிலத்தில் 'Picca' என்பர்.

இந்நோய் உள்ள மகளிர் புளிப்புச் சுவையைப் பெரிதும் நாடுவர். புளியங்காய் (கலித். : 28), மண் (புறம் : 20), போன்றவற்றை உண்டு, இந்நோயின் துன்பத்திலிருந்து விடுபடுவர்.

"பசும்புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர்"

என்று (குறுந்தொகை - 287 : 4-5) குறிப்பிடுகிறது.

இதுபோல மற்றவர் அறியாது மண் உண்ணுவதை;

"வயவுறு மகளிர் வேட்டு ணின் அல்லது
பகைவர் உண்ணா அரு மண்ணினையே"
(புறம்: 20: 14-15)

என்று புறமும் குறிப்பிடுகிறது.

பிள்ளைப் பேற்றின் பின் 'நெய்யணி முயக்கம்' என்று குறிப்பிடக் கூடிய எண்ணெய் நீராடும் செயலைப் பெண்கள் மேற்கொண்டனர் என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. (தொல். பொருள், பேரா. நூற். 46).

இது போலவே பிரசவித்த பெண்ணை நெய்யில் குளிப்பாட்டும் வழக்கு சங்க காலத்தில் இருந்து வந்துள்ளதை நற்றிணை,

"பசு நெய் கூர்ந்த மென்மை யாக்கை
சீர்கெழு மடந்தை ஈர்க்கை பொருந்த,"
(நற்றிணை: 405-10)

என்று குறிப்பிடுகிறது.

இதில் பிரசவித்த தாய்க்கு அசதி, வலியைப் போக்க வெண்கடுகு, உடல் வெப்பத்தைத் தணிக்க பசுநெய் ஆகியவைகள் பயன்பட்டிருப்பது அறிய வருகிறது.

இத்தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தாய்ப் பாலூட்டி வளர்த்ததையும், (நற்றிணை - 355: 1-2). தாய்ப்பால் குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருப்பின் அவர்களைக் குளிர்ந்த நீரில் குளிப்பாட்டி யதும் (பத்துப்பாட்டு- 6: 601-602) அறியப்படுகிறது.

**கருப்பை அறுவை முறை** (Caesarean):

காந்தபுரத்தை ஆண்டவேந்தன் மகள் பிரசவ வேதனையால் துடிப்பதைப் பார்த்த நறையூர் மருத்துவச்சி வயிற்றைக் கிழித்து, குழந்தையை எடுத்தாள். அவள்தன் மருத்துவத் திறமையால் குணப்படுத்தினாள் என்று கொங்குமண்டலச் சதகம் (92) கூறுகிறது.

"குறைவறு தெண்ணீர் நதியணை காந்தபுரத் தொரு நல்
லிறை மகளார் மக வீனப் பொறாதுட லேங்க வகிர்
துறை வழி பேற்று மகிழ்வூட்டு மங்கல தோன்றி வளர்
மறைவழி நேர் நறையூர்நாடு சூழ் கொங்கு மண்டலமே"

என்ற பாடல் வழி இந்நிகழ்ச்சியினை எடுத்துரைக்கிறது.

**கருச்சிதைவு:**

சங்க காலத்தில் கருச்சிதைவு ஒரு பாவச் செயலாகவும், அதற்குப் புறம்பான ஒரு செய லாகவும், நீதி முறைக்கும் ஒழுக்கம் பண்பிற்கு மாறு பட்டதாகவும் சித்திரிக்கப்படுகிறது. மருத்துவர் களோ அல்லது மற்றவர்களோ கருச்சிதைவுக்கு ஊக்கம் அளிக்கக்கூடாது என்று வற்புறுத்தப்பட்டது. மீறினால் அறமே அவர்களைத் தண்டித்துவிடும் என்று நம்பப்பட்டது. இதனை;

"மாணிழை மகளிர் கருச் சிதைத் தோர்க்கும்
உய்தி இல்லென அறம் பாடிற்றே" (புறம்: 34)

என்று புறநானூறு விளக்குகின்றது.

**பிறவிக் குறைபாடு:**

(மக்கள்) பிறக்கும்போது குழந்தை பல மாறுபாட்டுடன் பிறப்பது உண்டு. அதில் ஒருவகை கவைமகன் எனும் வியப்பான பிறவி. தாயின் கருவில் இரு பகுதிகளாகப் பிரிந்து உருவும், அதன் நிழலும் போல ஒன்றுபட்டு உருவாகிப் பிறக்கும் ஒட்டிய இரட்டைப் பிள்ளையைத்தான் கவைமகன் (சாயாமிய இரட்டையர் - Siamese Twins) என குறுந்தொகை கூறுகிறது.

"கவை மக நஞ்சு உண்டா அங்கு
அஞ் சுவல் பெரும
என் நெஞ்சத்தானே" (குறுந்தொகை: 324)

இது 10 லட்சத்தில் ஒருவர் இவ்வித மாறுபட்ட பிறவியாகப் பிறப்பர் என்ற உண்மையை ஒரு கணக்கீடு தெரிவிக்கிறது. பிறவிக் குறைபாடு கூட குறுந் தொகையில் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டு

உள்ளது என்பது அறிய வருகிறது. இந்தப் பாடலைப் பாடிய புலவரும் கலைமகனார் என அழைக்கப் பெறுகிறார்.

இவை மட்டுமின்றி அறிவு மங்கிக் குழந்தை பிறக்கும் தன்மையும், தசைத்திரளாகக் குழந்தை பிறப்பதும், விலங்கு வடிவுடன் பிறப்பதுமாகிய நிலைகளும் புறத்தில் (பா. 28) சுட்டப்படுகின்றன.

ஆண் குழந்தை பெற்றெடுப்பது என்பது தொன்று தொட்டுப் பாராட்டப்பட்டுக் கௌரவிக்க, வாரிசுகளைப் பெற்றுக் குடும்பத்திற்குப் புகழ் வாங்கிக் கொடுத்தது என்பதைக் குறித்த கருத்தை;

> "கடும்பு உடைக் கடுஞ்சூல் நம் குடிக்கு உதவி
> நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள் காழ்
> விளங்கு நகர் விளங்கக் கிடந்தோள் குறுகி
> புதல்வன் ஈன்றெனெ." (நற்றிணை - 370:2-5)

**கருவியல்** (Embryology):

"மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே," என்ற சூத்திரத்தில் உயிர்மெய் எழுத்துக்களில் மெய் முன்னரும், உயிர் அதன் பின்னரும் ஒலிக்கும் என்பதை, இலக்கணம் கூறும் வகையில் ஓர் உண்மை புலப்படுத்தப்படுகிறது. உடல் வழியாகத்தான் உயிர் தோன்றும் என்ற கருத்தைத் தொல்காப்பியர் மறை முகமாக உணர்த்தியுள்ளார். இதற்கு விளக்கம் கூறிய உரை ஆசிரியர் கு. சுந்தரமூர்த்தி அவர்கள் "உயிர் காட்சிப் பொருள் அல்லவேனும் அவ்வுயிர் எடுத்த உடம்பின் வாயிலாக அவ்வுயிர் உண்மை தெரிய வரும்" என்கிறார். (தொல் எழுத்து நூன்மரபு: 18 கு. சுந்தரமூர்த்தி) மெய்ப்பொருள் கூறும் வகையில் இருப்பதாக இருந்தாலும் கருவியல்படி (Embryology) கருப்பையில் விந்தும், அண்ட அணுவும் சேர்ந்து கரு உண்டாகிப் படிப்படியாக வளர்ந்து, இரண்டாவது வாரத்தில் இருந்து எட்டாவது வாரம் வரையில் கரு வளரும் நிலையாகின்றது (Embryonic Stage). இந்த நிலையை அடுத்த உடலின் பாகங்கள் படிப்படியாகத் தோன்றி உருவம் அடையும் நிலை பிண்ட நிலை யாகும். இந்நிலை ஒன்பது வாரங்களில் இருந்து நாற்பது வாரம் வரையாகும். இந்த நிலையில்தான் பிண்டம் வளர்ச்சியடைந்து, அதன் இயக்கம் (Movement) உண்டாகும். இந்த இயக்கம் முதல் பதினான்கு முதல் இருபது வாரம் உள்ளாக, இவ்வியக்கத்தைத் தாயால் நன்கு அறிய முடியும் (Essential of Human Embryology 1982, P. 110-104). இயக்கம் இல்லாத பிண்ட நிலையை ஆங்கிலத்தில் Product of Conception என்றே கூறுவர். குழந்தை என்று சொல்வதில்லை. இவ்வியக்கத்தினால் உடல் வழியாக உயிர் தோன்றும், கருவியல் உண்மையைத் தொல்காப்பியர் காலத்தமிழர் அறிந்திருந்தனர் என்பது தெரிய வருகிறது.

**ஆண், பெண் தோற்றம்:**

பெண்ணின் கருவணுவிலுள்ள 44 பண்பினக் கீற்றுகளும், பாலினக்கீற்றும், ஆணின் 44 பண்பினக் கீற்றும், + XX பாலினக்கீற்றும் சேரும் போது, பிறக்கும் குழந்தை தந்தையின் கீற்றும் சேர்ந்து (44 + XY) ஆணாகவும், தாயின் பாலினக்கீற்றும் சேர்ந்து (44 + XX) பெண்ணாகவும், இதில் பாலினக்கீற்று தவறுகளால் அலியாகவும் தோன்றும் என்பதை இன்றைய அறிவியல் கூறுகிறது. இதே கருத்தைத் தான் திருமூலர்;

> "பூண்டது மாதா பிதா வழிபோலவே
> ஆம்பதி செய்தான் அச்சோதி தன் ஆண்மையே."
> (திருமந்திரம்: 461)

> "ஆண்மிகில் ஆணாகவும், பெண்மிகில் பெண்ணாகவும்,
> பூண் இரண்டும் ஒத்துப் பொருந்தில் அலியாகும்."
> (திருமந்திரம்: 462)

என்று கூறுவது வியப்பதைத் தருகிறது.

**மகப்பேற்றுக்குப் பிறகு தனிமைப்படுத்துதல்:**

மகப்பேற்றுக்குப் பிறகு மகளிர் சில நாட்களுக்குத் தனிமைப் படுத்தப்படுவர். மகளிருக்கு ஏற்படும் உடல்நலக்குறைவே தனிமைப்படுத்தப் படுவதற்குக் காரணமாகும். இதை "புனிறு தீர் பொழுது" (Postnatal Period) என்பர். இப்பழக்கம் தமிழர்கள் மிகப்பழங்காலத்திலிருந்தே கடைப் பிடித்த பழக்கமாகும். இதைத் தொல்காப்பியர் "புனிறென் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே" (தொல். சொல் உரியியல் - 375) என்றும் "புதல்வர்ப் பயந்த புனிறு தீர் பொழுதின்" (தொல். பொருள், கற்பியல் - 144) என்றும் கூறுவர்.

**மருத்துவச்சிக் கூலி:**

இடைக்காலத்தில் மகப்பேறு மருத்துவம் பார்ப்பவர் மருத்துவச்சி என அழைக்கப்பட்டனர். இம்மருத்துவம் நாவிதப் பெண்களால் நடத்தப் பட்டது. அவர்கட்கு அதற்குரிய ஊதியமும் வழங்கப் பட்டது. இதுபோலவே தீவிர நோய்களைப் போக்கிய மருத்துவர்களுக்கும் தக்க ஊதியம் வழங்கவேண்டும் என்பது உலக நீதி என்று பின்வருமாறு குறிக்கின்றது.

> "வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவச்சி கூலி
> மகாநோவு தனைத்தீர்த்த மருத்துவன் தன் கூலி."

இவ்வாறாக தமிழ் இலக்கியங்களில் காணப் படும் மகளிர் மருத்துவம் குறித்த கருத்துகளை அறியமுடிகிறது.

●

காவ்யா



கால்கரை வெ. சுடலைமுத்துத்தேவரின்
15 ஆவது நினைவு நாளில்
தாமிரபரணித் தமிழ்த் திருவிழா

# 12நூல்கள் வெளியீட்டு விழா





தலைமை: **பேரா.சு.சண்முகசுந்தரம்**

நூல்களை வெளியிடுபவர்: **நீலபத்மநாபன்**

நூல்களைப் பெறுபவர் **கலாப்ரியா**

பேரா. சு. சண்முகசுந்தரத்தின் **காசுபிள்ளையின் சைவப் பெருமக்கள்**
பேரா.அ .கா.பெருமாளின் **வையாபுரியாரின் கால ஆராய்ச்சி**
பேரா.அழகேசனின் **தொல்காப்பியரின் புலப்பாட்டுநெறி**
முத்தலாங்குறிச்சி காமராசு **நெல்லைச் சீமை கோயில்கள்**
இரா.சிகாமணியின் **சமய நல்லிணக்கம்**
சோம சுந்தரத்தின் **என் இனிய வண்ணத்துப்பூச்சியே**
நா.நாகராஜனின் **அன்று ஆறு ஆறாயிருந்தது**
ஜோசப் சொர்ணராஜின் **குமரி வட்டார நாவல்களில்**
மகேஷ்குமாரின் **நினைவெல்லாம்...**(நாவல்)
புலவர் கு.ரவீந்தரனின் **குமரியில் கம்பர்** (நாவல்) மற்றும் **வயக்காடு** (நாவல்)
கோகுல் சங்கரின் **கல்லுவீடு** (சிறுகதை)

வாழ்த்துரை: பேரா.வளனரசு மற்றும் பேரா.சிவசு
அனைவரும் வருக

நாள் : **20.11.2018 செவ்வாய், மாலை 5 மணிக்கு**
இடம் : **ஓட்டல் ஜானகிராம், நெல்லை சந்திப்பு**

நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்
தொடர்புக்கு : காவ்யா **98404 80232**



# மலைப்புலயர் சொன்ன கோவலன்-கண்ணகி கதை

ஆ.கார்த்திகேயன்

**சி**லப்பதிகார வஞ்சிக்காண்டத்தின் தொடக்கம் மலைவாழ் மக்களைக் குறித்து அழகாகவும் விரிவாகவும் வர்ணிக்கிறது. மலையில் வாழும் ஆதிவாசி மக்களை மலைமிசை மாக்கள் என்ற தொடரால் சிலம்பு குறிக்கின்றது. அம்மக்கள் செய்யும் தொழில்கள், பொழுதுபோக்குகளைக் குறிப்பிடுகின்றது,

குருவி ஓம்பியும்
கிளி கடிந்தும்
குன்றத்துச் சென்று வைகி
அருவி ஆடியும் சுனை குடைந்தும்
அலவுற்று வருவேம் (குன்றக்குரவை)

அதுமட்டுமல்ல, மலையில் கிடக்கும் பல்வேறு மலைபடு பொருட்கள், வாழும் விலங்குகள் ஆகிய வற்றையும், எப்பொழுதும் முழவு போல ஒலித்துக் கொண்டேயிருக்கும் அருவியின் அழகு குறித்தும் படம்பிடித்துக் காட்டுகிறது. ‘பெருமலை துஞ்சாது வளம் சுரக்க’ அம்மக்கள் செய்யும் பல்வேறு சடங்கு களையும் பட்டியலிட்டு விவரிக்கிறது. தொண்டகப் பறை, சிறுபறை, கோடுவாய், கொடுமணி போன்ற இசைக் கருவிகளின் பெயர்களும் சடங்குகளோடு அவற்றுக்குள்ள தொடர்பும் சுட்டிக் காட்டப்படு கின்றன. மலை நிலத்திற்குள்ள வாசனை திரவியங்கள் குறித்தும், மன்னர்க்கு அவற்றைப் பரிசாக அளித்து வரவேற்கும் முறைகள் யாவும் குன்றக் குரவையில் அறிந்து கொள்ள முடிகின்றது. கண்ணகி குறவர் குடியினரையே சந்தித்து உரையாடுவதாகச் சிலம்பின் தொடக்கம் அமைந்துள்ளது. கோவலன் மதுரையிலே இறந்தபின் பதினான்கு நாட்கள் கழித்து கண்ணகி திருச்செங்குன்றினைச் சேர்கிறாள். மலைவேங்கை மரத்தின் நிழலில் நின்றிருந்து குறவர்கள் கண்ணகியைக் காண்கின்றனர்.

மலைவேங்கை
நறுநிழலின்
வள்ளி போல்வீர் மனம் நடுங்க
முலை இழந்து வந்து நின்றீர்
யாவீரோ!

எனக் கேட்கின்றனர். கண்ணகி கோபப்படாமல் தீவினையால் மதுரை மாநகரில் கணவனை இழந்த நான் இங்கே வந்துள்ளேன் என்று பதில் சொல் கிறாள். பின்னர் குறவர் கண்ணகியைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டு வழிபாடு செய்கின்றனர். சேரமான் செங்குட்டுவனைக் கண்டு கண்ணகி குறித்துத் தெரிவிக்கின்றனர். சேரமன்னன் கண்ணகிக்குக் கோயில் கட்டி வழிபட்டான் என்பதும் சிலம்பு கூறும் வரலாறு.

அவ்வாறு சேரமன்னன் 1800 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டிய கோயில் இன்னும் கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் ‘மங்கலதேவி கோயில்’ என்ற பெயரில் நிலைபெற்றுள்ளதை அனைவரும் அறிவர். இக்கோயில் குமுளியிலிருந்து 14 கிலோமீட்டர் தொலைவிலும், தமிழ்நாட்டின் கூடலூர் வனப் பகுதியில் பளியங்குடி என்னுமிடத்திலிருந்து 6 கிலோமீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. இங்கு ஒவ்வொரு ஆண்டும் சித்ரா பௌர்ணமி தினத் தன்று ஒருநாள் மட்டுமே மக்கள் இக்கோயிலுக்குச் சென்று வழிபட அனுமதிக்கப்படுகிறார்கள். இக் கோயில் கேரளப்பகுதியில் இருப்பதால் கோயில் கவனிப்பாரின்றிச் சிதிலமடைந்து காணப்படு வதாகவும், புதிய கோயில் கட்டுவதற்கு மங்கலதேவி கண்ணகி அறக்கட்டளை முயற்சி எடுத்து வருவ தாகவும் விக்கிமீடியாவிலிருந்து தெரிந்துகொள்ள முடிகின்றது. இந்த அறிமுகம் சிலப்பதிகாரத்திற்கும், பழங்குடி மக்களுக்கும், இடுக்கி மாவட்டத்திற்கு முள்ள பழைய தொடர்பை அறிந்துகொள்ள உதவும்.

இடுக்கி மாவட்டத்தில் பல்வேறு பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். முதுவன், மலைப்புலயன், மன்னான், உராளி, மலை அரையன், உள்ளாடன்,

மலைவேடன், மலைப்பண்டாரம் போன்றோர் அங்கு வாழும் முக்கியமான ஆதிவாசி மக்களாவர். இடுக்கி மாவட்டம், கிட்டத்தட்ட, முழுவதுமே வனப்பகுதியாகும். பெரியார் ஆறு பாய்ந்து, மாவட்டத்திற்கு நீர் ஆதாரமாக விளங்குகின்றது. இந்த ஆதிவாசி மக்களின் மொழி தமிழ், மலையாள மொழிகளின் கலவையாக அமைந்தும், தனித்துவம் பெற்றும் விளங்குகின்றன. இம்மக்களிடையே கண்ணகி-கோவலன் கதை பிரபலமாக இருந்து உள்ளது. குறிப்பாக முதுவன், மன்னான் ஆகிய ஆதிவாசி மக்களிடையே கண்ணகி-கோவலன் கதை வழங்கி வந்ததைக் கடந்த காலத்தில் ஆய்வாளர்கள் கண்டறிந்து பதிவு செய்துள்ளனர். எரிக் மில்லர் என்ற அறிஞர் முதுவன் பழங்குடி மக்களிடையே காணப் படும் கோவலன்-கண்ணகி கதையை இளங்கோவடி களின் சிலம்போடு ஒப்பிட்டு ஒரு கட்டுரை எழுதி யுள்ளார் (2016 ஆசியவியல் கழகம் நடத்திய கருத்தரங்கக் கட்டுரை). முதுவர்கள் கண்ணகியை முதுகில் சுமந்து கொண்டு வந்ததாலேயே முதுவர் என்ற பெயர் பெற்றதாகவும் கூறப்படுகின்றது. மன்னான் என்ற ஆதிவாசி மக்களிடையே கோவலன்-கண்ணகி கதை வழங்கி வந்துள்ளது. இதனைக் குறித்து டாக்டர் நசிமுதின், கேரளப் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பேராசிரியர் ஆய்வு நிகழ்த்தியுள்ளார். இனி, இடுக்கி மாவட்டத்தில் மறையூர், காந்தலூர் பஞ்சாயத்துகளில் வாழும் மலைப்புலயர் மக்களிடையே களஆய்வு நிகழ்த்தும்போது ஒரு தகவலாளி கோவலன்-கண்ணகி கதையைச் சொன்னார். அவர் சொன்ன கதை அவரது கிளை மொழியிலேயே கீழே தரப்படுகின்றது.

தகவலாளி பெயர் கண்ணம்மா, வயது 64. பொங்கம்புளி என்ற ஆதிவாசி குடியைச் சேர்ந்தவர். அவருக்கு இந்தக் கதை அவருடைய பெற்றோர் கூறியதாகச் சொன்னார். கண்ணகி என்ற பெயரை ஒருசில இடங்களில் கர்ணகி என்றும் மாற்றிச் சொன்னார். கோவலன் பெயரைச் செட்டியார் என்று அடைமொழி சேர்த்துக் கோவாலன் செட்டியார் என்று சொன்னார். அவர் கதை சொல்கிற எடுத் துரைக்கும் முறை மிகவும் உணர்ச்சிமயமாக இருந்தது. இடையிடையே கண்ணகியைத் தெய்வ மென்றும் அவதாரம் என்றும் உணர்ச்சி மேலிடக் கூறினார். கதை ரொம்ப பெரிசு, இப்பொ சுருக்கி வந்திருக்கு என்று இருமுறை இடையில் கூறினார். கண்ணகி தனது மார்பைப் பிய்த்து எறிகின்ற செயலை எச்சரிக்கையோடு எடுத்துரைத்தார். தயக்கத்தோடு கூறினார். தகவலாளி இக்கதையை வேறு இன மக்களிடம் இருந்தும் கேட்டும் கூறியிருக்க வாய்ப் புள்ளது. வெவ்வேறு மலைப்புலயர் குடிகளில் கோவலன்-கண்ணகி வழங்குவதாகத் தெரிய வில்லை. அத்தகைய கதை தெரியாது என்றே பலரும் கூறினர். இனி, கதை தொடர்கிறது.

**கண்ணகி பாண்டியனின் மகள்**

பாண்டிய ராசனுக்கும் பாண்டிய ராணிக்கும் கொளந்த இல்ல. ரெம்ப நாளா ஏதோ தெய்வ பத்தியா இருந்து ஒரு பெண் கொளந்தெ கெடச் சிருக்குதாம். கொளந்தெய ராஜ சபையிலெ வெச்சு ரெம்ப பாராட்டி வெச்சிருக்காங்க. அப்போ, சோசியரெ கொண்டு வந்து சோசியம் பாத்திருக் காங்க. சோசியம் பாக்கையிலெ, இந்தப் பெண் கொளந்தெ கிழக்கு முகமா திரும்பி வாய்விட்டு சிரிசா தெம்மதுரெ தீப்பிடிக்கும். வடக்கு முகமா (பாத்து) வாய்விட்டு சிரிசா வடமதுரெ தீப்பிடிக்கும். அப்ப இந்தக் கொளந்தெய வளத்த வேண்டாம். மதுரை அழிஞ்சிரும். வளக்காம கொண்டு போயி தங்கத்துலெ பெட்டி செஞ்சி கடல்ல வுட்ருங்கான்னு சொன்னாரு. அதெ மாரியே தங்கத்துலெ பெட்டி செஞ்சி கொண்டு கடல்ல விட்டாங்க. பெத்த தாயி விடமாட்டாள் எந்து எவ்வளவோ தடபட்டிருக்கா (தடுத்திருக்கிறாள்).

**கப்பல் செட்டிமாரு**

அப்போ... மாசானம் செட்டியாரும் மாநாய்கன் செட்டியாரும் மச்சானும் மச்சானும் - கப்பல் யாபாரிங்க. இந்த மாசானம் செட்டியாரு வீட்லெ ஒரு பையன் இருக்கான். இவங்க ரெண்டு பேரும் கப்பல்ல போய்க்கொண்டு இருந்தாங்களாம். அப்போ, அந்தப் பெட்டி மெதந்து போய்க் கிட்டிருக்காம். தண்ணியிலெ என்னமே ஒண்ணு மெதந்து போய்க் கொண்டிருக்குது. அதெப் போயி பாப்போம். எந்து மச்சானும் மச்சானும் போனாங் களாம். அப்போ... இந்த ரெண்டு பேரு தம்முள ஒரு சவால்.

'பெட்டிக்குள்ள என்ன இருக்கோ அது எனக்கு. பெட்டி வந்து உனக்கு.'

இப்படி இவுங்க ரெண்டு பேரும் எடுத்துக் கொண்டு பாக்கும்போது அதுக்குள்ள கொளந்தெ இருக்குது. கொளந்த இல்லாத செட்டியாரு கொளந்தெய எடுத்துக்கிட்டாரு.

**மாங்காய கொடுத்து கல்யாணம்**

வீட்டுக்குப் போனா என்னாயி போச்சி? கொளந்தெ வளந்து வந்தா நம்ம பையனுக்கே கல்யாணம் பண்ணி வச்சிருவோம். அவுங்க மச்சானும் மச்சானும் தானே. அப்படின்னு சொல்லிட்டு அவுங்க கொளந்தெய வளத்திட்டு வந்தாங்க. அஞ்சு வயசு ஆகும்போது கொளந்திக்குக் கல்யாணம் பண்ணிட்டாங்க. இந்தக் கொளந்தெக்குக் கல்யாணம் என்னந்தே தெரியாது. மடியிலெ வெச்சுதான் கோவாலன் செட்டியாரு அந்தக் கர்ணகியெ கல்யாணம் செஞ்சாரு.

மாங்காயெ கையிலெ குடுத்துதான் கொளந்தெ சாவட்டுக்கிட்டு இருந்தசெல தாலி கெட்டுனாங் களாம்.

### மாதவி நாட்டியம்

கல்யாணத்துக்குத் திருக்கடையூர் சிந்தாமணி மக(ள்) நாட்டியத்துக்கு வாரா. திருக்கடையூர் சிந்தாமணி மக மாதவி ஒரு வேசி. மாதவி நாட்டியம் ஆடயிலெயே கோவாலன் செட்டியாருக்கு மாதவி பேர்ல நோட்டம் ஆயிடுச்சு. அப்ப... என்னா பண்ணிட்டா, "நான் நாட்டியம் ஆடி கடெசியிலெ ஒரு மாலையெ எடுத்துப் போடுவேன். அந்த மாலை யாரு கழுத்துலெ விளுகுதோ அவுங்களெ நான் கொண்டுகிட்டு போயிடுவேன்" எந்து சொல்லிட்டா. அதேபோல மாலை கோவாலன் செட்டியாரு களுத்துலெ வுளுந்தது. அவ வாக்குபடி அவனெ அவளோடெ விட்டுறணும்.

### ஆனை வால் மாதிரி தாலி

இந்தக் கொளந்த (கண்ணகி) இன்னும் வளந்து கிட்டிருக்குது. வளந்து பத்து பதினைஞ்சு வயசாகி புஷ்பவதி ஆகுதில்ல. அதுக்கப்புறம் ஒரு நா(ள்) அலங்காரம் செஞ்சி சடங்கெல்லாம் வெக்கிதாங்க. ஒரு நா(ள்) கண்ணகி கண்ணாடி பாக்குறா. பாக்கும் போது கழுத்துலெ ஒரு தாலி இருக்குது. தாலின்னா எப்படி? ஆனை வால் மாதிரி சைஸ். ஆனை தலை மாதிரி தாலி. இப்படி இருக்கையிலெ "தாலின்னா என்ன அர்த்தம்? இது நமக்குத் தெரியவே தெரியாதே" அப்படின்னு தாதிமாருகிட்டெ கேட்டிருக்கா. அப்புறம்தான் சொல்லுதாங்க. உனக்குக் கல்யாணம் ஆயிடுச்சு. இந்தக் கல்யாணம் எப்படி ஆச்சுன்னு கண்ணகி கேட்டுருக்கா. 'தாலின்னா என்னா?' ஆணும் பெணும் வெச்சு கல்யாணம் முடிச்சு வெக்கிறது. சொந்தங்களு விட்றகூதாதுன்னு ஒன்னெயும் அவனெயும் கெட்டி வெச்சுட்டாங்க.

### கோவலனை மீட்டு வருதல்

கல்யாணம் ஒரு ஐதீகத்துக்குத்தான். வேறெ குடும்பமெல்லாம் கிடையாது. குடும்பம் ஆயி பொழுச்சவ மாதவிதான். கண்ணகி இல்லெ. கண்ணகிதான் தெய்வமாச்சே. இப்டி இருக்கையிலெ அது எங்கெ இருக்க, என்னா விவரம் எந்து கண்ணகி கேட்டிருக்கா. இன்னென்ன மாதிரி காரியம் அவ கொண்டுகிட்டு போயி இத்தனெ வருஷம் ஆச்சு. இன்னும் வந்து சேர்லை - எந்து தாதிமாரு சொல்லிருக் காங்க. அதற்கு கண்ணகி, சரி... அப்படியா இருந்தா, நானு அவரெ கொண்டுகிட்டு வரணும்! என்று சொல்லிருக்கா. மாதவி கோவலனை விட்டபாடே யில்லெ. 'மாதவி சொன்னா நீ கொண்டு போகணும் எந்தா அந்த நகெ போக்குவரத்து சீவி, சொரண்டி வெச்சுட்டு அவரெ போல ரூவம் செஞ்சி வைச்சுட்டு நீ கொண்டு போ' அப்படி சொன்னா.

'சரி, பரவாயில்லெ. நான் அப்டியே பண்ணிடறேன்' எந்து கண்ணகி சொல்லிட்டு எல்லாம் செஞ்சிட்டுக் கோவலனெ கூட்டிகிட்டு வாறா. கோவலன் செட்டியாரு நகை நட்டு இல்லாம பாளும் கௌவனா தடிய ஊணிக்கிட்டு வாறாரு.

### நடுவழியில் கொள்ளைக்காரர்

கண்ணகி கோவலனெக் கூட்டிகிட்டு வாறா. வரும்போது என்னாயிடுச்சு எனக்கு முடியல்ல. "ரெம்ப தாகமாக இருக்க. தண்ணி கொண்டுகிட்டு வாங்க"ன்னு கேட்டுருக்கா கண்ணகி.

"நான் இந்தக் காட்டுலெ உன்னெய மட்டும் விட்டுட்டு எப்டி போவேன்."

'எனக்குப் பயமில்ல நீங்க போங்க.'

கோவலன் தண்ணி தேடிக்கிட்டு போயிட்டாரு. அப்போ கொஞ்சம் கொள்ளேகாரு வந்துட்டாங்க. இவ போட்டிருந்த நகை, அழகு இதெல்லாம் பாத்துப் புடுங்க வந்துட்டாங்க. கொள்ளேகாரு நகையெல்லாம் கழட்டி குடுன்னு கேட்டாங்க.

'நகெயெல்லாம் கழட்டி குடுக்கலாம். அதெபத்திப் பரவாயில்லெ. ஆனா நீங்க இங்கெயிருந்து போக முடியாது' - கண்ணகி.

'என்னா... நீ ஒரு பொண்ணா நடுகாட்லெ இருந்துகிட்டு இப்டி பேசுத. எங்களெ நீனாலெ அடிக்க முடியுமா?' - எந்து கொள்ளேகாரு கேட்டாங்க.

கண்ணகி நகெயெல்லாம் கழட்டிக் குடுத்துட்டு உக்காந்துகிட்டிருந்தா. கொள்ளேகாரு நகையெ எடுத்துக்கிட்டு போகையிலெ ஒருத்தன் மட்டும் இவ அழகெ பாத்து இவளெக் கொண்டுகிட்டுப்போகப் பாத்திருக்கான். கண்ணகி எல்லாரையும் குத்துக் கல்லா மாத்தி சாபம் குடுத்துட்டா. மரத்துமேல இருந்த ஒருத்தனை வெளவாலா மாத்திட்டா.

கோவலன் தண்ணி கொண்டு வந்து பாக்கையிலெ, 'குத்துக்க கல்லே இல்லாம இருந்தது. நெறைய குத்துக்கல்லு இருக்கே எந்து கேட்டாரு.' இந்த அம்மா விவரத்தைச் சொல்லிச்சு. குத்துக்கல்லா இருந்தவங்களெ மனுஷாளா ஆக்கியாச்சு.

### சிலம்பை விற்று மோர் யாவாரம்

பௌப்புக்கு வழியில்லெ. தெருவுக்குள்ள போயி யார்கிட்டெயும் பிச்சையும் கேட்க முடியாது. மாதவி வந்துட்டு எல்லாத்தையும் பறிச்சிட்டா. ஒண்ணுமே இல்ல. கால்ல சிலம்பு இருக்குது. அதைத் தாறேன். கொண்டு போய் யாவாரம் பண்ணி

பொளச்சி வாங்க. கால்ல இருந்த செலம்பு என்னாயிடுச்சு அழுதுது.

'இல்ல... நீ போ... நான் ஒன்னே ஒரு நாளக்கித் திருப்பி எடுத்துடறேன்' - எந்து கர்ணகி சொல்றா.

சிலம்ப அடகுக் கடெயிலெ வெச்சுட்டு 'என்ன யாவாரம் பண்ணலாம்ன்னு யோசிக்காரு. ஏதாச்சும் ஒண்ணு பண்ணுங்க'. ரெண்டு பேரும் சேந்து யோசனை பண்ணிக்கிட்டிருக்காங்க.

'மோரு யாவாரம் பண்ணுவோம்.'

மோரு தெருத் தெருவா எடுத்துக்கிட்டு போயிருக்காங்க. மோரு யாவாரமே ஆகல்லெ.

'யாவாரமே இல்லெம்மா, நாம என்னா பண்ணறது'-ன்னு சொல்லிருக்காரு.

'மோரு யாவாரம் நல்லா ஆச்சின்னா ஆயிரம் வெளக்கு போடறன்-னு காளிக் கோயிலுக்கு நேர்ச்ச போட்டுருங்க' - என்று கண்ணகி சொன்னா. மோரு எடுத்துக்கிட்டுப் போகையிலெ நல்ல யாவாரம் ஆச்சு. நேர்ச்ச போட்டதனாலெ.

**கோவலன் வெட்டப்படுதல்**

காளிக்கோயிலுக்குப் போட்ட நேர்ச்சயெ செய்யனும் இல்லெ. ஆயிரம் வெளக்கு போயி கோயில்ல போட்டாச்சு. பாண்டி ராசனோடெ அனுபோகம் (அனுமதி) இருந்தா மட்டும்தான் கோவிலுக்குள்ள போக முடியும். இந்தச் செய்தி பாண்டி ராசனுக்குத் தெரிஞ்சது. ராஜன் பாத்தருக்கான். 'என்னடா, கோயில்ல வெளக்கு எரியுது. வாளுக் காரன் தோளுக்காரன் வாங்கப்பட்ட சம்பளக்காரன்' யாராலும் சரி... 'இப்ப அவனெக் கொண்டு வந்து வெட்றா-ன்னு சொல்லியாச்சு. அதேபோல கோவாலஞ் செட்டியாரெக் கொண்டு வந்து வெட்டியாச்சு.

**கண்ணகி மதுரையை எரித்தல்**

'என்னடா- போனவரு வரவேயில்லயே'

கண்ணகி போயிப் பாத்திருக்கு. கோவலன் வெட்டப்பட்டு கீழே கெடக்குறான். எந்தக் காரணத்தைக் கொண்டும் உறுப்புக்கள் அழிஞ்சிடக் கூடாது-ன்னு ஒவ்வொரு உறுப்புக்கும் ஒவ்வொரு உயிரு காவல். கண்ணுக்கு மட்டும் கட்டெறும்புதான் காவல்.

கண்ணகி ராஜன்கிட்டெ போயி கேட்டிருக்கா. 'இப்படி ஏன் அனுபோகம் இல்லாம என் புருஷனை எப்படி வெட்டலாம்.'

அதற்கு ராஜன் சொன்னான் 'நீங்க எங்க அனுபோகம் இல்லாம கோயிலுக்குள்ள போகக் கூடாது. வெளக்கு ஏத்தக்கூடாது'. பெத்த அம்மெ அப்பன் கூடயே மகளுக்குப் பயங்கர கோவம் வந்தாச்சு. கண்ணகிக்கு பயங்கர கோவம். ஆங்காரம் வந்தாச்சு. இந்த நாலு திசை எந்தப் பக்கம் சிரிக்கிறாளோ அத்தனெயும் தீ! வாய்விட்டு சிரிசால் தீ! தீயெ கட்டுப்படுத்த முடியல்ல. எல்லாம் அல கோலமா அங்கிட்டு இங்கிட்டு போக முடியல்ல.

வலகை மார்பைப் பிச்சி எறிஞ்சோடனே வடமதுரெத் தீப்பிடிச்சுது. இடகை மார்பைப் பிச்சி எறிஞ்சோடனே தெம்மதுரை தீப்பிடிச்சுது. எங்கப் பார்த்தாலும் தீ. பயங்கர ஆங்காரத்துலெ நின்றிருக்கா. ஒண்ணும் அவளால முடியல்ல. ஆங்காரம்-னு சொன்னா அழிக்கிற ஆங்காரம்.

**இடையமாரு கோபத்தைத் தணித்தல்**

கண்ணகி நிக்கையிலெ இடையமாரு மாடு ஆடு மேய்க்கிறவங்க ஓடிவந்து அவளோட மார்பை எடுத்து துணி போட்டுக் கெட்டிட்டு சொளகு இருக்குல்ல (முறம்) அதனால வீசி குடுத்திருக்காங்க அவளது ஆங்காரம் தணியறதுக்கு வேண்டி. ஆங்காரம் தணிஞ்சிடுச்சு. பாக்கையிலெ இடையமாரு சுத்தி நிக்கறாங்க. அப்ப அவங்களுக்குக் கண்ணகி வாக்கு குடுத்தாளாம். "யாரு வீட்லெ தீப்பிடிச்சாலும் எடையரு வீட்ல தீப்பிடிக்கக் கூடாது."

"நீங்க நாட்டுல எல்லாம் தீப் பிடிச்சா, அந்தப் பட்டணமே அழிஞ்சிடும். எங்களுக்குத் தீப்புடிச்சா இந்த விட்ல மட்டுந்தான் எரியும். அடுத்த வீட்ல தீப்பிடிக்காது. அப்ப அந்த எடையருமாரு யாரா இருக்கும்?" (கதை சொன்னவர் கூற்று)

மதுரையிலெ நடந்த தீக்கலகத்துலெதான் நாடு அங்கிட்டு இங்கிட்டு பிரிஞ்சு கலைஞ்சி மதுரையி லெருந்து வந்தவங்கதான் நாங்க. இந்த அளவுலெ கதையெ முடிச்சுக்கிறேன். (கண்ணம்மா, வயது 64, பொங்கம்புளி, இடுக்கி)

**முடிவுரை**

இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்திற்கும் மலைப்புலயர் சொன்ன கோவலன்-கண்ணகி கதைக்கும் ஏணி வைத்தாலும் எட்டமுடியாத அளவுக்கு வேறுபாடுகள் காணப்படுகின்றன. எத்தனையோ நூற்றாண்டுகளைக் கடந்து வந்ததனால் இத்தகைய வேறுபாடுகள் ஏற்பட்டனவா? பல்வேறு நாட்டுப்புறக் கதைகளில் வரும் பகுதிகளை இணைத்து புதிய புதிய கதைகளை உருவாக்கும் கதை சொல்லும் மரபு இக்கதையிலும் தொடர்கிறது. செவ்வியல் கதைகள் நாட்டுப்புற மக்களின் கைவண்ணத்தில் அவர்களின் பின்புலத்திற்கேற்ப மாற்றம் பெறும் அழகினை மலைப்புலயர் சொன்ன கதையிலும் காணலாம். ●

**தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்**

**நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்**

இணைந்து நடத்தும்

# இலக்கியப் போட்டி 2018

## விருது பெற்றோர்

### ஆய்வு நூல்கள்

**பேராசிரியர் நா. வானமாமலை நினைவு விருது**

முனைவர் கே. பழனிவேலு:
*தொல்காப்பியத் திணைக் கோட்பாடு- திறனாய்வியல் நோக்கு*

**முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியன் நினைவு விருது**

முனைவர் சிலம்பு நா. செல்வராசு:
*தொல் தமிழர் திருமண முறை*

### கட்டுரை நூல்கள்

**என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது**

பேரா. பொ. முத்துக்குமரன் &
முனைவர் ம. சாலமன் பெர்னாட்ஷா:
*அழிவின் விளிம்பில் அந்தமான்*

**மேலவாசல் கோ. இராமசாமி நினைவு விருது**

ராமச்சந்திர வைத்தியநாத்:
*சென்னப்பட்டணம் மண்ணும் மக்களும்*

### கவிதை நூல்கள்

**பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது**

தனசக்தி: *வாளிப்பற்ற உடல்காரி*

**கே.சி.எஸ். அருணாசலம் நினைவு விருது**

சஹானா: *கண் அறியாக் காற்று*

### சிறுகதை நூல்கள்

**எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது**

வி. ஜீவகுமாரன்: *நிர்வாண மனிதர்கள்*

**திருமதி. சுந்தரி சாந்திலால் நினைவு விருது**

விஜே: *வாசிக்க மறந்த பக்கங்கள்*

**வாழ்நாள் சாதனையாளருக்கான**
**'சிற்பி சக்தி விருது'**

தொல்லியல் ஆய்வாளர் செந்தீ நடராசன்

**தமிழியல் ஆளுமைக்கான**
**'சிலம்புச் செல்வர் ம.பொ.சி. விருது'**

முனைவர். இராம. சுந்தரம்

**விருது பெற்றோருக்குப் பாராட்டுக்கள்**

விருது வழங்கும் விழா: 08-12-2018-புதுச்சேரி

### சிறுவர் நூல்கள்

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது**

நெல்லை சு.முத்து:
*முத்துவைக் கேளுங்கள்*

**எம். கௌதம் நினைவு விருது**

ஏ.ஆர். முருகேசன்:
*சிந்துவும் வண்ணக் குருவியும்*

### நாவல்கள்

**அழகியநாயகி அம்மாள் நினைவு விருது**

அண்டனூர் சுரா: *முத்தன்பள்ளம்*

**தென்னமநாடு இராமசாமி – மாரியம்மாள் நினைவு விருது**

**சைலபதி**: *பெயல்*

### மொழிபெயர்ப்பு நூல்கள்

**தொ.மு.சி. ரகுநாதன் நினைவு விருது**

ச. வீரமணி & தஞ்சை ரமேஷ்:
*குஜராத் - திரைக்குப் பின்னால்*

**அறந்தை நாராயணன் நினைவு விருது**

முனைவர் தி. உமாதேவி: *ராதிகா சாந்தவனம்*

### குறும்படங்கள்

**தோழர் பா. முத்துசாமி நினைவு விருது**

அருண் பகத்: *தாகம்*

**பவானி பி.என்.பாலு – பாக்கியலட்சுமி நினைவு விருது**

புஷ்பநாதன் ஆறுமுகம்: *காவல் தெய்வம்*


**இரா. காமராசு**
பொதுச் செயலாளர்

**சி. சொக்கலிங்கம்**
மாநிலத் தலைவர்


**நா. இராமச்சந்திரன்**
செயலாளர் – இலக்கியக் குழு

விருதுபெற்ற அனைவருக்கும் 'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





**இலக்கியத் திறனாய்வில் சமூகவியல் அணுகுமுறை**
துரை சீனிச்சாமி
விலை ₹ 265/-




**சூழல்மொழி**
த.சித்தார்த்தன்
விலை ₹ 100/-




**பரமாத்து விதம்**
முப்பால்மணி
விலை ₹ 180/-





**கவிமணி வரலாற்றாய்வாளர்**
அ.கா.பெருமாள்
விலை ₹ 85/-





**மனிதனுக்கு மரணமில்லை**
த. ஸ்டாலின் குணசேகரன்
விலை ₹ 230/-




**பழந்தமிழில் சொல்லியல் சிந்தனைகள்**
முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்
விலை ₹ 160/-





**சுற்றுச்சூழலும் அழகியலும்**
முனைவர் க.குளத்தூரான்
விலை ₹ 175/-




**வினைப் பாகுபாட்டில் எச்சங்கள்**
முனைவர் சுபாஷ் சந்திரபோஸ்
விலை ₹ 240/-




**செவ்விலக்கியம் சில பார்வைகள்**
ந. இரகுதேவன்
விலை ₹ 100/-




# சா.கந்தசாமியின் சாயாவனமும் சாய்ந்தவனமும்

கி.இரா.சங்கரன்

*01.* கரும்பு ஆலை உருவாக்கப்படுவதனை மையமாகக் கொண்டு இந்நாவல் இயங்குவதால் கரும்பு பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகிறது. கரும்பு எனும் ஒரு விதையிலைத் தாவரமான புல்லினம் மனிதவரலாற்றின் உணவில் மிகமுக்கிய இடத்தினைப் பெறுகிறது. இதன் தோற்றுவாய் Polynesia தீவுகளாகும். அமெரிக்காவிற்கு மேற்கே ஆஸ்திரேலியாவிற்கு கிழக்கே பசிபிக்கடலின் தென்பகுதியில் அமைந்துள்ளன இத்தீவுக்கூட்டம். இந்தியமரபில் கரும்பிற்கு தனித்ததோர் இடம் உண்டு. வட இந்தியப்பகுதியில் குப்தர் காலத்தில் *(கி.பி.370)* கரும்பு பற்றிய குறிப்பு உண்டு. இக் காலத்தில்தான் காளிதாசர் குமாரசம்பவம் எனும் இலக்கியத்தினை இயற்றினார். இதனடிப்படையில் கரும்புவில் கொண்ட காமன்/மன்மதன் எனும் புராணக் கதாபாத்திரத்தின் வரலாற்றுத்தன்மையினை கணிக்கலாம். சங்க இலக்கியத்தில் கரும்பு பற்றி *56*

இடங்களில் குறிப்புகள் உள்ளன. புறம் 392 இல் எங்கிருந்தோ அதியமானின் ஆட்சிப்பகுதிக்கு கரும்பு கொண்டுவரப்பட்டதாகப் பதிவு உள்ளது. அப்பகுதி வணிகப்பாதையில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. சிலப்பதிகாரத்தில் கரும்புவில் சுட்டப் படுகிறது. கரும்பு பற்றி முதல் தமிழ் கல்வெட்டுக் குறிப்பு கி.பி.831. கி.பி.984 ஆம் ஆண்டின் கல்வெட்டில் கரும்புச்சாறு இறைவனுக்குப் படைக்கப்படுவது பற்றி பேசுகிறது. கி.பி.12 ஆம் நூற்றாண்டில் பேய்க்கரும்பு இனிப்பதெப்போ பேரின்பம் கிடைப்பதெப்போ என்பது பட்டினத்தாரின் புலம்பல். காலனிய இந்தியாவின் முதல் கரும்பாலை கி.பி.1824 இல் ஒரிசாவின் அஸ்கா எனுமிடத்தில் பிரஞ்சுக்காரர் களால் கட்டப்பட்டது. இதனாலேயே சர்க்கரைக்கு அஸ்கா என்ற பெயர் பிரபலமானது. வெண்சர்க்கரை யினை தமிழகத்திற்கு அறிமுகப்படுத்தியது சீனா. அதனால்தான் அது சீனி.

02. தமிழ் இலக்கியத்தில் வனம் பெரும் நிலப் பரப்பினை ஆக்கிரமித்துள்ளது. பட்டினப்பாலையின் காடுகொன்று நாடாக்கி குளந்தொட்டு வளம்பெருக்கி என்ற தொடர் சங்ககாலத்திலேயே காடுகள் அழிக்கப் பட்டு வேளாண்மைக்கு உட்படுத்தப்பட்டன என்பதனை விளக்குகிறது. பல்லவர், தம்மை செப்பேடுகளில் காடுபட்டிகள் என்று குறித்துக்கொள்கின்றனர். அதாவது, காடுகளை அழித்து அதனை மக்கள் வசிக்கும் பட்டிகளாக மாற்றினர் என்று பொருள். தமிழகத்தில் பட்டி என்று முடியும் பெயரில் பல ஊர்கள் உள்ளன. தாழம்பட்டி, பனையபட்டி, பனையூர், வாழப்பாடி, மல்லியம், நெல்லிக்குப்பம், உளுத்(ந்)துக்குப்பை, தேங்காய்பட்டினம் என்று தாவரங்களின் பெயர்களில் ஊர்கள் அமைந்துள்ளன. அகம், புறம் தொகை இலக்கியங்களில் காநாடு, கோநாடு என்ற குறிப்புகள் உண்டு. கோநாடு அரசு கட்டமைப்பின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பு; காநாடு என்பது அரசாட்சி கட்டமைப்பிற்கு உட்படாத மக்கள் வாழும் நிலப்பரப்பு.

03. வேதங்கள் வனங்களை மூன்றாகப் பிரிக்கின்றன: மகாவனம் (பெருங்காடு), தபோவனம் (தபசிகள் தங்கும் தோட்டம் போன்ற காடு), Sri-vanam (minerals போன்று மதிப்புமிகு பொருள்கள் நிறைந்த வனம்). புத்தமதத்தின் கொல்லாமை என்ற கருத்து பயிர்களையும் வனங்களையும் அழிவிலிருந்து காக்கவேண்டும் என்ற பொருளிலேயே முன்வைக்கப் பட்டிருக்க வேண்டும். புத்தர் தவம் பயில்தற்கு வனத்திற்குத்தான் சென்றார். துஷ்யந்தன் வேட்டைக் காட்டில்தான் சகுந்தலையைத் தொட்டான். இராமனுடன் சீதைக்கும் 14 ஆண்டுகள் வனவாசம். இலங்கையில் அசோகவனத்தில் துயர்வாசம். தாருகாவனத்தில் சிவபெருமான் ரிஷிபத்தினிகளை மயக்கினார் என்பர்.

04. இடைக்காலத்தமிழக வரலாற்றில் பாடல் பெற்ற பலதலங்கள் வனங்கள். 15 தலங்களின் பெயர்கள் கா என்றோ காடு என்றோ முடிகின்றன. அவையனைத்தும் வேளாண்ஊர்கள். அவற்றுள் தாவரங்களின் பெயர்களில் குறிக்கப்படும் தலங்களும் உண்டு. தில்லைவனம், கடம்பவனம், ஆலங்காடு போன்றன. முகலாயமன்னர்கள் தங்களின் நினைவுக் குறிப்புகளில் இந்தியாவில் தாம் கண்ட வனங்களைப் பேசுகின்றனர். முகலாயர் ஓவியங்கள் இடைக் காலத்திய இந்தியவரலாற்றின் கானுயிர் அறிவியல் (wildlife biology) பற்றி அறிதற்கு அரிதான தரவு களைத் தருவன.

05. காடுகள் பொதுவாக மழைக்காடு, ஈரக்காடு, முள்காடு, ஊசியிலைக்காடு, அகன்றயிலைக்காடு, சதுப்புநிலக்காடு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. சிதம்பரம் அலையாத்திக்காடு சதுப்புநிலக்காட்டிற்கு நல்ல காட்டாகும். ஈரக்காட்டுத்தாங்கல்தான் ஈக்காட்டுத்தாங்கல் என்று மருவியது.

06. சாயாவனம் என்ற இந்நாவலின் பெயருக்கு சூரியஒளி புகமுடியாத அளவிற்கு மரங்களின் நிழலில் அடைபட்டுப்போன காடு என்பது பொருள். அடைபட்ட அந்நிழற்காட்டினை அழிப்பதே கதைக் கரு. இவ்வழிவை முந்நிறுத்தி நாவல் வளர்கிறது. வனம், மெல்ல மெல்ல அழிகிறது. இவ்வழிப்பில் ஒவ்வொரு தாவர இனமும் வெட்டி சாய்க்கப்பட்டு, தீயிலிடப்படுவதனை சோகவாடை விளக்க வருணிக் கிறார் கதையாசிரியர். மூங்கில்புதர், கூந்தல்பனை, கொடிகளால் உயிர்பிணைக்கப்பட்ட பலவகைத் தாவர இனங்கள் வேரோடு பல ஆயுதங்களால் சாய்க்கப்படுவது ஒரு தாய் தம் மகனால் கொல்லப் பட்டு, தீயிட்டுக்கொளுத்தப்படுவது போல் காட்சியாக கண்முன் விரிகிறது. இதனைச் செய்து முடிப்பவன் சிதம்பரம் எனும் முதன்மை கதாபாத்திரம்.

07. 204 பக்கங்கள் கொண்ட இச்சிறுநாவலில் முதன்மைப்பாத்திரமான சிதம்பரத்தையும் சேர்த்து 124 பேர் ஊடுபாவாக வந்துபோகின்றனர். இவற்றுள் 22 பேர் பெண்பாத்திரங்கள். இவர்களில் அய்ந்து பெண்கள் இறக்கின்றனர்: ஒருவர்: சிதம்பரத்தின் தாய் (அம்மை நோயினால் இறந்தவர்). அடுத்தவர்: சிதம்பரத்தின் சின்ன பாட்டி. இவர் அரளிவிதை யினை அரைத்துக் குடித்து தற்கொலை செய்து கொள்கிறார். பிறிதொருவர் டேவிட்சாரநாதனின் மனைவி (பெயர் இல்லை). இவர் கணவரால் அடித்துக் கொல்லப்படுகிறார். மற்றொருவர் சிவனாண்டித்தேவரின் மனைவி, இயற்கை மரணம்.

அடுத்து, புன்னைமரத்தில் தூக்கிட்டுத் தொங்கிய பெண், லட்சுமியின் தாய். காட்டழிப்பில் இறந்து போன காத்தவராயன் எருது கவலையோடு நினைக்கப் படுகிறது. காட்டழிப்பில், உள்ளும், புறமுமாக மாமன் முறையில் சிவனாண்டித்தேவர் சிதம்பரத்தை இயக்குகிறார். அவனுடன் விருப்பும்-வெறுப்புமாக ஊடாடுகிறார்.

08. களம். மயிலாடுதுறையினை மையமாகக் கொண்டு நகரும் இந்நாவலின் கதைப்போக்கில் கதாபாத்திரங்கள் மாங்குடி, கூரைநாடு, மல்லியம், சாயாவனம், குத்தாலம், சீர்காழி, மேலகரம், காவேரிப்பட்டினம், நெய்விளக்கு,மணக்குடி, நொச்சிக்குப்பம், திட்டக்குடி போன்ற ஊர்களில் இருந்து வந்துபோகின்றன.

09. காலம். வரலாற்றுத்தன்மை (historicism). இதுபோன்ற நடப்பியல் நாவல்களின் உண்மைத் தன்மையை (reality) கதையூடாக கோடுகாட்டும் வரலாற்று நிகழ்வுகள் பற்றிய குறிப்புகளே உறுதி செய்யும். ஓரிடத்தில் காங்கிரஸ்-மாநாடு பற்றி குறிப்பு வருகிறது. சுப்ரமண்யபாரதி காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டது பற்றி ஒரு கதா பாத்திரம் பேசும். பாரதி 1905 ஆம் ஆண்டு கல்கத்தாவில் நிகழ்ந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். அங்குதான் சிஸ்டர் நிவேதிதா வினை சந்தித்து பெண்ணுரிமை பற்றிய புரிதலை ஞான ஒளியாகப் பெற்றார். இவ்வரலாற்றுப் புள்ளியின் அடிப்படையில் நாவலின் கதை நகர்வினை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் என்று கணிக்கலாம். ஓரிடத்தில் விபின்சந்திரபால் பற்றிய பேச்சு வருகிறது.

10. மரபு. இந்திய இலக்கியமரபினை இந்நாவல் ஓரளவு பேணுகிறது. அப்பண்ணசாமியின் மகன் சாம்ப மூர்த்தி என்ற பாத்திரம் கவிகாளிதாஸர், ஞான சம்பந்தர், குமரகுருபரர், தியாகையர் போன்றோரை நினைவூட்டுகிறது. ஊமையாகப்பிறந்து பாடும்திறன் பெற்ற ஒரு பிராமண கதாபாத்திரம் பிரம்மசாரி யாகவும், செவிட்டூமை குமாரசாமி என்ற அபிராமண பாத்திரம் இருமனைவியருடன் வாழ்வது போன்றும் படைக்கப்பட்டுள்ளன.

இந்தியமரபில் சாதி,சமயம், கடவுள், பாலியல் போன்றவை முதன்மை பெறும். இந்நாவலில் மூன்று கிறித்தவப் பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. ஒன்று: நாவலின் மையப்பாத்திரம் சிதம்பரம். இவன் உண்மையில் டேவிட் சிதம்பரம். இவன் இலங்கையில் கறுப்பு உபதேசியார் அதாவது native Pasteur வெள்ளைப்பாதிரியார் (European Pasteur) என இரு பாதிரிமார்களால் ஞானஸ்நானம் பெறுகிறான். வயதில் மூத்த மணமான கிறித்தவப் பெண்ணைக் காதலித்து துயருற்று விலகுகிறான். இக்கட்டம் மோகமுள் நாவலை நினைவூட்டும். இரண்டு: கிருஷ்ணன். இவன் வேணுகோபால் ஐயரின் மகன். மேற்படிப்பிற்கு வெளியூர் சென்ற அவன் கிறித்தவப் பெண்ணை சர்ச்சில் முறைப்படி மணந்தவன். கலப்பு மணத்தால் இழந்த சமூகமரியாதையினை படிப்பறிவு, பணம் இவற்றால் ஈடுகட்டுகிறான். இவ்விரு பாத்திரங்கள் மூலம் கிறித்தவம் உலக அறிவினைத் தரும் என்ற தொனி மெல்லோசையாகக் கேட்கிறது. மூன்று: டேவிட்சாரநாதன். எட்டாவது முறையாகக் கருவுற்ற தம் மனைவியை குடிபோதையில் அடிக்க அவள் கொல்லப்படுகிறாள். மேலே சுட்டப்பட்ட இருவருக்குக் கிட்டிய ஞானஒளி டேவிட்சார நாதனுக்கு ஏனோ கிடைக்கவில்லை. நாவலில் ஓரிரு தொடர்கள் பைபிள் சாயலில் அமைந்துள்ளன.

11. பாலியல். வளமையான காவிரிப்படுகைக்கே உரிய உபரி உற்பத்தியின் விளைச்சலான தேவதாசி முறையும் நாவலில் பதியப்பட்டுள்ளது. பஞ்சவர்ணம் என்ற தாசியுடன் சாம்பமூர்த்திஅய்யர், சிதம்பரம், மிராசுதார் என மூவரும் உறவுவைத்துள்ளனர். ஒருமுறை தாசியின்வீட்டில் சிதம்பரம் குலவிக் கொண்டிருந்தபோது மிராசுதார் வாசல்வழியே நுழையவே, சிதம்பரத்தினை பஞ்சவர்ணம் பின்வாசல் வழியே வெளியே அனுப்பிவைக்கிறாள்.

நாவலின் இறுதிக் கட்டத்தில் நிகழும் ஒரு திருமண நிகழ்வில் சிதம்பரத்தின் நடத்தை கீழ்க் கண்டவாறு பதியப்படுகிறது.

> பெண்குழந்தை நான்கு வயதிருக்கும். பொன்னிற மான மேனி. அலைபாயும் கண்கள். அவன் (சிதம்பரம்) உவகையுற்று அவளை வாரி யணைத்துக் கொண்டான். இதழில் முத்த மிட்டான். குழந்தை அவனை உற்று நோக்கியது. பார்வை மிரள, தன் மாமா இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டது போல அவன் பிடியிலிருந்து நழுவி விருட்டென்று ஓடியது.

இன்னொரு பாத்திரமான வண்டியோட்டும் மீசைக்காரன் தம்பி மனைவியை மூன்றாண்டுகள் சொந்த மனைவியாக வைத்துக்கொண்டிருந்தான் என்று வாசகர்களுக்கு அறிமுகமாகிறான்.

எவ்வளவு விசித்திரமான பெண். மூன்று குழந்தைகளுக்குத் தாயானபிறகும் மோகம் குன்றாமல் மையலுற்றாள் என்று ஒரு பெண்பாத்திரம் பற்றிய பதிவும் உண்டு.

ஒருத்திக்கு ஒரு சமயத்துல ரெண்டு புருஷங்க இருக்கமுடியுமா? என்று ஒரு கூற்று ஓரிடத்தில் கேள்வியாக நாவலில் ஒலிக்கிறது.

சாதிப் பெருமைகள் பேசும்படியான செய்திகள் பதிவாகவில்லை. ஆனால், இருசாதிகளின் மீதான விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

ஒருமுறை அக்ரஹாரத்தில் வீடுகள் தீ பற்றி எரியும்போது அங்குவசிக்கும் மக்கள் முன்வராத *போது அய்யருமாருங்க சமாசாரமே ஒரு தினுசு. வாயால ரொம்பநல்லா பேசுவாங்க. வேத சாஸ்திரம் சொல்லுவாங்க. ஆனா, காரியெமென்னா முன்னே போகமாட்டாங்க. இது இப்பத்தி சமாசாரமில்லே* என்று ஒரு விமர்சனம் வீசப்படுகிறது.

இன்னொரு கட்டத்தில் சிதம்பரத்தின் பணச் செல்வாக்கு பற்றி பதஞ்சலி சாஸ்திரி சுப்புரத்ன அய்யாரிடம்... *கல்கத்தா காங்கிரஸுக்கு போக ராமசுப்ரமண்ய அய்யருக்கு இவன் தான் பணம் கொடுத்தானாம்* என்று சொல்கிறார்.

*ஒரு வெள்ளைக்காரனைக் கொன்னுட்டு பணத்தை அள்ளிக்கிட்டு வந்துட்டானம்*

*நெஜமா...?*

*நெஜந்தான்...!*

*கள்ள ஜாதி எல்லாம் பண்ணும்.*

இது அச்சாதியின்மேல் பிராமணர் வைக்கும் விமர்சனமாகப் பார்க்கலாம்.

ஆனால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுப்ரமண்யபாரதி, சுப்ரமண்யசிவா, வாஞ்சிநாதன் அளவிற்கு பிற சமூகத்தினர் விடுதலைப் போராட்டத்தில் உக்கிரம் காட்டவில்லை என்பது பொய்யில்லை. வாஞ்சியைப்போல் அபிராமண சமூகத்தினர் வெள்ளையர்களைக் கொன்றனர் என்று சொன்னால் அது உண்மையில்லை. அதாவது இந்திய தேசிய காங்கிரஸ் தேசியவிடுதலை இயக்கம் என்ற போராட்டத்தினை முன்னெடுத்தபோதும் அவ் வியக்கத்திற்கு காந்தி ஒரு தலைவராக நிலை பெற்றதற்கு முன்பும் இருந்த நிலை.

ஒருவரை ஒருவர் ஏமாற்றிக்கொள்ளும் சாதிக் கட்டு இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள இவ் வட்டாரத்தில் சாதி பெயரில் தெருப்பெயர் உண்டு. கூரைநாடு பகுதியில் ஒரு தெருவின் பெயர் இடத்தெரு; மற்றொன்று சாலியத்தெரு. நாவலில் சாலியத்தெரு பதியப்பட்டுள்ளது.

இஸ்லாமிய கதாபாத்திரங்கள் ராவுத்தர், மரைக்காயர், சாயபு என்ற பின்னொட்டுப் பெயரில் அறிமுகமாகின்றன. தற்காலத்தில் இச்சொற்கள் வழக்கில் இல்லை; இவர்கள் பொதுவாக முஸ்லிம் என்ற சொல்லில் சுட்டப்படுகின்றனர். பிராமணர்கள் அய்யர், அய்யங்கார், சாஸ்திரி என்று அறிமுகப் படுத்தப்படுகின்றனர். நாயுடு என்ற பெயரில் தெலுகு இனத்தினரும், ராவ் என்று மராட்டியர்/கன்னடரும் பேசப்படுகின்றனர். ஓரிடத்தில் பறையர் சமூகத்தின் இருதலைமுறைப் பெண்கள் தாய், மகள் என்று அறிமுகமாகின்றனர். ஒரு மகள், வாழாவெட்டியாகக் காட்டப்படுகிறார்.

*12.* விவரணை. நாவலின் முதன்மைப் பாத்திரமான சிதம்பரத்தின் இயக்கத்திற்கு களம் அமைத்துத் தரும் சாயாவனமான காடு காடுகளை உள்ளடக்கிய காடாக விவரிக்கப்படுகிறது. கள்ளிக் காடு, சப்பாத்திக்கள்ளிக்காடு, பிரப்பங்காடு மூங்கில் குத்து இவற்றுடன் புன்னைமரங்கள் நிறைந்திருந் தாலும் இச்சாயாவனம் புளியந்தோப்பு என்றே பெரு மிதமாகப் பேசப்படுகிறது. *48* வகையான தாவரங் களைப் பேசும் நாவலாசிரியரின் விவரணையில் மூன்று வகையான பாகல், ஒன்பது வகையான மரங்கள், நான்கு வகையான கொடிகளுடன் புல்லுருவியும் இடம்பெறுகிறது. அக்காகுருவி முதல் ஆமைவரை பத்தொன்பதுவகையான விலங்குகள் இடம்பெறு கின்றன. ஒரு நொண்டிநரியும் இடம்பெறுகிறது.

*13.* தீ. நாவலில் தீ தொடர்ந்து பேசப்படுகிறது. டேவிட் சிதம்பரம் இலங்கையில் ஒரு தீ விபத்தினை கண்ணுற்றான். சாயாவனத்தில் அக்ரஹாரமே தீ பற்றியது விவரிக்கப்படுகிறது. சாயாவனமே தீயிட்டுச் சாம்பலாவது நாவலின் சோகமான பகுதி. கதையில் அக்னி கடவுளுக்கும் ஜோதி கடவுளுக்கும் இடையிலான போட்டி இடம் பெறுகிறது. ஓரிடத்தில் கோயில்தேர் எரிந்தது பற்றியும் குறிப்பு உண்டு.

*14.* நோக்கம். தொழிற்சாலை சார்ந்த புதிய அறிவியல் வளர்ச்சியினை வரவேற்றும் வனங்கள் அழிக்கப்படுவதனை கவலையுற்றும் இந்நாவலில் தம் சமூகஅக்கறையினை சா.கந்தசாமி பதிவிட்டிருக் கிறார் எனலாம். சுருக்கமாக டேவிட்சிதம்பரம் மூலம் சாயாவனத்தினை சிவனாண்டித்தேவருடன் கூட்டு கண்டு சாய்த்துவிட்டார் என்று சொல்லலாம்.

*15.* பலன்: புளியமரங்கள் அழிக்கப்பட்டு கரும்பாலை கட்டப்பட்டதால் புளிப்பு போயி இனிப்பு வந்தது என்று முடிக்கலாம்.

*ஸ்ரீலோசனி வரதராஜுலு அறக்கட்டளை நிதிநல்கையுடன் ஏ.வி.சி.கல்லூரி (தன்னாட்சி) மன்னம்பந்தல்-609305 தமிழாய்வுத்துறை சா.கந்தசாமியின் படைப்பாளுமை என்ற தலைப்பில் நடத்திய இருநாள் [24 & 25-10-2018] கருத்தரங்கில் அளிக்கப்பட்ட கட்டுரை.*

●



# புரட்சியின் திரைக்கதை

குருசாமி மயில்வாகனன்

**1917** நவம்பர் மாதம் 7ஆம் தேதி ரஷ்யாவில் புரட்சி நடைபெற்றது. இது நமக்குத் தெரியும். தற்போது நவம்பர் 7 ரஷ்யப் புரட்சி நாளாக ரஷ்யாவைத் தவிர்த்து உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதுவும் நமக்குத் தெரியும். ஆனால், ரஷ்யாவில் புரட்சி எப்படி நடைபெற்றிருக்கும்? அதை இன்றைய இளம் தலைமுறையினர் அறிவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ள நிலையில் அவர்கள் வாசிப்பதை மையமாகக் கொண்டது இக்கட்டுரை.

ரஷ்யாவில் புரட்சி. அது எப்படி நடந்திருக்கும்?. உலக நாடுகளில் ஆட்சி மாற்றங்கள் எப்படி நடந்திருக்கின்றன? இரண்டு வழிகளில் நடைபெறக் கூடிய ஆட்சி மாற்றங்களைப் பற்றியே நாம் அதிகமாக அறிந்திருக்கிறோம். 1. ஒரு நாட்டில் புதிய அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெறுகிறது. பல கட்சிகள் அத்தேர்தலில் போட்டியிடுகின்றன. அதில் ஒரு கட்சி வெற்றி பெறுகிறது. அக்கட்சியின் தலைவர் அந்நாட்டின் ஜனாதிபதியாகவோ, அல்லது அதிபராகவோ, அல்லது பிரதம மந்திரியாகவோ பதவியேற்றுக் கொள்கிறார். இது ஒரு வகையான ஆட்சிமாற்றம். ரஷ்யாவிலும் இப்படித்தான் நடந்ததா?.

2. ஒரு நாட்டிலுள்ள அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ராணுவமானது அந்நாட்டின் உச்சகட்ட அரசு அதிகார இடமாக விளங்கும் பாராளுமன்றத்திற்குள்

நுழைந்து, அதைக் கைப்பற்றி அங்கிருக்கும் அரசுப் பிரதிநிதிகளைக் கைது செய்து அல்லது கொன்று பாராளுமன்றத்தைக் கைப்பற்றுகிறது. ராணுவத்தின் தலைமை அதிகாரி தானே ஜனாதிபதியென்றோ, அதிபர் என்றோ அறிவிக்கிறார். இதை ராணுவப் புரட்சி என்கிறார்கள். இதுவும் ஒருவகையான ஆட்சி மாற்றம்தான். ரஷ்யாவிலும் இப்படித்தான் நடந்ததா?.


முதலில் சொன்னதை ஆட்சி மாற்றம் என்றும் அடுத்துச் சொன்னதைப் புரட்சி என்றும் குறிப்பிடு கிறோம். ரஷ்யாவில் நடைபெற்றதையும் புரட்சி என்றே கூறுகிறோம். அப்படியானால், இரண்டா வதாகச் சொன்னதுபோல்தான் ரஷ்யப் புரட்சி நடைபெற்றதா? ஆம். புரட்சி அப்படித்தான் நடை பெற்றது. ஆனால், அது ராணுவத்தால் நடத்தப்பட்ட புரட்சியல்ல. ஒரு கட்சியால் நடத்தப்பட்ட புரட்சி.

முதலில் சொன்ன வழிமுறையிலுள்ளபடியான ஒரு கட்சி, தனது உறுப்பினர்களான மக்களைத் திரட்டிக்கொண்டு இரண்டாவதாகச் சொன்ன வழிமுறையிலுள்ளதுபோன்று பாராளுமன்றத்திற்குள் நுழைந்து, அதைக் கைப்பற்றினால் எப்படியிருக்கும்?. ரஷ்யப் புரட்சி அப்படித்தான் நடைபெற்றது.

ரஷ்யப் புரட்சியை நடத்தியவர் லெனின் என்றே பலர் அறிந்து வைத்திருக்கிறோம். ஒரு வகையில் அது உண்மைதான் ஆனாலும் அதுவே முழுமையான உண்மையல்ல. ரஷ்யப் புரட்சியை நடத்தியது ரஷ்ய சமூக - ஜனநாயகக் கட்சி, அதாவது ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி. ரஷ்யாவில் புரட்சியை நடத்துகின்ற பொறுப்பை கட்சியானது லெனினிடம் ஒப்படைக்கிறது. அப்பொறுப்பினை அவர் ஏற்றுக் கொள்கிறார். பொறுப்பு என்பது பலவிதமான நெருக்கடியான நேரங்களிலும், பலவிதமான முடிவுகள் முன்வைக்கப்படுகின்ற நேரங்களிலும் லெனின் எடுக்கும் முடிவே இறுதி முடிவாக அமையும் என்பதுதான். சரியான நேரத்தில் சரியான முடிவுகளை அவர் எடுத்தார். அவர் கற்றிருந்த மார்க்சியக் கல்வி அவருக்கு அந்த ஆற்றலைக் கொடுத்திருந்தது.

புரட்சி நடந்து முடிந்த அந்த நாட்கள் மிகவும் பரபரப்பானவை. மிகவும் ஆச்சர்யம் மிக்கவை. உலக நாடுகள் ரஷ்யப் புரட்சியை பிற நாடுகளில் நடைபெற்றுள்ள ராணுவப் புரட்சியைப் போன்ற ஒன்றுதுதான் என்றே எண்ணியிருந்தன. லெனினை ஒரு ஆயுதந் தாங்கிய கட்சியின் தலைவர் என்று தான் கருதியிருந்தன. கம்யூனிசம் எனும் கார்ல் மார்க்சினுடைய கற்பனையான சித்தாந்தத்தைக் கடைப் பிடிக்கின்ற, வெற்றிபெற முடியாத நடவடிக்கை என்றே அவை புரட்சி குறித்து நினைத்திருந்தன. ஆனால், புரட்சி வெற்றிபெற்றவுடன் லெனின் அறிவித்த விசயங்கள்தான் உலகின் கவனத்தை ரஷ்யாவின் பக்கம் திருப்பின. அந்த அறிவிப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டவுடன்தான் உலக நாடுகள் இதுவரை அடைந்திராத அதிர்ச்சியை அடைந்தன. அவ்வாறு உலகைக் குலுக்கிப் பார்த்த அறிவிப்புகளில் ஓர் அறிவிப்புதான் தனிமனிதனின் மிதமிஞ்சிய சொத்துக்கள் அனைத்தும் அரசுடைமை ஆக்கப்படு கின்றது எனும் அறிவிப்பு, இன்றும் கற்பனை செய்ய முடியாத ஓர் அறிவிப்புதான் அது. முதலாளி களையும் பணக்காரர்களையும் ஒழித்தது அந்த அறிவிப்பு. என்ன ஆச்சரியம்? முதலாளிகளும் பணக்காரர்களும் இல்லாமல் உழைப்பவர்களை மட்டுமே கொண்டதாக ஒரு நாடா?. ஆம். அப்படி ஒரு நாடாக மாற்றப்பட்டது. அவ்வாறு மாற்றியது ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி.

அன்றிலிருந்து உலகம் முழுதும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவாகத் தொடங்கின. இன்று எத்தனையோ நாடுகளில், எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன. அக்கட்சிகள் யாவும் அவைகள் இருக்கும் நாட்டின் எல்லையைத் தாண்டி ஒரு நூலளவுகூடப் பரவ முடியாதவைகளே. ஆனால், ஒரே சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்ட பல கட்சிகள் பல நாடுகளிலும் இருக்கமுடியுமென்றால் அவை கம்யூனிஸ்டுக் கட்சிகளாக மட்டுமே இருக்க முடியும் என்பதே கம்யூனிசம் ஓர் உலகளாவிய சித்தாந்தம் என நாம் புரிந்து கொள்ளலாம்.




**உலகைக் குலுக்கிய பத்து நாட்கள்**

ஜான் ரீடு

*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*

விலை : ₹ 550/-

ரஷ்யப் புரட்சியின் போது ரஷ்யாவில் ஒரே யொரு கட்சி மட்டுமா இருந்தது? இல்லை. பல கட்சிகள் இருந்தன. அவற்றில் கம்யூனிசத்தை ஏற்றுக்கொண்ட கட்சிகளும் பலவாக இருந்தன. அவற்றின் பெயர்களைப் பார்க்கலாம்.

1. முடியரசுவாதிகள்;

1.1 அக்டோபர்வாதிகள் உள்ளிட்ட பல குழுக்கள்;

2. காடேட்டுகள்;

2.1 பொதுப்பிரமுகர் குழு;

3. நரோத்னிய சோசலிஸ்டுகள் அல்லது துருதொவிக்குகள்;

4. ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி;

4.1 மென்ஷ்விக்குகள்;

4.2 மென்ஷ்விக் சர்வ தேசிய வாதிகள்;

4.3 போல்ஷ்விக்குகள்;

4.4 ஒன்றுபட்ட சமூக ஜனநாயகவாதிகள் அல்லது சர்வ தேசிய வாதிகள்;

4.5 எதீன்ஸ்துவோ;

5. சோசலிஸ்டுப் புரட்சியாளர் கட்சி;

5.1 இடதுசாரி சோசலிஸ்டுப் புரட்சியாளர்கள்;

5.2 பெரும்வரையாளர்கள்.

இத்தனை கட்சிகளில் ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் போல்ஷ்விக் பிரிவுதான் லெனினிற்குப் புரட்சி நடத்தும் பொறுப்பைக் கொடுத்த கட்சி.

எத்தனை கட்சிகள்?, எத்தனை பிரிவுகள்? அத்தனையும் ரஷ்யாவின் ஆட்சிமாற்றம் செய்வது குறித்துப் பல்வேறான திட்டங்களைக் கொண்டிருந்தன. ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதில்கூட பல விதமான கருத்து மாறுபாடுகள் இருந்தன. முதலில் மன்னராட்சி ஒழிக்கப்பட்டது, அதிலும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன. பின்னர் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. அதிலும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன. ஆட்சியதிகாரத்தைக் கைப் பற்றிவிடலாம் என்கிற சந்தர்ப்பம் நெருங்கிவந்தது. அப்போதும்கூட வேண்டும், வேண்டாம் என மாறு பட்ட கருத்துக்கள் இருந்தன. கண்டவுடன் சுட்டுக் கொல்லப்படும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததால் தலைமறைவாக இருந்த லெனின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுங்கள் என கட்சியின் உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டார். கட்சி என்றால் வேறெதுவுமல்ல. மக்களின் பிரதிநிதிகள்தான். கட்சி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. இவ்வாறு ஆட்சியதிகாரம் கைப் பற்றப்பட்ட இடம் ஏராளமான விசாலமான அறைகளையும் கூடுமரங்களையும் கொண்டிருந்த ஸ்மோல்னி மாளிகை எனும் பிரம்மாண்டமான அரண்மனையாகும். அங்குதான் சமீபத்தில் உருவாக்கப் பட்ட இடைக்கால அரசாங்கம் செயல்பட்டு வந்தது.

ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் எனும் போல்ஷ்விக் பிரிவின் முடிவை ஏற்பவர்கள் அம்மாளிகையில் தங்களது ஆதரவோடு குழுமி யிருந்தார்கள். ஏற்கக்கூடாது என்பவர்களும் தங்களின் ஆதரவாளர்களோடு இருந்தார்கள். ஆட்சி முறை எதிலும் மாற்றமே செய்யக் கூடாது என்பவர்களும் கூட அம்மாளிகையில் குழுமியிருந்தனர். ஒழிக்கப் பட்ட ஜார் மன்னரின் ராணுவப் படையினர் அங்கிருந்தனர். அத்தனை பிரிவுகளின் முன்னணி யாளர்களும் ஆங்காங்கே இருந்த விசாலமான அறைகளுக்குள் இருந்து கொண்டு தங்களது நிலைப் பாட்டை ஆதரவாளர்களிடம் விளக்கிக் கொண்டிருந்தனர்.

அரண்மனைக்கு வெளியே நகரில் என்ன நடக்கிறது? பல்வேறு அமைப்புகளின் ஆயுதந் தாங்கிய படைகள் நகரைச் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கின்றன. அவைகளின் பெயர்களைப் பார்ப்போம். 1. இராணுவ அதிகாரிகளது ஒன்றியம். இது ஜார் மன்னருடைய ராணுவம்.

2. தெக்கீன்ஸி படை. இது ராணுவத்திலுள்ள ஜெனரல் கர்னீலவுக்கு விசுவாசமான ஆசிய முஸ்லீம் பழங்குடியினத்தவர்களைக் கொண்டு உருவாக்கப் பட்ட மூர்க்கமான படை.

3. வெண்காவலர் படை, இது ரஷ்ய முதலாளிகள் வைத்திருந்த ஆயுதப்படை.

4. சாவுப் பட்டாளங்கள் அல்லது அதிர்ச்சிப் பட்டாளங்கள். இது இடைக்கால அரசாங்கத்தின் தலைவர் கெரன்ஸ்கி வைத்திருந்த படை.

5. ஜார்ஜ் வீரர்கள் படை. இது ஜார் மன்னனால் ஜார்ஜ் சிலுவை விருது வழங்கப்பட்டவர்களுடைய படை.

6. விவசாயிகளது ஒன்றியம். இது தொடக்கத்தில் புரட்சிகர விவசாயிகளுடையதாக இருந்து பின்னர் பணக்கார விவசாயிகளுடையதாக மாறிய படை.

7. செம் படை (ரெட் ஆர்மி). இது கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆயுதப் படை. இப்படை மட்டும் தன்னை ஓர் உள்நாட்டுப் போருக்குத் தயாராக்கிக் கொண் டிருந்தது. பிற படைகள் அனைத்தும் யாரும் கலகமோ கலவரமோ செய்துவிடாமல் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன. வேடிக்கை பார்த்துக்கொண்டே உலாவிக் கொண்டிருந்தன.

கற்பனை செய்து பாருங்கள். ஒருநாட்டின் ஆளுங்கட்சியின் படைகள், எதிர்க்கட்சிகளின் படைகள், அதிகாரத்தைப் பறிக்க முயலுகின்ற கம்யூனிஸ்டுக் கட்சியின் படைகள் என பல படைகள் தலை நகரத்தில் ஆயுதங்களோடு உலாவிக் கொண் டிருக்கின்றன. எது வேண்டுமானாலும் நடக்கலாம். என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். மக்களோ இவர்களுக்கிடையில் தங்களது வேலைகளைப் பார்த்துக்கொண்டும் இவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டுமிருக்கிறார்கள்.

லெனின் புரட்சிக்கு அழைப்பு விடுக்கிறார். செம்படை தாக்குதலைத் தொடங்குகிறது. ஸ்மோல்னி அரண்மனைக்குள் நுழைகிறது. இதை ஏற்றுக் கொள்ளாத பிற அமைப்புகள் கண்டனக் குரல்களை எழுப்புகின்றன. பல தலைவர்கள் நைஸாக நழுவிடுகின்றனர். பல தலைவர்கள் கைது செய்யப் படுகின்றனர். சிலர் பின்னர் போல்ஷ்விக் நிலைப் பாட்டினை ஏற்றுக்கொண்டு செயல்படத் தொடங்கு கின்றனர்.

அந்தப் பிரம்மாண்டமான அரண்மனையில் குழுமியுள்ள கட்டுக்கடங்காத மக்கள் திரளினூடே மாறுவேடத்தில் தலைவர் லெனின் நுழைகிறார். பெரும் ஆரவாரம். மேடையில் ஏறுகிறார். புரட்சி வெற்றிபெற்றதாக அறிவிக்கிறார். கட்சி தனக்குக் கொடுத்த கடமையை நிறைவேற்றினார். உடனடி யாகக் கட்சிக் கமிட்டி கூடுகிறது. புரட்சிகர அரசாங்கத்தின் முதல் ஆட்சி மன்றக் குழுவினையும் அதன் தலைவராக லெனினையும் அறிவிக்கிறது. நீங்கள் அவரை ரஷ்யாவின் ஜனாதிபதியென்றோ அல்லது தலைவரென்றோ அல்லது பிரதம மந்திரி யென்றோ அழைத்துக் கொள்ளலாம். ஆனால், அவர் இப்போது ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர்.

கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியது இந்தப் பூமி. சில ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னால் தோன்றியது மனித இனம். சில நூறு ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டதுதான் இந்த அரசு நிர்வாக முறை. சில பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரை அவை மாற்றமடைந்து கொண்டேயும் வந்தன. ஆனால் அந்த முறையை முழுமையாகப் புரட்டிப் போட்டதுதான் ரஷ்யப் புரட்சி. இதன் மூலமாக முற்றிலும் புதியதொரு அரசமைப்பு முறையை இந்த உலகிற்கு அறிமுகப்படுத்தியதுதான் ரஷ்யப் புரட்சி.

ரஷ்யப் புரட்சியைக் கண்முன்னால் காண வேண்டுமா? ஜான் ரீடு எனும் அமெரிக்கர் எழுதியுள்ள உலகைக் குலுக்கிய பத்து நாட்கள் படியுங்கள். அது ரஷ்யப் புரட்சியின் திரைக்கதை.

# நாமக்கல் நகரில் புத்தகத் திருவிழா




நாமக்கல் மாவட்ட நூலக ஆணைக்குழு, பள்ளிக் கல்வித்துறை, இந்திய படைப்பாளர்கள் மற்றும் பதிப்பாளர் இணைந்து நடத்தும் மாபெரும் புத்தகத் திருவிழா 10.10.2018 அன்று முதல் நாமக்கல் கவிஞர் திடலில், நடைபெற்று வருகிறது.

புத்தக திருவிழாவை நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மு. ஆசியாமரியம் IAS அவர்கள் திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் P. உஷா, நாமக்கல் மாவட்ட மக்கள் செய்தித் தொடர்பு அலுவலர், மாவட்ட நூலக அலுவலர் வே.பாலகிருஷ்ணன், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் பொது மேலாளர் தி.ரத்தினசபாபதி, மண்டல மேலாளர் அ.கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# காந்தியம் தோற்றுவிட்டதா?

உதயை மு. வீரையன்



**இ**ந்த நாடு காந்தியடிகளால் பெருமை பெற்றிருக்கிறது. உலக மக்களுக்கு இந்தியா 'காந்தியின் பூமி' என்றே அறிமுகம் ஆகியிருக்கிறது. அந்தப் பெருமைக்குரிய தேசம் அவரது கொள்கை களை ஏற்றுக் கொண்டிருக்கிறதா?

"உலகத்திற்கு உபதேசிக்க புதிதாக என்னிடம் எதுவும் இல்லை. மலைகள் எவ்வளவு பழமை யானவையோ, அவ்வளவு பழமையானவை சத்தியமும், அகிம்சையும்..." என்றார் அவர்.

ஆனால் அவர் உபதேசித்த சத்தியமும், அகிம்சையும் எங்கேயிருக்கிறது என்று தேட வேண்டியிருக்கிறது. தேடினாலும் கிடைத்துவிடுமா? கிடைத்தாலும் அவற்றை விட்டு வைப்பார்களா? அவரது 150 ஆம் பிறந்தநாளில் இவ்வாறு ஏராளமான கேள்விகள் எழுகின்றன.

"இத்தகைய ஒரு மனிதர் இரத்தமும், சதையு மாய் இந்த மண்ணில் நடமாடினார் என்பதை வருங்காலத் தலைமுறையினர் நம்புவது கடினம்..." என்று காந்தியடிகளைப் பற்றி அறிவியல் மேதை ஐன்ஸ்டீன் கூறினார். இது எவ்வளவு பெரிய உண்மை என்பதை நிகழ்காலம் மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறது.

இந்தக் காலத்துக்கு அவரது கொள்கைகள் தேவைப்படவில்லையா? அகிம்சை என்பது கோழைத் தனத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறதா? அமைதியும், பொறுமையும் அடிமைத்தனமாகக் கருதப்படுகிறதா? அணுகுண்டு யுகத்தில் அன்புவழி தேவைப்படவில்லையா? ஆரவாரமான இந்த உலகத்துக்கு அமைதியின் பொருள் புரியவில்லையா?

இந்தக் கேள்விகள் எழுவது இயற்கை; மகான்களும், மகாத்மாக்களும் காட்டிய வழிகள் புறக்கணிக்கப்படுவதால் ஏற்படும் கேள்விகள்; அவர் பெயரை உச்சரிக்கிறவர்களே அவர் புகழுக்குக் களங்கம் சேர்ப்பதால் எழும் கேள்விகள்.

"விழாக்கள் கொண்டாடுவதில் கவர்ச்சி மிகுந்த நாடு நம் நாடு. புகழ் பாடுவதிலும், பூசைகள் நடத்து வதிலும் வல்லவர்கள் நாம். ஆனால் அவர் கூறிய

படி நடக்கின்றோமா என்றால் அதுதான் இல்லை... என்றார் அறிஞர் அண்ணா, காந்தியாரின் 1967 பிறந்த நாளில்! அதுதான் இப்போது தொடர்கிறது...

கொள்கைகளில் குற்றமில்லை. அவற்றை நடைமுறைப்படுத்தாமல் வெற்று விளம்பரத்துக்காக மட்டுமே அவர் பெயரைப் பயன்படுத்துவதால் ஏற்பட்ட ஏமாற்றம். சொல்லுக்கும், செயலுக்கும் இருக்கிற தடுமாற்றம், உண்மையைப் பேசுவதில்லை என்ற உறுதிமொழி. இவையெல்லாம் அவரை இக் காலத் தலைமுறையினர் இடமிருந்து அந்நியப் படுத்தி விட்டது.

காந்தியார் போன்ற மாமனிதர்கள் பங்குபெற்ற அரசியல் இப்போது எப்படியிருக்கிறது? நல்லவர் களால் ஒதுக்கப்படும் இடமாகவும், பொல்லாதவர் களின் புகலிடமாகவும் மாறிவிட்டதா? மன்னர் ஆட்சி களையே எதிர்த்து நின்று புறம்கண்ட மாபெரும் மக்கள் சக்தி, இந்த மக்களாட்சியில் தோல்வி கண்டு சோர்ந்து போய்விட்டதா?

காந்தியத்தில் வெற்றி மட்டும் முக்கியமில்லை. அதற்கான வழிமுறைகளும் முக்கியம். ஆனால் இப் போது அரசியல்களம் அப்படியா இருக்கிறது? எப்படி யாவது வெற்றி பெறவேண்டும். வெற்றிபெற்று விட்டால் போதும், எதிர்ப்புகள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

இதற்காக அரசியலைப் புறக்கணித்துவிட முடியாது. அரசியல் இல்லாமல் என்ன இருக்கிறது? ‘எனக்கு அரசியல் வேண்டாம்’ என்று ஒதுங்கிவிட முடியுமா? நாம் ஒதுங்கிப் போனாலும் அது நம்மைத் துரத்தும்; துரத்திக் கொண்டேயிருக்கும். இதிலிருந்து தப்பித்து ஓடுவதா அகிம்சை?

சுதந்திரம் கிடைத்தவுடன் நாட்டில் பாலாறும், தேனாறும் பாயும் என்றார்கள். பணக்காரர், ஏழை என்ற பாகுபாடு இல்லாமல் சமத்துவம் வரும் என்று மக்களும் நம்பினர். ஆனால் நடந்தது என்ன? ஏழை, செல்வர் என்று வேறுபாடு அதிகரித்துக் கொண்டே போவதுதான் மக்கள் கண்ட மக்களாட்சியின் பயன்.

“மக்களாட்சியின் கீழ், மிக அதிக பலம் வாய்ந்தவருக்கு இருக்கும் அதே வாய்ப்பே மிகுந்த பலவீனமானவருக்கும் இருக்க வேண்டும். இதுவே மக்களாட்சியைப் பற்றி நான் கொள்ளும் கருத்து. ஆனால் அகிம்சை வழியினால் அன்றி இதை என்றுமே அடைந்துவிட இயலாது” என்பது மகாத்மாவின் கருத்து. சுதந்திரத்துக்குப் பின் வந்த எந்த அரசாங்கமும் ஏற்று நடத்தவில்லையே!

வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் இன்றைய இளைஞர்களைத் திசை மாற்றி தீவிர வாதங்களுக்குத் துணை போகத் தூண்டுகிறது. ஒரு சிலரின் உல்லாச வாழ்வுக்காகப் பலபேர் உழைத்து உழைத்து ஓடாகத் தேய்வது வன்முறைக்குத் தூண்டி விடுகிறது. இதனை பயங்கரவாத அமைப்புகள் பயன்படுத்திக் கொள்ளுகின்றன.

குடியரசுத் தலைவர் உள்ளிட்ட உயர்பதவியில் இருப்பவர்களுக்கு ஊதியம் பலமடங்காக உயர்த்தப் பட்டிருக்கிறது. இதனால் சாதாரண குடிமக்களுக்கும் அவர்களுக்குமான இடைவெளி இட்டு நிரப்ப முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளது.

இங்கு பயங்கரவாதமும், தீவிரவாதமும் சமமாக நோக்கப்படுகிறது. வகுப்பு நல்லிணக்கம் பேசுகிற போதே வகுப்புவாதம் தூண்டிவிடப் படுகிறது. இறைவன் பேரால் அப்பாவி மக்கள் குருதியும், உயிரும் இழப்பது இங்கு யாருக்குச் சம்மதம்? சுயநலத்தைத் தூக்கி எறிந்துவிட்டு மக்கள் நலனை எதிர்கொள்ளும் துணிவுடைய அரசாங்கம் வர வேண்டும்.

மாவீரன் அலெக்சாண்டர் முன்னிலையில் ஒரு கடற்கொள்ளைக்காரன் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். அலெக்சாண்டர் அவனைப் பார்த்துக் கேட்டார்:

“நீ எந்தத் துணிச்சலில் இப்படிப்பட்ட நாச வேலைகளைச் செய்து கொண்டு கடலிலே உலவு கிறாய்?...”

அதற்கு அவன் பதில் கூறினான்: “நீ எந்தத் துணிவில் இந்த உலகத்தையே அடக்கியாள எண்ணு கிறாய்? என்னிடம் ஒரு கப்பல் இருப்பதால் நான் ஒரு கொள்ளைக்காரன் என்று அழைக்கப்படுகிறேன். ஆனால் உன்னிடம் மாபெரும் கப்பற்படை இருப்ப தனால் நீ மாவீரன் என்று போற்றப்படுகிறாய்!...”

அலெக்சாண்டர் அவனது துணிச்சலான பதிலைக் கேட்டு மௌனமானான். அவனை உடனே விடுதலை செய்துவிடும்படி ஆணையிட்டான். அலெக்சாண்டர் சிந்திக்கத் தெரிந்தவன் என்பதால் அவன் கூறியதன் உண்மைப் பொருளை உணர்ந்து கொண்டான்; ஒத்துக்கொண்டான். ஆனால், இன்றைய அரசியல் உலகில் இந்த உண்மையை ஏற்றுக் கொள்வார்களா?

‘இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்’

என்கிறது வள்ளுவம்.

ஆனால் இந்த மக்களாட்சியில் சிந்தனை யாளர்கள் மதிக்கப்படுவதில்லை. அவர்களின் விமர்சனங்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

இந்தியாவின் இடதுசாரி சிந்தனையாளர்களைச் சுட்டுக் கொல்வது தொடர்ந்து வருகிறது. ஆனால், அதுபற்றி நடவடிக்கை எடுக்காத காவல்துறை இருக்கும் சிலரையும் 'மாவோயிஸ்ட் ஆதரவாளர்' என்று முத்திரை குத்தி கைது செய்துள்ளது. 'புனே காவல்துறை இவர்களைக் கைது செய்திருப்பது சட்டவிரோதமானது' என்று நாடு முழுவதுமுள்ள முற்போக்காளர்கள் கண்டனக் குரல் எழுப்பி யுள்ளனர்.

'ஐந்து பேரையும் சிறையில் அடைக்கக் கூடாது; வீட்டுக் காவலில் வைத்திருக்கலாம்' என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. 'சட்ட விரோதத் தடைச் சட்டம்' என்ற கொடும் சட்டத்தில் கைது செய்யப் பட்ட இவர்களை இந்தியாவின் பல நகரங்களி லிருந்து புனே அழைத்துச் செல்ல கீழமை நீதி மன்றங்கள் அனுமதி வழங்கியதை நீதிபதிகள் கண்டனம் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட கவிஞர் வரவரராவ் உள்ளிட்டோரை 'நகர்ப்புறத்து நக்சல்கள்' என்று ஆளும் தரப்பு புதிய பட்டம் சூட்டுகிறது. அரசுக்கு எதிராகவும், மனித உரிமைகளுக்கு ஆதரவாகவும் குரல் கொடுப்பவர்களை தீவிரவாதிகள் என்று முத்திரை குத்துகின்றனர்.

"தீமையானவைகளையெல்லாம் எதிர்த்துப் போராடுவதினின்று ஒதுங்கி இருந்து விடுவது என்பதன்று அகிம்சை. அதற்கு மாறாக நான் கருதும் அகிம்சை, அதிகத் தீவிரமானது. தீமைகளை உண்மையில் எதிர்த்துப் போராடுவதும் பதிலுக்குப் பதில் செய்து விடுவது என்பதும் இயல்பாகவே தீமையை அதிகரிப்பதாகும். ஆகையால் அதைவிட அகிம்சை அதிகத் தீவிரமானது" என்று அகிம்சைக்கு இலக்கணம் கூறிச் சென்றார் காந்தியடிகள்.

தெய்வத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும் தேசத்தை அழிவை நோக்கி அழைத்துப் போவதை அனுமதிக்க முடியாது. மாமனிதர்கள் உபதேசிப்ப தில்லை. வாழ்ந்து காட்டுகிறார்கள். அகிம்சையும், சத்தியமும் அப்படியே! காந்தியத்தின் வெற்றி தாமதம் ஆகலாம். ஆனால் தோல்வியடைவதில்லை. ●




நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் மற்றும் சாத்தூர் கிளை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றமும் இணைந்து எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி எழுதிய நூல்கள் வெளியீடு - அறிமுக விழாவினை சாத்தூர் தனுஷ்கோடி மருத்துவமனை அரங்கத்தில் 23.10.2018 அன்று மாலை நடத்தியது. பேராசிரியர் தி.சு.நடராசன் நிகழ்விற்கு தலைமை தாங்கினார். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பொதுமேலாளர் தி.ரெத்தினசபாபதி, பேராசிரியை பொ.நா.கமலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். மருத்துவர் த.அறம் வரவேற்புரை நிகழ்த்தினார். 'தோழர்' நாவலை தொழிலதிபர் எம்.ஏ.சி.எஸ். இரவீந்திரன் வெளியிட தோழர் இரா.பாலச்சந்திரன் பெற்றுக்கொண்டார். 'சிம்ம சொப்பனம்' சிறுகதை தொகுப்பினை தொழிலதிபர் மெரிட் எஸ்.சுப்புராஜ் வெளியிட மு.இராச சுடலைமுத்து பெற்றுக்கொண்டார். 'தோழர்' நாவலை தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்ற மாநில பொதுச்செயலாளர் பேராசிரியர் இரா.காமராசு அறிமுகப்படுத்தினார். 'சிம்ம சொப்பனம்' சிறுகதை தொகுப்பினை காந்திகிராம கிராமிய நிகர் நிலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் அறிமுகப்படுத்தினார். நிகழ்ச்சியில் பேராசிரியர் சு.நயினார், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மண்டல மேலாளர் அ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நியூ செஞ்சுரியின் ராகுல்ஜி நூல்கள்





**ராகுல்ஜியின் சுயசரிதை**
(இரண்டு பாகங்கள்)
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு





**சிந்து முதல் கங்கை வரை**
(சிம்மசேனாபதி) ஆராய்ச்சி நாவல்
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: மாஜினி





**மனித சமுதாயம்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு





**ஊர்சுற்றிப் புராணம்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு





**இஸ்லாமியத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**இந்துத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**ஐரோப்பியத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**விஞ்ஞான லோகாயத வாதம்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு




**பௌத்தத் தத்துவ இயல்**
ராகுல் சாங்கிருத்யாயன்
தமிழில்: ஏ.ஜி.எத்திராஜுலு, ஆர்.பார்த்தசாரதி



# மதவெறி பாசிசத்திற்கு எதிரான "உரிமைக்குரல்"

எல்லை சிவக்குமார்

**தே**சத்துரோகம் குற்றம் சாட்டப்பட்டு தில்லி திகார் சிறையில் அடைக்கப்பட்டதால், தேசத்தின் ஒட்டுமொத்த பார்வையையும் 2015-ஆம் ஆண்டில் தன்பக்கம் திருப்பியவர் தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் தலைவர் தோழர். கன்னையாகுமார்.

பீகார் மாநிலத்தின் மிக பின்தங்கிய ஒரு கிராமத்தில், ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, தில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் மாணவர் தலைவராக உயர்ந்து, இந்த நாடு எமது, இந்த நாட்டுக்கு தியாகங்கள் செய்தவர்கள் நாங்கள். இந்த நாட்டின் பெரும்பான்மை ஏழைகளின் நல் வாழ்விற்கு போராடுபவர்கள் நாங்கள். எங்களுக்கு மக்கள் சேவையே வழிபாடு. நாங்கள் அரசியல் சாசனத்தை உருவாக்கிய பாபா சாகிப்பை மதிப் பவர்கள். அரசியல் சாசனத்தை மாற்றத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ்.ஐ எதிர்ப்பவர்கள், மனு நீதி உழைக்கும் மக்களுக்கு எதிரான உயர்ஜாதி நீதி, மனு பாது காக்கும் சாதிய முறையை எதிர்ப்பவர்கள் நாங்கள் என்று பிரகடனபடுத்தி கொண்டே ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. மதவெறிக் கும்பலுக்கு எதிராக நாட்டின் புகழ்பெற்ற ஜே.என்.யு. கல்வி நிறுவனத்தில் துணிச்சலுடன் போராடியதால் தேசத் துரோகி எனக் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர் தோழர். கன்னையாகுமார்.

பொய்வழக்கு தொடுத்து, சிறையில் அடைப் பதன் மூலம் கன்னையாகுமார் போன்றவர்களின் எதிர்ப்பு குரலை ஒடுக்கி விடலாம் என்று கனவுகண்ட பி.ஜே.பிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தி யதுடன் பெரும் எதிர்ப்பலையையும் உருவாக்கியது.

நீதிமன்றம் ஜாமீன் அளிக்க முன்வரும்பொழுதும் தன் மீதும், பிற மாணவர்கள் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விலக்கிக் கொள்ளாவிட்டால் நான் பெயிலில் போவதை ஏற்கமாட்டேன் என்று துணிச்சலுடன் திகார் சிறைக்குச் சென்றவர்தான் கன்னையாகுமார்.

சிறைச்சாலையைக் கண்டு அஞ்சவில்லை சிறையே வீடாக, சிறையே ஒரு கதைப் பெட்டக மாக, சியைறே ஒரு கல்விக் கூடமாக தனக்கு இருந்தது என்று கன்னையாகுமார் குறிப்பிடுகின்ற வரிகளை படிக்கின்ற பொழுது

**“மாங்குயில் கூவிடும்**
**பூஞ்சோலை - நமை**
**மாட்ட நினைக்கும்**
**சிறைச் சாலை”**

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகள்தான் நினைவிற்கு வருகின்றது.

தனது சிறை அனுபவங்களை தினசரி டைரி எழுதத் தொடங்கியது. குறித்து எண்ணங்களை எழுத்துக்களாக வடிப்பது அத்தனை எளிதானதல்ல. இரண்டு வகை மாம்பழங்களின் சுவையை எப்படி எழுதிக் காட்ட முடியும்? எனினும் என் அனுபவங் களை எழுதுவது நல்லது எனக் கருதினேன்.

அந்தச் சிந்தனையின் விளைவாக உருவானது தான் இந்நூல். 36 தலைப்புகளில் 130 பக்கங்களில் வெளிவந்துள்ள இந்த நூலினை ஒரு சுய வரலாற்று நூல் என்று வரையறுத்துவிட முடியாது.

இருநூலில் கம்யூனிஸ்ட் இயக்கம், உலகமய தாக்கம், ஏழைகளின் வாழ்க்கை நிலை, அரசியல், சமூக அக்கறை, கல்வி நிலை எனப் பல்வேறு விஷயங்கள் குறித்து மிக நுட்பமாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மொழிநடை, சொல் ஆளுமை, மேற்கோள்கள் போன்றவைகள் அவரது பரந்த வாசிப்பு அனுபவம், அரசியலறிவு, தெளிந்த அரசியல் பார்வை ஆகியவைகளை நமக்கு உணர்த்து வதுடன், புதிய பல விவாதங்களையும் சிந்தனை களையும் இந்த நூல் படிப்பவர்களுக்கு எழுப்புகிறது.

27 வயதிற்குட்பட்ட ஒரு மாணவன் எழுதியுள்ள முதல் நூல் இது என்று அறியும் பொழுது

**“உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்**
**வாக்கினிலே ஒளி உண்டாகும்”**

என்ற பாரதியின் கவிதைவரிகள் நினைவுக்கு வருகிறது.

இத்தகைய உண்மை ஒளி அவரது உள்ளத்தில் சுடர்விட்டு பிரகாசிக்கக் காரணம் எது? தூண்டுகோல் எது? என்ற கேள்விகளுக்கான விடை இதோ...

நான் பீகாரில் அடிக்கடி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் செல்வேன். அங்கு ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் வாசகர் வட்டம் கூடும். ஏதாவது புத்தகம் குறித்து விவாதிப்பார்கள். நான் அமைதியாக இருந்து அவர்கள் பேசுவதைக் கேட்பேன். ஒருமுறை லெனினின் ஏகாதிபத்தியம் - முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் என்னும் நூலைப் பற்றி காரசாரமாக விவாதித்தார்கள். எனக்கு எதுவும் புரியவில்லை. பின் ஒரு நண்பர் முதலில் இவை பற்றிக் கேட்டு புரிந்து கொள்ள முடியவில்லை என்று கவலைப்படாதே, சில அடிப் படையான எளிய நூல்களை. படிப் பின் இந்தத் தத்துவம் பற்றி உனக்குத் தெளிவு பிறக்கும். இவற்றை புரிந்துகொள்ளாமல். சமூகத்தைப் புரிந்து கொள்ளவும், மாற்றவும் முடியாது. நாம் சமூக மாற்றத்திற்கான புரட்சியாளர்கள் என்று கூறி உற்சாகமூட்டினார்.

இதனால் நாம் கைவிட்ட இலக்கியம் பற்றிய எனது ஆர்வம் மீண்டும் உண்டானது. சமூக விஞ்ஞானம் படிக்க வேண்டுமென்ற ஆர்வம் உண்டானது. எனவே புதிது புதிதாக நாவல், கவிதைகள், வரலாறு, அரசியல் பற்றிய நூல்களை தேடிப் படிக்க ஆரம்பித்தேன்.

ஆக, கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம்தான் பயிற்சிக் கூடமாக இருந்து பயிற்சியளித்துள்ளது என்ற செய்திகளைப் படிக்கின்ற பொழுது நாடு முழுவதும் ஏராளமாக உள்ள கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்கள் ஏன் இத்தகைய பயிற்சிக் கூடங் களாக மாறி எண்ணற்ற கன்னையாகுமார்களை உருவாக்கக் கூடாது என்ற கேள்வியை எழுப்புகிறது. இக்கேள்வியை பரிசீலிப்பதும், மாற்றத்தை உருவாக்க வேண்டியதும் இன்றைய தேவை என்பதை கம்யூனிஸ்ட் கட்சி உணர்ந்து செயல்வடிவம் கொடுப்பது உடனடி கடமையாகும் ஒன்று...

எதையும் கேள்விகேள்! என்று எனக்குச் சொல்லித்தந்தனர். கேள்வி கேட்ட நான் இடதுசாரி என அழைக்கப்பட்டேன். போராடுவதற்குப் படி, மாற்றங்கள் கொண்டுவரப்படி என்று மாணவர் பெருமன்றத்தில் கற்றுத்தந்தனர். மாணவர் மன்றத்தை பலப்படுத்துவதன் மூலமே சமூகத்திற்கு உதவ முடியும். பலவீனமானவர்களுக்கும் வலுவான அமைப்பு தேவை என்பதை உணர்ந்தேன் என்கிறார் கன்னையாகுமார்.

தான் சமூகத்திற்காகப் போராட வேண்டும் என்று முடிவு செய்தது குறித்து கன்னையாகுமார் சொல்வதைக் கேட்போம்.


“நான் படித்தவன் என்ற மமதையுடன் சமூக கடமைகளை ஒதுக்கிச் செல்வது எனக்கே ஆபத்தாக முடியும். நான் சமூகத்திற்கு எதைத் தருகிறேனோ, அதையே சமூகத்திடமிருந்து பெற முடியும். அநீதிகள் பிறருக்கு நடப்பதைக் கண்டு, எனக்கு நடக்கவில்லை என்று விலகிப் போகிறவன் பாதிக்கப்படும் போது சமூகம் அவனுக்கு துணை வராது. சமூகத்திற்கு உதவுபவனுக்கு சமூகம் உதவும். நான் சமூகப் போராளியாவதன் மூலமே நான் சமுதாயத்தில் வாழ முடியும் என்று முடிவு செய்தேன்”

எத்தகைய ஒரு தீர்க்க தரிசனமான சிந்தனை இது!

கம்யூனிஸ்ட் கட்சியுடன் எனது தொடர்பு நாளுக்குநாள் வளர்ந்து வந்தது. எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் உறவு வளர்ந்தது. இந்தியாவில் கம்யூனிசம் எப்படி வெற்றி பெறமுடியும் என்பது பற்றி விவாதித்தோம். நான் மாணவர் பெரு மன்றத்தில் தீவிரமாக பங்கேற்று பணியாற்றத் தொடங்கினேன். இந்திய அரசியல் பற்றியும் கற்றுக்கொள்ளத் துவங்கினேன் என்கிறார்.

“அரசியல்” குறித்து அவரது புரிதல்களையும், கருத்துக்களையும் காண்போம்!

அரசியல் என்பது எளிதானதல்ல. சவால் களையும் துயரங்களையும் ஏற்றுத்தான் முன்னேற முடியும். நிழலின் அருமை வெய்யிலில் தெரியு


**பீகாரிலிருந்து திகார் வரை**

கன்னையா குமார்

**தமிழில் : வெ.ஜீவானந்தம்**

*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*

விலை : ₹ 110/-

மென்பார் ப்ரேம்சந்த். பசியை அறியாதவன் உணவின் சுவையை ரசிக்க முடியாது. எதையும் சிரமப்பட்டு அடையும் போதே அதன் அருமை புரியும் என்பார்.

பலர் குறிப்பாக படித்த, மத்தியதர வர்க்கத்தினர் தாங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள். அரசியல் தங்களுக்கு தேவையில்லை என்று சொல்வார்கள். அதுவும் ஒருவிதமான அரசியல் தான். அத்தகையப் போக்குகளுக்கான விடை இதோ.

அரசியல் எதிலும் உள்ளது. அரசியலின்றி எதுவும் இல்லை நான் அரசியலுக்கு அப்பாற்பட்டவன். எனக்கு அரசியல் தேவையில்லை என்று எவரும் தப்பிவிட முடியாது. உலகில் அரசியல் சாராதது எதுவுமில்லை. எவரும் அரசியலிருந்து தப்பிவிட முடியாது என்று அரசியலின் வலிமையைக் குறிப்பிடுகின்றார்.

அரசியல் வியாபாரமாகிவிட்டது என்பது இன்றைக்கு பொதுவான குற்றச்சாட்டு. வியாபாரத் திற்கும் அரசியலுக்கும் என்ன வேறுபாடு என்ற கேள்வியை எழுப்பி பொருட்களைக் கொடுத்து லாபம் சம்பாதித்தால் வியாபாரம்: எதையும் தராமல் கோடிக்கணக்கில் சேர்த்தால் அது அரசியல் என்று பதிலளித்து சிந்தனையைத் தூண்டுகின்ற கருத்தினை பதிவு செய்துள்ளார்.

**ஏழைகள் குறித்து**

ஏழை மக்களின் துயரங்கள் தீர்க்கப்பட வேண்டும். வறுமை ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் சமூக மாற்றத்தை விரும்புகின்ற ஒவ்வொருவரின் கனவாக இருக்கும். ஏழைகள் குறித்த அவரது ஏக்கம் நிறைந்த சில வரிகள் இதோ...

- ஏழைகளுக்கு ஆசையும், கனவும் ஒரு கரை. நடைமுறை வாழ்க்கை எட்டமுடியாத மறுகரை.
- ஏழைகள் தமது சொந்த சமூகத்தில் கூட அன்னியர்கள்தான்.
- மதம் கூட ஏழைகளை ஏற்பதில்லை. மதம் பணக்காரர்களுக்கானது. எனவே நான் மதத்தை வெறுக்கத் துவங்கினேன்.
- "ஏழைகளையெல்லாம் திருடர்கள் போல் சந்தேகப்படும் மனநிலை நம் சமூகத்தில் உள்ளது. வறுமை ஏன் உண்டானது? யாரோ திருடுவதால் ஏமாற்றுவதால் பலர் ஏழைகளாக்கப்படுகின்றனர். உழைப்பின் பலன் உழைப்பவர்களுக்குக் கிடைக்காத தாலே ஏழைகள் உருவாகிறார்கள். சுரண்டி யவர்கள் ஏழைகளை குற்றவாளிகள் போல் பார்ப்பது ஈயத்தைப் பார்த்து பித்தளை சிரிப்பது போல் உள்ளது" என்கிறார்.

தோழர் கன்னையாகுமாரின் இந்த வரிகளைப் படிக்கின்ற பொழுது

**"மாடா உழைச்சவன் வீட்டினிலே - பசி**
**வந்திடக் காரணம் என்ன மச்சான்?**
**அவன் தேடியச் செல்வங்கள் சீமான் வீட்டினிலேயே**
**சேர்ந்ததினால் வந்த தொல்லையடி"**

என்ற பட்டுக்கோட்டையின் பாடல்வரிகள் எதிரொலிப்பதை உணர முடியும்.

முதலில் தாஜ்மகாலினைப் பார்த்த நான் அதன் அழகை பிரமாண்டத்தைப் பார்த்து வியந்து பாராட்டினேன். ஆனால் இப்போது அதன் உருவாக்கத்திற்கு உழைத்தவர்களின் வியர்வையும், செத்தவர்களின் குடும்பத்தின் துயரமும்தான் தெரிகின்றது என்ற வரிகள் எவ்வளவு ஆழமான பொருள் பதிந்தது.

**கம்யூனிஸ்ட் கட்சி குறித்து**

கம்யூனிஸ்ட் கட்சியின் தாக்கத்தால் எங்கள் கிராமம் முற்போக்குச் சிந்தனை கொண்டதாக மாறியிருந்தது. கிராம இளைஞர்கள் விளையாட்டு, உடல்நலம் குறித்து மிகுந்த அக்கறைகொண்டு இருந்தனர். நூலகத்தில் வாசிப்போர் கூட்டம் இருந்தது. கிராமத்தின் பழமைவாதம் கேள்விக் குள்ளானது. முற்போக்கு இளைஞர்கள் சாதி மறுப்பு எண்ணிக்கை கொண்டவர்களாக கலப்புமணம், விதவைமணம் போன்றவற்றை ஏற்க முன்வந்தனர். மூடநம்பிக்கைகள், அறிவியல் பார்வையால் எதிர் கொள்ளப்பட்டன. சாதி வேறுபாடுகளை, தீண்டா மையை எதிர்த்தனர் என்று பெருமிதத்துடன் பதிவு செய்கின்றார்.

உலகமய கொள்கைகளின் தாக்கத்தால் 2000-ம் ஆண்டின் தொடக்கத்தில் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்து உலகமயத்தின் அசுர அலைகள் இடதுசாரி இலக்கங்களை சிதைத்தன. கடந்த காலத்தின் தொன்மை மரபுச் சின்னங்களைத் தகர்த்தன. பழைய தொழிற்சாலைகள் மூடப்பட்டன. தொழிற்சங்கங்கள் வலுவிழந்து நொறுங்கின. கட்சியின் கிராம அமைப்புகள் செயலற்றுப் போயின. புதிய அரசியல் உருவானது. பணமும், வலிமையும்

முதன்மை பெற்றன. இந்தச் சாக்கடை ஓட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஓரம் கட்டப்பட்டது என்கிறார்.

கம்யூனிசத்திற்கும், உலகமயத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை எப்படி நயம்பட எடுத்துரைக்கின்றார் என்பதைப் பார்ப்போம்.

"தினசரி புத்தகங்களையும், நாளிதழ்களையும் படிப்பதற்காக பீகாரில் எனது அறை நண்பர் மணி பூஷன் என்பவர் என்னை ஒரு வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அது ஒரு சிறிய சந்தில் உள்ளது. பிறர் வீட்டிற்கு தினசரி சென்று எப்படிப் படிப்பது என்று கூச்சப்பட்டேன். மணிபூஷன் அது வீடல்ல கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் அங்கு நிறைய செய்தித்தாள்கள், புத்தகங்கள் இருக்கும் யாரும் போய் படிக்கலாம் தடையில்லை என்றார்."

இதன் மூலம் கம்யூனிசம் என்பது அனைவருக்குமானது தேவையானவர்கள் தேவையானதைப் பகிர்ந்துகொள்ளலாம் என்ற புரிதலோடு அடுத்து வரும் வரிகளைக் காண்போம்.

ஒருமுறை கோடை நாளில் சாலையில் நடந்து கொண்டே இருந்தேன். தாகமெடுத்தது, வழியில் ஒரு வங்கியைப் பார்த்தேன். உள்ளே போய் பீப்பாயிலிருந்து தண்ணீர் எடுத்து குடித்தபொழுது, காவலாளி வந்து இது வங்கி வாடிக்கையாளர்களுக்கு மட்டும் தான் என்று விரட்டினார். இதுதான் உலகமயம். பயனற்ற எவருக்கும் உதவாதே.

கம்யூனிஸ்ட் கட்சிகள் குறித்து அவர் முன் வைத்துள்ள விமர்சனத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சிகளில் பிளவு என்பது, தனிநபர்களின் விருப்பு, வெறுப்பு காரணமாக நிகழ்வது வேதனை தருவதாக இருந்தது. கட்சிக்குள் நடக்கும் அதிகாரப் போட்டியால் கட்சி பிளவு படுவது நாட்டுக்கே பெரும் இழப்பாகின்றது நாம் ஜனநாயகம் பற்றிப் பெரிதாகப் பேசினாலும். நாம் கட்சிக்குள் முடிவெடுக்கும் போது ஜனநாயக நெறிகளை மதிப்பதில்லை என்பது வேதனை தருகிறது.

### மதவெறி பாசிசத்திற்கு எதிரான உரிமைக்குரல்

நாம் மனுவாத, பிராமணிய, சாதி, மத, பண்பாட்டு வேறுபாடுகளை அழிக்கவே பாடுபடுகின்றோம். அவர்களின் பண்பாடு பற்றிய விளக்கம் நம்மை ஒதுக்கியது. அவர்கள் ஹிட்லரின் பக்தர்கள். நாம் மார்க்சின் வழிநடப்பவர்கள். நாம் அம்பேத்காரை போற்றுகின்றோம். அவர்கள் கோல்வால்கரைத் துதிக்கின்றார்கள். அவர்கள் மத நல்லிணக்கத்தை விரும்பவில்லை. மத மோதலே அவர்கள் இருப்புக்காக முக்கியத் தேவை. அவர்கள் பிரிட்டிஷ் கைக் கூலிகளாக வாழ்ந்தவர்கள்.

இந்த நாடு எப்போதும் மேல் சாதியினருடையதாக இருந்ததில்லை. இனி எப்போதும் அப்படி மாறாது. பட்டினியில் வாடும் ஏழைகள் பற்றிக் கவலைப்படாத நாடு எமதல்ல. எமது நாடு ஏழைகளின் நாடு. உழைப்பவரின் நாடு.

பாசிசம் வெல்லுமானால் இந்த நாட்டில் ஜனநாயகம் கொல்லப்படும். சுதந்திரம் ஊடகங்களின் வாயடைக்கப்படும். செய்தித்தாள்கள் சென்சார் செய்யப்பட்டே அச்சிடப்படும். அவசரக்கால தற்காலிக, கொடுமைகள் மீண்டும் நிகழ அனுமதிக்க மாட்டோம். மதவாதம், சாதிவாதம் மக்களைப் பிரிப்பன. அவற்றை வளரவிட மாட்டோம். நம் வேறுபாடுகளை விஞ்சி நாம் ஒன்றுபடுவதன் மூலமே நமது உரிமைகளை அரசியலமைப்பு சாசன உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

இதுவே தோழர். கன்னையாகுமார் இந்நூலின் மூலமாக மதவெறி பாசிசத்திற்கு எதிராக எழுப்புகின்ற உரிமைக் குரல். அந்த உரிமைக் குரலை ஓங்கி ஒலித்து பாசிசத்தை வேரறுப்பது நமது கடமையாகும்.

இதுவே இந்நூல் நமக்கு கற்பிக்கும் பாடம்.

### மொழி பெயர்ப்பாளருக்கு பாராட்டு

கன்னையாகுமார் ஆங்கிலத்தில் எழுதியுள்ள இந்த நூலினை ஈரோடு மருத்துவர் வெ. ஜீவானந்தம் அதே உணர்ச்சிப் பெருக்குடன் மொழி பெயர்த்துள்ளார். பல நூல்களை மொழிபெயர்த்துள்ள இவருக்கு இந்நூல் மேலும் பெருமை சேர்க்கிறது.

உன் பெயர் என்ன? கன்னையாகுமார் என்ற முதல்வரியில் தொடங்கி போலிகளின் முக மூடிகள் கிழித்தெறியப்படும் வரை, புதிய இந்தியா உருவாகும் வரை இக்குரல்கள் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் தொடர்ந்து ஒலிக்கும் என்ற வரிகளுடன் முடிகின்ற இரு நூலினை வாசிக்கின்ற பொழுது கன்னையாகுமார் நம் அருகிலிருந்து நம்முடன் உரையாடுவது போன்ற உணர்வினை ஏற்படுத்துகின்றது. ஆம் இதுதான் இருநூலின் மகத்துவம். இந்த நூலினை வெளியிட்ட என்.சி.பி.எச் நிறுவனத்திற்கு வாழ்த்துக்கள். ●



# அரியதொரு ஆவணம்

பிரசன்னா கார்த்திகேயன்


'தமிழால் மருத்துவக்கல்வி முடியும்' என்றொரு அருமையான நூல் அண்மையில் டாக்டர் சு.நரேந்திரன் அவர்களால் எழுதப்பெற்று நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்டுள்ளது, தமிழ் வழி மருத்துவக் கல்வி முடியுமா என்று சந்தேகப் படும் அறிஞர்களுக்கும், மருத்துவர்களுக்கும் 'முடியும்' என்று திட்டவட்டமாகப் பதில் சொல்வது போல நூலின் தலைப்பு அமைந்துள்ளது. இந்நூல் 197 பக்கங் களில் ஐந்து பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுச் செவ்வனே வடிவமைக்கப்பட்டுள்ளது. 1. கலைச் சொல்லாக்க நெறிமுறைகள், 2. மருத்துவப் பாட நூல் உருவாக்கம், 3. மருத்துவத்தமிழ் முன்னோடிகள், 4. முடிவுரை, 5. பின்னிணைப்பு ஆகிய பெரும் பகுதிகளைப் பொருளடக்கத்தைப் பார்த்தாலே

தெரிந்துகொள்ள முடிகிறது. தமிழ்வழி மருத்துவம் - முடியும் என்ற தலைப்போடு தன்னம்பிக்கையோடு முதல் இயல் தொடங்குகிறது. ஒட்டுமொத்த நூலுக்குப் பாயிரம் போல முதல் இயல் அமைந்துள்ளது. இப் பகுதியில் ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து தமிழகத்தில் மலர்ந்த மருத்துவ அறிவியல் சிந்தனைகள், அவற்றை ஐரோப்பியர்கள் பரப்பிய முறைகள் ஆகியவை குறித்து டாக்டர் நரேந்திரன் அவர்கள் அவருக்கேயுரிய தனித்துவ நடையில் விவரிக்கிறார். வீரமாமுனிவர், சீகன்பால்கு, கிரண்ட்லர், லுட்விக், பெரடிரிக் ஆகியோரின் தமிழ் மருத்துவ வளர்ச்சிக்கான பங்களிப்பு வெகுவாக இங்கு அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. தரங்கம்பாடியில் தமிழர்களைப் போலவே உண்டும் உடுத்தியும் வாழ்ந்த கிரண்டலர் இங்குள்ள ஓலைச்சுவடிகளைத் தேடியலைந்து திரட்டியதோடு ‘அகஸ்தியர் இரண்டாயிரம்’ என்னும் சுவடியைத் தமிழ் மருத்துவர் என்ற தலைப்பில் ஜெர்மன் மொழியில் பெயர்ப்பு செய்தது நமக்குத் தெரியவருகின்றது. இன்னும் இதுபோல எத்தனை பணிகள் எங்கெங்கு நடைபெற்றுள்ளனவோ? ஐரோப்பியர் வழியாகவே மேலை மருத்துவம் தமிழகத்தில் நுழைந்தது என்றும் தொடக்கப் பகுதியில் சுட்டி விளக்குகிறார்.

தமிழ்வழி மருத்துவக் கல்வியில் கலைச் சொல்லாக்கத்தின் தேவை குறித்தும் அவற்றை உருவாக்கிக் கொள்ளும் நெறிமுறைகள் குறித்தும், உருவாக்கிய பிறகு அவற்றை எவ்வாறு தரப்படுத்துவது என்பது குறித்தும் பல்வேறு சான்றுகளைத் தந்து பகுதி இரண்டில் விரிவாக விளக்கியுள்ளார். சான்றுகள் பெரும்பாலும் மருத்துவத் துறையில் பயன்படுத்தப் படும் சான்றுகளே. ‘இதயம்’ என்ற சொல் பெரு வழக்கிலுள்ளது. ‘நெஞ்சாங்குலை’ என்ற தூய சொல் கால்கொள்ளவில்லை. ‘Heart’ என்பதற்கு இதயம், இருதயம், மார், நெஞ்சு என்ற சொற்கள் பயன்படு கின்றன. இதயம் என்ற பெருவழக்குச் சொல்லையே தேரலாம். இருதயம் நெருடலானது ‘heart attack’ என்னும் போது மாரடைப்பையும் ‘heart burn’ என்னும் போது நெஞ்செரிச்சலையும் பயன்படுத்தலாம் என்று ஓரிடத்தில் விளக்குகிறார் (ப. 59). இவ்விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் பொருத்தமாகவும் உள்ளது. பலகாலும் தமிழில் மருத்துவக் கலைச் சொற்களை உச்சரித்ததால் பெற்ற அனுபவத்தின் வெளிப்பாடேயாகும் இது. ‘மருத்துவர்கள் கூச்சப் பட்டால் நோய் குணமாகாது. சொல் ஆட்சியில் கூச்சப்பட்டால் பொருள் விளங்காது’ என்றும் ஓரிடத்தில் கூறுகிறார். சொல் தேர்வு குறித்து டாக்டர் நரேந்திரன் அவர்கள் தருகின்ற நெறிமுறைகளைப் பிற துறைகளில் கலைச்சொல் படைக்கின்ற அறிஞர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் கலைச் சொல் வழக்கில் இருமொழி வழக்கு இருந்தே தீரும் என்பது டாக்டரின் நம்பிக்கை (ப. 72). தேவைக் கேற்ப கிரந்த எழுத்துக்களையும் சர்வதேசச் சொற் களையும் பிறமொழிச் சொற்களையும் எடுத்துக் கொண்டு தூசு படிந்த தமிழை மாசு படியாது விளங்குமாறு செய்ய வேண்டும் என்று ஓரிடத்தில் கூறுகின்றார் (ப. 90).

நமது மொழி வழியாகப் பிற பாடங்களைக் கற்பிப்பதற்கு முன்தேவையாக அமைவது பாடநூல் உருவாக்கம். அறிவியல், மருத்துவம் தொடர்பான நூல்களையும் கட்டுரைகளையும் எழுதும்போது சர்வதேச சொற்கள், சமன்பாடு, வாய்பாடு, குறியீடு களை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இம்முறையே உலக அளவில் ஏனைய மொழிகளிலும் எடுத்தாளப்படுகிறது என்று வழிகாட்டுதல்களைக் கொடுத்துள்ளார் (ப. 96). இப் பகுதியில் பிரெஞ்சு-இங்கிலீஷ்-தமிழ் சம்பாஷணைச் சுருக்கம் (வைத்தியர்களின் உபயோகத்திற்காக) என்றொரு நூலினை டாக்டர் அறிமுகப்படுத்துகிறார். இந்நூல் 1904 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. த பால் கோல்சின் என்ற பிரெஞ்சு சுகாதார அதிகாரியால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் மருத்துவமனைக்கு வருகிற நோயாளிகளோடு எவ்வாறு மருத்துவர்கள் நோய்கள், மருத்துவம் குறித்து தமிழில் உரையாட வேண்டும் என்பதனைக் கற்பிக்கும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளது, இந்நூலை மாதிரியாகக் கொண்டு தற்காலத்திலும் உரையாடல் நூல்கள் தயாரிக்கலாம். செய்முறை-சோதனைச் சாலைகளில் மருத்துவர்-மாணவர்கள் உரையாடல் நிகழ்த்த பாடங்கள் தயாரித்தால்-மேற்கண்ட நூலினை மாதிரியாகக் கொள்ளலாம்.

அரிய நூல்களைத் தேடித் திரட்டி அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் டாக்டரின் முயற்சி மிகவும் பாராட்டிற்குரியது. மருத்துவ இதழ்கள் குறித்த ஓர் வரலாற்று ரீதியான விவரணையும் விளக்கமும் இப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. விடுதலைக்கு முன்பு வந்த மருத்துவ இதழ்கள், சிறுவர்களுக்கான அறிவியல், சுகாதார இதழ்கள் ஆகியவற்றையும் டாக்டர் அறிமுகப்படுத்துகிறார்.




**தமிழால் மருத்துவக்கல்வி முடியும்**

**டாக்டர் சு.நரேந்திரன்**

*வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,*
*41- பி, சிட்கோ இண்ட்ஸ்ட்ரியல் எஸ்டேட்*
*அம்பத்தூர், சென்னை - 600 098.*
*தொலைபேசி எண்: 044 - 26359906*
விலை : ₹ 165/-

மூன்றாவது பகுதி மருத்துவத் தமிழ் முன்னோடிகள் என்ற தலைப்பில் உள்ளது. இப் பிரிவில் மேனாட்டறிஞர்களான இரேனியஸ், டாக்டர் சாமுவேல் ஃபிஷ்கிறீன், ம,ஜகந்நாத நாயுடு, டாக்டர் அ.கதிரேசன் ஆகியோரின் அரிய முயற்சிகள் விரிவாக விவரிக்கப்படுகின்றன. இவர்கள் யாவரும் முன்னோர் போல விளங்கிய மருத்துவத் தமிழ் முன்னோடிகளாவர். டாக்டர் சாமுவேல் ஃபிஷ்கிறீன் பணிகள் பற்றி, மருத்துவம், வேதியியல், தாவரவியல் நூல்களை வெளியிட்டவர் எனவும், இவரே தமிழில் முதல் கலைச்சொல் கோட்பாட்டாளர் எனவும், கூறுவது பொருத்தமுடையதாகும் என்று டாக்டர் நரேந்திரன் குறிப்பிடுகிறார். தமிழ்க் கலாச்சாரத்தைச் சற்றேனும் குறைக்காது தமிழர்களிடையே நிலவிய அறிவியல் சார்ந்த சில நடைமுறை மருத்துவங் களையும் இணைத்து மேலை மருத்துவத்தைத் தமிழில் எழுதியதோடு நில்லாமல் மாணவர்களை முதன்முதலில் தமிழ்வழி மேலை மருத்துவம் படிக்க வைத்து மருத்துவராக்கிய பெருமை இந்த அமெரிக்க மருத்துவப் பாதிரியாரையே சாரும் (ப. 127) என்று குறிப்பிடுகிறார். டாக்டர் கிறீன் இலங்கையில் பணி யாற்றியதைப் போலவே தமிழகத்திலும் ம.ஜகந்நாத நாயுடு (1885-1888) என்பவர் மேலை மருத்துவ நூல் களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார். இவர் ஆயுர்வேத மருத்துவ முறைகளை மேலை மருத்துவத் துடன் இணைத்து மருத்துவத்தில் புதுமைகள் பல செய்துள்ள விவரங்களும் இந்நூலின் வழி தெரிய வருகின்றன.


ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கிணங்க டாக்டர் சு.நரேந்திரன் அவர்களின் நூல் தமிழால் மருத்துவக்கல்வி முடியும் என்று கட்டியம் கூறுகிறது. மனமிருந்தால் மார்க்கமுண்டு. தமிழர் மனம் வைத்தால் அனைத்துக் கல்வியையும் தமிழ் மொழியிலேயே தரமுடியும். அனைவருக்கும் தமிழ் மொழியிலேயே வேலை தரமுடியும். ஆங்கிலம் கற்றால்தான் உலக அளவில் வேலைக்குச் செல்லலாம் என்பது மாயை. இதனையும் மக்கள் உணர வேண்டும். இம்மாயையைத் தகர்க்க வேண்டும்.

நூலின் வடிவமைப்பு மிகவும் நேர்த்தியாக உள்ளது. அட்டையிலுள்ள டாக்டர் படம் நூலை கையிலெடுத்துப் பார்க்கத் தூண்டுவதாய் உள்ளது.

இந்நூலினை எழுதுவதற்கு உதவிய நோக்கு நூல்களின் பட்டியல் எங்கும் இடம்பெறவில்லை. தந்திருந்தால் மற்றவர்களுக்கும் மிகவும் பயன்படும். கிறித்தவமும் அறிவியலும் என்றொரு நூலையும் ஏற்கனவே டாக்டர் எழுதி வெளியிட்டுள்ளார். அந்நூலிலுள்ள தகவல்கள் இந்நூலிலும் பயன் கருதி எடுத்தாளப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்.

இந்நூலினைப் படைத்துள்ள டாக்டர் சு.நரேந்திரன் அவர்கள் தம் மருத்துவப் பணியோடு இடையறாது நல்ல பல அறிவியல் - குறிப்பாக மருத்துவ அறிவியல் சார்ந்த நூல்களை எழுதி வருகின்றார். ‘பணியை மாற்றிச் செய்வதே சிறந்த ஓய்வு’ என்னும் கொள்கை யுடையவர். ஓய்வு நேரத்தில் கூடத் தொடர்ந்து நூலாக்கப் பணியில் ஈடுபட்டு வருகின்ற கலைமா மணி. அத்தகைய மாமனிதரின் இன்னொரு படைப் பாக ‘தமிழால் மருத்துவக்கல்வி முடியும்’ என்ற நூல் வந்துள்ளது. டாக்டர் நரேந்திரன் அவர்களின் நூலினை அடியொற்றிப் பல நூல்கள் வரவேண்டும். டாக்டருக்கு நமது பாராட்டுக்கள். ●

# கல்திட்டை அல்லது கல்பதுக்கை



முனைவர் கோ.ஜெயக்குமார்

**வ**ரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்தை தொல்பழங்காலம் எனத் தொல்லியலாளர்கள் அழைக்கின்றனர். ஆனால் தொல்குடிச் சமூக வரலாற்றில் எழுத்துச் சான்றுகள் தோன்றிய காலத்திற்கு முற்பட்ட காலம் என்று குறிப்பிடு கின்றனர். இதனை வரலாற்றுக்கு முந்திய காலம் என்றும் கூறலாம். தொல்பழங்காலம் என்றும் மண்ணியல் காலம் (Geological Age) என்றும் அழைப்பர். இதில் பெரும் பனிப்படர்வு காலமும், கற்காலமும் அடங்கும். தொல்லியலாளர் தொல் பழங்காலத்தில் கிடைக்கின்ற கற்கருவிகளின் தொழில் நுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு நான்கு பெரும் பிரிவு களாகப் பிரித்துள்ளனர். அவை 1. பழைய கற்காலம் (Paleolithic period), 2. நுண்கற்காலம் (Microlithic Period), 3. புதிய கற்காலம் (Neolithic Period), 4. பெருங் கற்காலம் (Megalithic Period) என்று அழைக்கின்றனர்.

**1. பழைய கற்காலம்** (Paleolithic period)

தொல்பழங்குடிகள் காடுகளில் இயற்கைச் சூழலோடு தங்களின் வாழ்வியலை அமைத்துக் கொண்டனர். அவர்களின் உணவுத் தேவைக்காக காட்டில் இருக்கும் விலங்குகளை வேட்டை யாடினர். உணவுக்கான முக்கியத்தொழிலாக வேட்டைத்தொழிலை முதன்மையாகக் கொண்டனர். வேட்டையாடுவதற்கான கருவிகளை அவர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்தினர். அதனைப் பழைய கற்காலக் கருவிகள் என அழைக்கின்றோம். பழைய கற்கால மக்கள்

பயன்படுத்திய கருவிகள் தென்னிந்தியாவில் ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டத்தில் கிடைத்துள்ளன. தமிழக வரலாற்றின் தந்தையாகக் கருதப்படும் இராபர்ட் புரூஸ்ட்புட் என்ற புவியியல் ஆய்வாளர் தமிழகத்தில் கொற்றலை ஆற்றங்கரையின் பகுதியில் பழைய கற்காலக் கருவிகளைக் கண்டுபிடித்துள்ளார்.

1882-இல் தருமபுரி மாவட்டத்தில் செய்த ஆய்வின் போது கிருஷ்டிணகிரி மாவட்டத்திலுள்ள வரட்டனப்பள்ளி மலை அடிவாரத்தில் பழைய கற்காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்குக் கைக்கோடாரிகள், சுரண்டிகள், கிழிப்பான்கள், முட்டை வடிவில் உள்ள (ஓவேட்) கருவிகள் கிடைத்துள்ளன. இயற்கையாக அமைந்த மலைகளும் நீர்ச்சுனைகளும் பழைய கற்கால மக்களின் வாழ்விடங்களுக்கு ஏற்றதாக அமைந்துள்ளன. கிருஷ்ணகிரி பகுதியில் சுமார் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது இக்கருவிகளின் மூலம் நம்மால் அறியமுடிகின்றன. வரட்டனப்பள்ளி மலை அடிவாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கருவிகளின் காலம் கி.மு.5,00,000 இருந்து 50,000 எனத் தொல்லியல் துறையினரால் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தக் கருவிகள் கூர்மையாகவும் கரடு முரடாகவும் உள்ளன. இவற்றினை விலங்குகளின் உடல்களைக் குத்திக் கிழிப்பதற்காகப் பயன்படுத்தி இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மல்லச்சந்திரம், சென்னச்சந்திரம், மயிலாடும்பாறை, குருவிநாயினப்பள்ளி, கங்கலேரி ஆகியப் பகுதிகளில் கற்காலக் கருவிகள் காணப்படுகின்றன. மல்லச்சந்திரத்திலிருந்து இரண்டு கல் தொலைவு குறுகலான காட்டுப் பாதையைக் கடந்து சென்றால் மலை உச்சியில் மல்லச்சந்திர ஈமச்சின்னங்கள் உள்ளன. இதற்குப் பல பெயர்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மோரலுப்பாறை என்றும் பாண்டவர் வீடு (மாண்டவர் வீடு என்பது மருவி பாண்டவர் வீடு என வந்திருக்கலாம் என தொல்லியல் ஆய்வாளர் தி. சுப்பிரமணியம் கூறுகிறார்) மோரல் என்ற சொல் அப்பகுதியில் சுனை என்ற பொருளில் வழங்கப்படுகிறது. மலையின் மேற்பகுதியில் சுனை ஒன்று உள்ளது. அதில் எப்பொழுதும் நீர் வற்றாது என்றும் கூறப்படுகிறது. சுனை இருக்கும் மலை என்ற பொருளில் மோரல் பாறை என்று பெயர் வந்திருக்கலாம். பாறை என்றால் இப்பகுதியில் சிறு குன்றைக் குறிப்பதாக உள்ளது.

**2. நுண்கற்காலம்** (Microlithic Period):

இடைக்கற்கால மக்களின் வளர்ச்சியடைந்த நிலையே கடைக்கற்காலம் (Cate stone Age) என்று பெயரிட்டுள்ளனர். கல்லாயுதங்களைச் செய்யும் தொழில் நுட்பத்தில் கடைக்கற்கால மக்கள் புதிய தொழில் நுட்பத்தைக் கையாண்டனர். கடைக் கற்காலத்தைச் சார்ந்த மக்களின் கல்லாயுதங்கள் பர்கூர், கப்பல்வாடி மலையடிவாரங்களில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இக்கால மக்கள் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் என அறியப்படுகிறது. இதைத் தொடர்ந்து நுண்கற்காலம் (Microlithic Period) என்று அழைக்கப்படுகின்ற சிறிய கல்லாயுதங்களைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்துள்ளனர்.

இக்கால மக்கள் பயன்படுத்திய கல்லாயுதங்கள் மயிலாடும்பாறை, பையம்பள்ளி, தொகரப்பள்ளி போன்ற இடங்களில் கிடைக்கின்றன. இவர்கள் குகைகளிலும், குகை போன்ற பாறைகளின் அடிவாரங்களிலும் வாழ்ந்துள்ளனர். காட்டு விலங்குகளின் ஊன், கிழங்கு, காய் மற்றும் கனிவகைகள் இவர்களுடைய உணவாக இருந்துள்ளன. இவர்கள் தங்களுடைய உணவைத்தேடி விலங்குகளுடன் விலங்குகளாக காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்தனர். கல்லாயுதங்களைத் தவிர மற்ற உலோகங்களின் பலன் தெரியாத காலமாக இருந்ததால் இக்காலம் நுண் கற்காலம் என்று அழைக்கப்படுகிறது.

**3. புதியகற்காலம்** (Neolithic Period)

புதிய கற்காலம் மக்களின் வளர்ச்சி நிலை எனலாம். காடுகளில் விலங்குகளைப் போன்று திரிந்த மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்கி வாழ்ந்தனர். கால்நடைகளான ஆடு மற்றும் மாடுகளை வளர்த்தனர். வேட்டையையே தொழிலாகக் கொண்ட நிலையிலிருந்து முன்னேறி வேளாண்மை செய்யவும் முற்பட்டனர். புதியகற்கால மக்கள் பயன்படுத்திய கருவிகள் தொழில்நுட்பத்துடன் காணப்படுகின்றது. வழவழப்பாகவும் கூர்மையானதாகவும் உள்ளது. விலங்குகளைக் கொல்வதற்குக் கூர்மையானதாகவும் கருவியைக் கையில் பிடிப்பதற்கு வசதியாக வழவழப்பானதாகவும் அமைத்துக் கொண்டனர். இக்கருவிகளைத் தொல்லியல் ஆய்வாளர்கள் கைக்கோடாரிகள் (செல்ட்) என்று கூறுகின்றனர். முல்லை நிலப் பகுதியில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. கிருஷ்ணகிரி வட்டத்திற்கு உட்பட்ட தொகரப்பள்ளி, கப்பல்வாடி, கொல்லப்பள்ளி, பருகூர் ஆகிய இடங்களில் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றன.

புதிய கற்காலக் கருவிகள் தயாரிக்கும் தொழில் பட்டறைகள் இருந்துள்ளது. இன்றும் இவற்றின் எச்சங்களைக் காணமுடிகின்றது. கைக்கோடாரி, கல்சுத்தி போன்ற கற்கருவிகள் சேகரிக்கப்பட்டு உள்ளன. கற்கருவிகளில் கைக்கோடாரி நன்கு தேய்க்கப்பட்டு ஒரு முனைக் கூம்பு வடிவிலும் மறு முனை உளி போன்ற அமைப்பிலும் காணப்படுகின்றது. இந்தக் கைக்கோடாரிகளை மரப்பட்டை

களை உரிக்கவும் விலங்குகளின் தோலைக் கிழிக்கவும் பயன்படுத்தியுள்ளனர். மட்பாண்டங்கள் செய்யவும் இவர்கள் அறிந்திருந்தனர். மட்பாண்டங் களின் ஓடுகள் இப்பகுதிகளில் கண்டெடுக்கப் பட்டுள்ளன. பிற இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளைக் கொண்டு புதிய கற்கால மக்கள் சிறுசிறு வீடுகள் கட்டி வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. புதிய கற்கால மக்கள் தமிழகத்தில் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்துள்ளனர்.

**4. பெருங்கற்காலம்** (Megalithic Period)

பெருங்கற் காலம் என்பது மக்கள் பெருங்கல் ஈமச் சின்னங்களைப் பயன்படுத்திய காலத்தைக் குறிக்கும். ஐரோப்பாவில் பெருங்கல் காலம் கி.மு.3200 இல் தொடங்கி கி.மு.1500 வரை நீடித்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இறந்தோரைப் புதைத்த இடத்தில் அல்லது அவர்களது எலும்பு களைப் புதைத்த இடத்தில் சுற்றிலும் பெரிய கற்களைக் கொண்டு சூழப்பட்டிருக்கும் இப்படிப் பட்ட ஈமச்சின்னங்களைப் பெருங்கல் சின்னங்கள் என்று குறிப்பிடுகிறோம். கிரேக்க மொழியில் மெகாஸ் என்றால் பெரிய என்று பொருள். லித்தோஸ் என்றால் கல் என்று பொருள்படும். ஆகவே இச்சொற்களை இணைத்து மெகாலிதிக் (Megalithic) என்ற சொல் உருவாயிற்று. இக்கால ஈமக்குழிகள் பலவித வடிவங்களில் பல்வேறு பெயர்களுடன் காணப்படுகின்றன.

பெரும்பாலான பகுதிகளில் மலையின் மேற் பகுதியில் உள்ள கல்திட்டை வகையைச் சார்ந்த வைகள் பெரும்பாலும் அழிக்கப்பட்டு வெறும் கற் குவியல்களாகக் காட்சி அளிக்கின்றன. குறிப்பாக மல்லச்சந்திரத்தில் உள்ளது போன்று சித்தூர் வட்டம் இருளப் பண்டாவில் கல்திட்டையைச் சுற்றி 15,16 அடி உயரத்தில் அரை வட்டப் பலகைக் கற்கள் நாற் புறமும் நடப்பட்டுள்ளன. இருளப் பண்டாவில் ஒரு கிண்ணத்தில் விளிம்பில் ‘‘எழில்’’ என்னும் பிராமி எழுத்து இருந்ததாக அதை அகழாய்வு செய்த பிரேன்பில் என்பவர் கூறியுள்ளார். பாப்பநத்தம் இருளப்பண்டாவில் புதைகுழியின் அளவு 12’x12’ எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பெரும்பாலானவை சாலை அமைக்கச் சல்லிக் கல்லுக்காக உடைத்தும் பயன்படுத்தியுள்ளனர். இதே போல் கோவிந்த ரெட்டிபாளையம் என்னுமிடத்திலும் மல்ல சமுத்திரம், இருளப்பண்டா ஆகிய இடங்களில் உள்ளது போல் சுற்றிலும் பலகைக்கற்கள் நடப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரிக்கு அருகாமையிலுள்ள சென்னசந்திரம் பகுதியிலும் காணப்படுகின்றன.

மிகப்பழைய கல்திட்டைகள் மேற்கு ஐரோப் பாவில் காணப்படுகின்றன. இவை ஏறத்தாழ 7,000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று கூறுகின்றனர். பொதுவாக இந்திய நிலவியல் அமைப்பில் தமிழகம் பலப் பழமையானப் பகுதிகளைக் கொண்டு உள்ளது. இப்பகுதிகளில் காணப்படும் ஈமச் சின்னங்கள், தொல்லியல் துறையினர் கண்டுபிடித் திருக்கும் பெருங்கற்காலக் கருவிகள், கல்வெட்டுகள், நடுகற்கள், சதிகற்கல், சுவடிகள் போன்ற சாசனங்கள் வரலாற்றை அறியத் துணைபுரிகின்றன. இதுவரை உலக அளவில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட தொல் பொருள்களை ஒப்பிட்டுப்பார்க்கும் போது தமிழின் தொன்மையினை உலகத்திற்கு அடையாளப்படுத்த முடியும்.

கல்திட்டைகள் உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. பெருங்கற்காலப் பண்பாடு உலகின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு காலகட்டங்களில் காணப்படுகிறது. பண்பாட்டுச் சின்னமான கல்திட்டைகளின் காலம் நாட்டுக்கு நாடு அதன் வடிவங்கள் வேறுபடுகின்றன. கல்திட்டை ஒரே பலகைக்கல்லால் அமைக்கப்படாமல் சிற்சில துண்டுகற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. வடபுறம் உள்ள பக்கவாட்டு கல்லும் மூடும் கல்லும் சிதைக்கப்பட்டுள்ளன. மூடுகற்கள் 5 துண்டுகற்களால் மூடப்பட்டுள்ளது.

பெருங்கற்கால நினைவுச் சின்னங்கள், பால்ட்டிக் மற்றும் வட கடற்கரைப் பகுதிகளிலும், ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் நாட்டிற்கு தெற்கே காணப் படுகின்றன. இதுபோன்ற நினைவுச் சின்னங்கள் உலகின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. உலகின் மிகச் செறிவாக அமைந்துள்ள கல்திட்டைகள் கொரியத் தீவக்குறையில் காணப்படுகின்றன. இவை கி.மு முதலாம் ஆயிரமாண்டு காலப் பகுதிகளைச் சேர்ந்தவை. தென்கொரியாவிலும், வடகொரியாவிலும் உள்ள கல்திட்டைகளின் எண்ணிக்கை சுமார் 30,000 ஆகும். இது உலகிலுள்ள மொத்தக் கல்திட்டை களின் எண்ணிக்கையில் ஏறத்தாழ 40% ஆகும். யுனெஸ்கோ உலக பாரம்பரியக் களங்களான கோச்சாங், இவாசுன், காங்வா ஆகிய மூன்று களங்களில் மட்டும் 1000க்கு மேற்பட்ட கல் திட்டைகள் உள்ளன.

வடக்கத்திய வகையைச் சேர்ந்த, கங்வா என்னும் இடத்திலுள்ள கல்திட்டைகள் மேசை போன்ற அமைப்புடையவை. இதிலே முன்னோருக்கான கிரியைகள் நடத்தப்பட்டன. தென்கொரியாவில் உள்ள இது போன்ற கல்திட்டைகளில் மிகப் பெரியது இதுவே இது 2.6 x 7.1 x 5.5 மீட்டர் அளவுகள் கொண்டது. உலகின் பிற பகுதிகளில் கல்திட்டைகள் குறித்த ஆய்வுகள் பெருமளவில் இடம் பெற்றதற்கு மிகப் பிற்பட்ட காலத்திலேயே கொரியாவில் பெருங் கற்காலச் சின்னங்கள் குறித்த ஆய்வுகள் தொடங்கின.

1945க்குப் பின்னரே கொரிய அறிஞர்களால் புதிய ஆய்வுகள் தொடங்கப்பெற்றன. கொரியக் கல்திட்டை களின் உருவவியல் வளர்ச்சி அட்லாண்டிக் ஐரோப்பியக் கல்திட்டைகளிலிருந்தும் வேறுபட்டுத் தனித்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

இந்தியாவிலும் பல பகுதிகளில் கல்திட்டைகள் உண்டு. கேரளாவின் மறையூர் என்னுமிடத்திலிருந்து 7 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அழிஞ்சுவாடு என்னும் சிற்றூருக்கு அண்மையில் கல்திட்டைகள் காணப்படுகின்றன. இக் கல்திட்டைகள் ஐந்து கல் திட்டைகள் கொண்ட கூட்டங்களாக அமைக்கப் பட்டு உள்ளன. ஒவ்வொரு கூட்டமும் ஒரு குடும்பத்துக்கு உரியது எனக் கருதப்படுகின்றது. இப்பகுதியில் இவ்வாறான கூட்டங்கள் நூற்றுக் கணக்கில் காணப்படுகின்றன. இக் கல்திட்டைகள் கனமான கருங்கற்களால் ஆனவை. இப்பகுதி பல நூற்றாண்டுகளாக ஆதிசேரர் எனப்பட்ட இனக்குழு மரபினரின் புதைகுழிகளுக்கான இடமாக இருந்துள்ளது.

கல்பதுக்கை குறித்து அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு போன்றவற்றில் அக்காலத்துப் பதுக் கைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. பாலைநிலத்தின் வழியே செல்லும் வழிப்போக்கர்களைக் கொன்று பொருள் பறிக்கும் மறவர்கள் அவ்வாறு கொல்லப் பட்டோரின் உடல்களின் மீது தழைகளைப் போட்டு மூடியும் கற்களைக் குவித்து மேடு செய்துவைப்பர். பாலைநிலத்தின் வழியாகச் செல்லும் வழியின் ஓரமாகக் காணப்படும் பதுக்கைகள் அச்சம் தரக் கூடியதாக அமைந்திருப்பதை சங்கப்பாடல்கள் விவரிக்கின்றன. நரிகள் மற்றும் காட்டுவிலங்குகள் சிதைக்காமல் இருக்கவும். அதேபோன்று இறந்த சடலங்கள் எழுந்து வரக்கூடும் என்ற நம்பிக்கையில் அதனைத்தவிர்க்க புதைக்கப்பட்ட இடத்தில் கற்களைப் போட்டு மூடும் வழக்கம் இருந்துள்ளது.

கல்திட்டை என்பதை மக்கள் வழக்கில் எப்படி அழைக்கப்படுகிறது என்று பார்த்தால் கொரிய மொழியில் கொயிண்டோல் அதாவது தாங்கப் பட்டகல் என்பது அதன் பொருள். தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளான திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திண்டுக்கல் போன்ற இடங்களில் இறந்தவர் வீடு என்று பொருள் படும்படி மாண்டவர் வீடு என்று அழைத்துள்ளனர். தற்போது மாண்டவர் வீடு என்பது மருவி பாண்டவர் வீடு என்று அழைக்கப்படுவதைக் காணலாம். திருவண்ணா மலை மாவட்டம் ஜவ்வாதுமலையில் குள்ளர்குகை என்று அழைக்கப்படுகிறது. கேரளாவில் இடைக் கற்கால மற்றும் புதிய கற்கால பெருங்கற்கால இடங்கள் காணப்படுகின்றன. பாறைகளைக் குடைந்த குகைகள் (Chenkallara) காணப்படுகிறது இது திருவண்ணாமலை மாவட்டத்தில் காணப்படும் குகைகளைப்போலவே உள்ளன.

பெருங்கற்கால சின்னங்களைப் பின்வருமாறு பார்க்கலாம்,

**உட்கட்டமைப்பு**

1. முதுமக்கள் தாழி (Urn Burial)
2. ஈமப் பேழை (Sarcophagus)

**மேல்கட்டமைப்பு**

3. கல்திட்டை (Dolmonoid Cist) கல்பதுக்கை (Slab Cist)
4. கல்வட்டம் (Cairn Circle)
5. கற்குவை (Cairn heap)
6. குத்துக்கல் (Menhir)
7. தொப்பிக்கல் (Cap Stone) & (Umbrella Stone)

**முதுமக்கள் தாழி** (Urn Burial)

தாழி செய்யப் பயன்படும் மூலப்பொருள் மண். இறந்தவர்களை தாழியில் வைத்து மண்ணில் அடக்கம் செய்தமையால் இப்பெயர் பெற்றது. உடல் செயலிழந்த முதியவர்களின் உடலை இத்தாழிகளில் வைத்து புதைக்கும் வழக்கமும் இருந்துள்ளது. இந்தத் தாழியின் மேல்பகுதி சிறுத்தும் உடல் பகுதியானது பெருத்தும் கீழ்பகுதி குறுகி கூராகவும் எளிமையாகக் கொண்டு செல்லும் வகையில் இருக்கும். களிமண்ணால் செய்து சுட்டபின்பு இதனைப் பயன்படுத்தியுள்ளனர். இறந்தவர்களின் உடலையோ அல்லது எலும்பு களையோ வைத்து மண்ணில் குழிதோண்டிப் புதைத்து விடுவார்கள். பெருங்கற்காலப் பயன் பாட்டில் முதல்வகைப் பயன்பாடு இது.

தமிழகத்தில் முதுமக்கள் தாழிகளில் ஈமச் சின்னங்களே அதிக எண்ணிக்கையில் காணப்படு கின்றன. குறிப்பாக ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வு பலத் தரவுகளை நமக்குக் கொடுத்துள்ள மிக முக்கியமான இடமாகும். 1876 ஆம் ஆண்டில் பெர்லினைச் சேர்ந்த ஜெகர் என்பவர் முதன்முதலில் பார்வையிட்டு ஆதிச்சநல்லூர் முதுமக்கள் தாழிகளைக் கண்டறிந்தார். இங்கு முதுமக்கள் தாழிவகையைச் சேர்ந்த பண்பாடு மட்டுமே நிலவியிருந்ததை உறுதிசெய்தார். தாழிகள் புதையுண்ட இடத்தில் தரைமட்டத்திற்கு மேல் எந்த விதமான தடயமும் இல்லை. ஆனால் வரிசை வரிசையாகத் தாழிகள் புதைக்கப்பட்டிருந்ததை அவர் பதிவுசெய்கிறார்

தமிழகத்தில் மருத நிலப்பகுதிகளான தென் பெண்ணை, காவிரி, வைகை, தாமிரபரணி, உள்ளிட்ட ஆற்றுப்பகுதிகளிலும், நெய்தல் நிலப் பகுதியான காஞ்சிபுரம் பகுதியில் இவ்வழக்கம் காணப்படுகிறது. மருதம், நெய்தல் இரு நிலப் பரப்பும் மண் வளம்மிக்கப் பகுதிகள் என்பதால் இவ்வழக்கம் தோன்றியிருக்க வாய்ப்புள்ளது. இவ் வழக்கத்தைப் பற்றி குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி

வளவனைப்பற்றி ஐயூர்முடவனார் சங்க இலக்கிய நூலான புறநானூற்றில் பாடல் -228 இல் புதைகலன், ஈமத்தாழிகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கிறது.

**ஈமப் பேழை** (Sarco Phagus)

தாழிப்பயன்பாட்டில் இது ஒருவகை. இவை சதுர மற்றும் செவ்வக வடிவிலான பெட்டிவடிவம் என்பதால் பேழை என்று அழைத்தனர். இதனை களிமண்ணால் செய்து நன்கு சுட்டு பயன்படுத்தினர். இதன்மேல் மூடப்படும் மூடியில் விலங்கின் தலைகள் இடம்பெற்று இருக்கும். இவை செவ்வகம் மற்றும் நீள்வட்ட வடிவமான, உள் கட்டமைப்பைக் கொண்டது. ஈமப்பேழையின் அடிப்பகுதியில் இரண்டு அல்லது மூன்று கால்கள் உள்ளது. ஆந்திர மாநிலம் சங்காவரத்தில் ஒரு பேழை ஆட்டின் வடிவில் கிடைக்கப்பெற்றுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம் சானூரிலும் இவ்வகைப் பேழை கிடைத்துள்ளது.

**கல்திட்டை** (Dolmen Cist) **அல்லது கற்பதுக்கை** (Slab Cist)

பெருங்கற்காலப் பண்பாட்டைச் சார்ந்தது. இவ்வகை இறந்தவர்களுக்கான நினைவுச் சின்ன மாகும். பெரிய அளவிலான கருங்கல் பாறைகள் பலகை வடிவில் இருக்கும். பறைகற்கலால் உருவாக்கப் பட்ட சிறிய அளவிலான வீடு போல அதன் அமைப்பு இருக்கும். குறிப்பாக இவ்வகையான கல்திட்டைகள் மலை மற்றும் காட்டுப் பகுதிகளில் உள்ள பாறை களின் மேல் காணப்படும். நன்றாக செதுக்கப்பட்ட கல், ஓரளவிற்கு செதுக்கிய கற்கள், பாறை கற்களைக் கொண்டும் அமைக்கப்பட்டிருக்கும். இடைவெளிப் பகுதிகளில் மண்ணால் பூசப்பட்டாலும் காலப் போக்கில் சிதைந்த நிலையிலேயே காணப்படுகிறது. கல்திட்டைகளில் யாருடையது என்ற விவரங்கள் இல்லை. இடங்களை வைத்து எந்த இனக் குழுவினர் வாழ்ந்தார்கள் என்ற அடிப்படையில் அறியமுடியும்.

பூமிக்கு மேலே அமைந்திருப்பது கல்திட்டை என்று அழைக்கப்படுகிறது. பூமிக்குக் கீழே அடியில் அமைந்திருக்கும் அமைப்பைக் கொண்டது கற்பதுக்கை. கற்களில் கிழக்குப்பக்கம் பார்த்த மாதிரி உள்ளவற்றில் இடுதுளை ஒன்று இடப்பெற்றுள்ளது, மேலே மூடப்படும் கற்களில் சிறிய குழிகள் இடப்பெற்றுள்ளன. இதற்குப் பயன்படுத்திய கற்கள் செம்புரைக்கல் எனப்படுகிறது. இவ்வகையான அமைப்பினை உடைய கற்கள் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் காணப்படுகிறது.

**கல்வட்டம்** (Cairn Circle)

இயற்கையாகக் கிடைக்கும் கற்களைச் சேகரித்து இறந்தவர்களைப் புதைக்கும் இடத்தைச் சுற்றிலும் வட்டமாக வைத்து அடையாளமிட்டனர். இதனையே கல்வட்டம் எனப்பெயரிட்டு அழைத்தனர். இவற்றில் வட்ட வடிவிலான உருண்டையான கற்களைப் புதைத்த இடத்தை மையப்படுத்தி ஈமத்தாழி, ஈமப்பேழை அல்லது கல்லறை போன்றவை அமைக்கப்பட்டிருப்பதை பல பகுதிகளில் காண முடிகிறது கல்வட்ட அமைப்புகள் எதற்காக உருவாக்கப்பட்டது என்று பார்த்தால் புதைக்கப்பட்ட இடத்தை அடையாளப்படுத்தவும், பாதுகாக்கவும் உருவாக்கப்பட்டதை அறியமுடிகிறது. புதுக் கோட்டை மாவட்டத்தில் உருண்டைவடிவிலான கல்வட்டங்கள் தரையின் மேற்பகுதியில் காணப் படுகின்றன. பூமிக்கு அடியில் முதுமக்கள் தாழிகளும் கிடைக்கின்றன. உதாரணத்திற்கு நெடுங்கூர் கல்வட்டம், கொடுமணல் கல்வட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**கற்குவை** (cairn heap)

பெருங்கற்காலத்தில் இறந்தவர்களைப் பூமியில் புதைத்து மூடிவிட்டு அந்த இடத்தை அடையாளப் படுத்த கூம்பு வடிவில் கற்களை அடுக்கி வைப்பது, கற்குவை என்று அழைக்கப்படுகிறது. மனிதர்களால் செயற்கையாக உருவாக்கப்படும் கற்குவியலைத்தான் கற்குவை என்கிறோம். இவ்வகை அதிக அளவில் மேட்டு நிலப்பகுதி, காட்டுப்பகுதி, மலை மற்றும் நீர்வழிகளுக்கு அருகாமையிலும் காணப்படு கின்றன. வட்டவடிவில் கற்பாறைகளின் குவியலைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும். இவ்வகையான நினைவுச்சின்னங்கள் தமிழகத்தில் தருமபுரி மாவட்டம் நல்லாம்பட்டி போன்ற இடங்களில் காணமுடிகிறது.

**குத்துக்கல்** (Menhir) **அல்லது நெடுங்கல்**

குத்துக்கல் என்பது பெரிய அளவில் நிலைக் குத்தாக நாட்டிவைக்கப்படுகின்ற தனிக்கல்லாகும். இவ்வகைக்கல் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே இறந்தவர்களுக்கு அமைக்கப்படும் நினைவுச் சின்னமாக விளங்கியுள்ளது. தற்போது கிடைக்கப்படு வனவற்றில் மிகப்பெரிய குத்துக்கல் பிரான்ஸ் நாட்டில் உள்ள லோக்காமரியாக்கர் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. ஆனால் தற்போது அது பராமரிப்பின்றி சிதலமடைந்துள்ளது. தமிழகத்தில் குத்துக்கல் வழிபாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது. சேலம் அம்மாபேட்டையில் கூச்சிக்கல் முனியப்பன் என்ற பெயரிலும், நெல்லை மாவட்டம் சமூக ரெங்காபுரம் எனும் இடத்தில் குத்துக்கல் மாடசாமி என்றபெயரிலும் வணங்குகிறார்கள்.

இவ்வகையான ஈமச்சின்னத்தின் மேல் உயரமான ஒழுங்கற்றகல் நட்டுவைக்கப்பட்டுள்ளது அதனால் குத்துக்கல் என்றும் மனிதவடிவக்கல் என்றும் அழைக்கப் படுகிறது. இவ்வகையான கற்கள் விழுப்புரம் மாவட்டம் உதயநத்தம், வேலூர் மாவட்டம்

மோட்டூர் போன்ற இடங்களில் காணப்படுகிறது. மலைப்பகுதி என்பதால் அங்குக் கிடைக்கப்பெறும் கற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

**தொப்பிக்கல்** (Cap Stone) **அல்லது குடைக்கல்** (Umbrella Stone)

இவ்வகையான கல் புதைகுழி அமைப்பைக் கொண்டது. தொப்பி போன்ற வடிவிலான கல்லை குழியின் மேல்வைப்பது. இது பார்ப்பதற்கு குடை போன்று இருப்பதால் குடைக்கல் என்றும் தொப்பிக்கல் எனவும் அழைக்கப்படுகிறது. கேரள மாநிலத்தில் மட்டும் காணப்படும் வகையாகும். இப்படிக் கல்திட்டைகளின் வடிவங்களைப் பார்க்க முடிகிறது.

அண்மையில் பேராசிரியர் பக்தவத்சலபாரதி யுடன் திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள பழனிமலைத்தொடருக்குச் சென்றிருந்தேன். அந்த மலைப்பகுதியில் உள்ள கிராமங்களான பாய்ச்சலூர், பட்டியக்காடு, பண்ணைக்காடு, தாண்டிக்குடி, கே.சி.பட்டி, சங்கரன் போத்து முதலான பகுதிகளில் நூற்றுக்கணக்கான கல்திட்டைகள் காணப்படு கின்றன. பாய்ச்சலூர் என்ற இடத்தில் இருந்து பட்டியக்காட்டிற்கு செல்லும் வழியில் சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் கல்திட்டைகள் இடது புறத்தில் ஏராளமாக உள்ளன. அந்தப்பகுதியில் சிதைந்த கற்களை குவியலாக வலது புறத்தில் அடுக்கி வைத்திருப்பதையும் காணமுடிகிறது. அதேபோன்று பட்டியக்காட்டிற்குச் செல்லும் வழியில் ஆற்றுப்பகுதிக்கு அருகேவும் கல்திட்டை களைக் காணமுடிந்தது. சிதறிக்கிடக்கும் இவைகளைப் பாதுகாக்க வேண்டும்.

அகழாய்வு செய்யப்படும் போது குழியில் மேலிருந்து கீழாகக்கிடைக்கும் தொல்பொருட்களில் மேல் மண் அடுக்கில் கிடைப்பவை காலத்தால் பிற்பட்டவை என்றும் அதற்குக் கீழ் உள்ள மண் அடுக்கில் கிடைப்பவை காலத்தால் முற்பட்டவை என்றும் மதிப்பீடு செய்யமுடியும். மட்கலன்களைக் கொண்டு காலத்தை அறியலாம். குறிப்பாக புதுச்சேரியில் உள்ள அரிக்கமேடு என்ற இடத்திலும், இராமநாதபுரத்தில் அழகன்குளம் ஆகிய இடங்களில் கிடைக்கும் ரோமானியப் பானை ஓடுகளின் காலம் கண்டறியப்பட்டுள்ளது. அகழாய்வுகளில் கிடைக்கப் பெறும் எலும்புகள், மண்டை ஓடுகள் இவற்றை வைத்து ஆணா, பெண்ணா அல்லது குழந்தையா என்ற விவரங்களையும் அறியமுடியும்.

தமிழகத்தில் இதுவரை நிகழ்த்தப்பட்ட அகழாய்வு களால் அதன் தொன்மை மற்றும் பண்பாடு, பொருளாதாரம், சமயநிலை, தொழில்நிலை, கால்நடை வளர்ப்பு, உலோகப் பயன்பாடு உள்ளிட்ட அக்கால மக்களின் வாழ்க்கை நிலையை அறிய முடிகிறது. இதுபோன்ற அரிய பொக்கிசங்களைப் பாதுகாக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். 1976 - ஆம் ஆண்டு இந்திராகாந்தி பிரதமராக இருந்த போது, பழங்காலச் சின்னங்களைப் பாதுகாக்க அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் சின்னங் களை அப்பகுதியில் உள்ள அரசுப்பள்ளிகளில் எடுத்து வந்து பாதுகாத்து குழந்தைகளுக்கு வரலாற்றுச் சம்பவங்களைக் கற்பிக்க வேண்டும் என உத்தர விட்டிருந்தார். காலப்போக்கில் இந்த உத்தரவு நடை முறைக்கு வராமலே போனதால் பழங்கால புராதனச் சின்னங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கண்டுபிடிக்கப்பட்ட நிலையிலேயே கிடப்பில் போடப்பட்டுள்ள தொல்பொருள்களை மீட்டெடுக்க அரசு முன்வரவேண்டும்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகமாகக் காணப்படும் தொல் பொருள்களைப் பாதுகாக்க அரசு நிலையான திட்டத்தை உருவாக்க வேண்டும். குறிப்பாக பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் செய்யப்படும் ஆய்வுகள் இது சார்ந்து முன்னெடுக்கப் பட வேண்டும். சமீபகால ஆய்வுகள் இதுபோன்று அழிந்து வரும் தொல்பொருள் குறித்தான ஆய்வுகள் அதிகம் இல்லாதது வருத்தம் தரக்கூடியதாகவே உள்ளது.

தொல்லியல், தமிழர் பண்பாடு மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் பாண்டியராஜன் மாவட்ட வாரியாக தொல்பொருள் குறித்த அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டு இருந்தார். இது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் முழுமையான ஆர்வம் உள்ளவர்கள் அத்துறையில் ஈடுபடுத்தப்படவில்லையோ என்ற சந்தேகம் எழுந் துள்ளது. எனவே அழிந்துவரும் கல்திட்டைகள் போன்ற பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அமைக்கப் பட்ட வரலாற்றுச்சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கானப் பணிகளை அரசு செய்ய வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சான்றாதார நூல்கள்**


1. தமிழக வரலாறு, தொல்பழங்காலம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை-1975.
2. தி.ஸ்ரீ. ஸ்ரீதர், செம்பியன் கண்டியூர் அகழாய்வு அறிக்கை, 2007-2008, தொல்லியல் துறை, சென்னை.
3. கா.ராஜன், தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2004.
4. புறநானூற்றில் பாடல் -228
5. தி.ஸ்ரீ.ஸ்ரீதர், தமிழக அகழாய்வுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை - 2010.
6. V.D.Kirushnasamy, Ancient India, No.5, 1947.